பக்கங்கள்: பதினெட்டு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 25 திங்கட்கிழமை (10.08.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 257

# விடுதலைப் புலிகளுக்கு நவீன ஆயுதங்கள் கிடைத்தமை குறித்து அறியும் வாய்ப்பு

## கே.பியின் கைது மூலம் சாத்தியம் என்கிறார் ஜனாதிபதி

புதுடில்லி, ஒகஸ்ட் 10

விடுதலைப் புலிகளுக்கு மிகப் பெருந்தொகையான நவீன ஆயுதங்கள் எவ்வாறு கிடைத்தன என்ற முக்கியமான விடயத்தை அறியும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. கே.பி. கைது செய்யப்பட்டுள்ளமை அதற்குப் பெரும் உதவியாக அமையும்.

புலிகள் பெருமளவு நவீன ஆயுதங்களை வெளிநாடுகளில் இருந்தும் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஏனைய தரப்புகள் மூலமும் எவ்வாறு பெற்றனர் என்பதனை அறிவதற்கு கே.பியின் (குமரன் பத்ம நாதனின் )கைது உதவும்.

இவ்வாறு நம்பிக்கை தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. (18 ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைக் குண்டுதாரிப் பெண் கொழும்பு நகருக்குள் ஊடுருவல்

பயங்கரவாத தடுப்புப் பிரிவு எச்சரிக்கிறது

கொழும்பு, ஒக. 10

கொழும்பு நகருக்குள் தற்கொலைக் குண்டுதாரியான பெண் ஒருவர் சில தினங்களுக்கு முன்னர் ஊடுருவியுள்ளார்.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் இத்தகவலை வெளியிட்டுள்ளனர்.

அப்துல் சஹலம் பாத்திமா ஜஸ்மின் என்ற பெயருடைய 857835641 V என்ற இலக்க அடையாள அட்டைக்குரிய பெண்

(18 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் அரசுக்கு தேர்தலில் கிடைத்துள்ள வெற்றி ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்கான நீண்ட காலடி

## ஜனாதிபதி மஹிந்த விசேட செய்தி



கொழும்பு, ஒக. 10

நாட்டின் வட பகுதியில் கடந்த முப்பது வருடங்களாக ஜனநாயகம் முடங்கிப் போய் செயலற்றுக் கிடந்தது. ஆனால் அங்கு நடைபெற்ற தேர்தலில் அரசுக்கு கிடைத்துள்ள வெற்றி. இப்போது அங்கு ஜனநாயகம் வேகமாக உயிர்ப்புப் பெற்று வருவதையே எடுத்துக்காட்டுகிறது.

வடக்கில் அரசாங்கத்துக்கு கிடைத்துள்ள வெற்றி சரித்திரப் பிரசித்தி வாய்ந்ததாகும். நாட்டை அபிவிருத்தி செய்யும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கும் வடக்கில் ஜனநாயகத்தை நிலைநிறுத்தும் அதன் முயற்சிகளுக்கு ஆதரவாக நீண்ட கால்டி எடுத்து வைப்பதாக அமைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள விசேட செய்தியில் இப்படிக் குறிப்பிட்டுள்ளார்.

பதுளை, மொனறாகல, யாழ்ப்பாணம்,

(18 ஆம் பக்கம் பார்க்க)

## சவூதியிலிருந்து திரும்பிய மட்டக்களப்பை சேர்ந்த இருவருக்கு பன்றிக் காய்ச்சல்

கொழும்பு, ஒக. 10

மட்டக்களப்பு மாவட்டத்தில் பன்றிக் காய்ச்சல் நோயாளிகள் இருவர் இனங்காணப்பட்டுள்ளனர். களுவாஞ்சிக்குடி எருவில் பிரதேசத்தைச் சேர்ந்த இவர்கள் தொழில் வாய்ப்புகளுக்காக சவூதி அரேபியாவிற்குச் சென்று கடந்த வாரம் இலங்கைக்குத் திரும்பியவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களுக்கு இந்த ஏ.எச்.ஐ.எம். 1 என்னும் பன்றிக் காய்ச்சல் தொற்று இருப்பதாகப் பரிசோதனைகளின் மூலம் தெரியவந்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரின் புதிய மேயர் யார்? இரண்டொரு நாள்களில் தெரியும்

யாழ்ப்பாணம், ஒக. 10

யாழ்ப்பாண மாநகர சபையின் புதிய மேயர் யார் என்பது ஓரிரு தினங்களில் அறிவிக்கப்படும் என்று ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

(18 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகர சபையின் புதிய தலைவர்; தமிழரசுக் கட்சி விரைவில் முடிவு செய்யும்

வவுனியா, ஒக 10

வவுனியா நகர சபை நிர்வாகத்தைக் கைப்பற்றியுள்ள தமிழரசுக்கட்சியின் தலைமைப் பீடம் புதிய சபையின் தலைவர் குறித்து விரைவில் முடிவு செய்யும் என்று கட்சியின் வவுனியா கிளையினர் தெரிவித்தனர்.

தேர்தலில் முதன்மை வேட்பாளராக நிறுத்தப்பட்ட எஸ்.என்.ஜி. நாதனை விட வேறு இரு உறுப்பினர்கள் கூடுதல் விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளனர். கூடுதல் வாக்குப் பெற்ற இளம் உறுப்பினராக முத்துச்சாமி முகுந்ததரனை தலைவராக நியமிப்பதா அல்லது வேறு ஒருவரை நியமிப்பதா என்பது குறித்து கட்சியின் தலைமைப்பீடமே முடிவு செய்யும். விரைவில் வவுனியாவுக்கு வருகை தரவிருக்கும் தலைமைப் பீடத் தலைவர்கள்

(18 ஆம் பக்கம் பார்க்க)

# ஊவாவில் மோசடிகள் மூலம் அரசு வெற்றி; அதனால் எமக்கு ஏற்பட்டது தோல்வி அல்ல!

## ஐ.தே.கட்சியின் செயலாளர் விவரிப்பு

கொழும்பு, ஒக. 10

நடந்து முடிந்த ஊவா மற்றும் வடக்குத் தேர்தல்களில் பாரிய மோசடிகளில் ஈடுபட்டே அரசு வெற்றிபெற்றது என்றும் இதில் தனக்கு ஏற்பட்ட தோல்வி ஒரு தோல்வியல்ல என்றும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கவின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்கவே இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

(18 ஆம் பக்கம் பார்க்க)

கல்விச்சுடர்
உள்ளே
ஜி.சி.ஈ. உயர்தர பரீட்சைக்கான
உயிரியல், பொருளியல் வினாத்தாள்கள்

# மலையகத் தமிழர்களின் வாக்குரிமையைப் பறிக்கும் சதி தொடர்வதாகக் கண்காணிப்புக்குழு புட்டு வைக்கிறது

## அடையாள அட்டை வழங்கப்படாததால் யாழ்., வவுனியா தேர்தல்களிலும் பாதிப்பு

கொழும்பு, ஒக.10

மலையகத் தமிழ் மக்களுக்கு தேசிய அடையாள அட்டைகளை வழங்காமல், அவர்களின் வாக்குரிமைகளைப் பறித் தெடுக்கும் சதி இந்நாட்டில் தொடர்ந்து அரங்கேறிவருகின்றது என்று தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் 'கபே' அமைப்புத் தெரிவித்துள்ளது.

ஊவா மாகாண சபைத் தேர்தலில் ஆயிரக்கணககான தோட்டப்புற மக்கள் தேசிய அடையாள அட்டைகள் இன்மையால் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை என்றும் அவர்களிடம் இருந்த தற்காலிக அடையாள அட்டைகள் வாக்களிப்பு நிலையங்களில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றும் 'கபே' மேலும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பின் ஊடகப்பேச்சாளர் கீர்த்தி தென்னக்கோன் கூறியவை வருமாறு:-

நடந்து முடிந்த ஊவா மாகாண சபைத் தேர்தலில் 70 வீத வாக்களிப்புப் பதிவாகிய தோடு, யாழ். மற்றும் வவுனியாத் தேர்லில்

(18 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகத்தில் கரைஒதுங்கிய தமிழக மீனவர்களின் சடலங்கள் கோம்பயன் மயானத்தில் நேற்றுத் தகனம்

## அமைச்சர் டக்ளஸும் பங்கேற்றார்

யாழ்ப்பாணம், ஓக. 10

தீவகக்கடற்கரையில் கடந்தமாதம் 14 ஆம், 15 ஆம் திகதிகளில் கரை ஒதுங்கிய இந்திய மீனவர்கள் ஏழுபேரின் சடலங்களும் நேற்று கோம்பயன் மணல் மயானத்தில் ஒரே இடத்தில் வைத்து தகனஞ்செய்யப்பட்டுள்ளன.

தமிழகத்தில் இருந்து நேற்றுக்காலை காங்கேசன்துறைக்கு வந்து சேர்ந்த மீனவர் சங்கப் பிரதிநிதிகளும் இறந்தவர்களின் உறவினர்களும் யாழ்.ஆஸ்பத்திரிக்குச் சென்று சடலங்களை அடையாளம் காட்டினர்.

ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஜோய் மகாதேவன் முன்னிலையில் ஆஸ்பத்திரியில் விசாரணைகள் இடம்பெற்றன.

விசாரணையை அடுத்து சடலங்களை கோம்பயன் மணல் மயானத்தில் தகனஞ் செய்து அஸ்தியை எடுத்துச்செல்ல நீதிவான் அனுமதி வழங்கினார்.

இதையடுத்து சடலங்களை தகனஞ் செய்யும் நிகழ்வு கோம்பயன் மணல் மயானத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டார்.

இறந்த மேற்படி கடற்றொழிலாளர்களின் உறவினர்கள் சமயக் கிரியைகளில் கலந்து கொண்டதுடன் நிரபராதி மீனவர்களின் விடுதலைக்கான கூட்டமைப்பின் தமிழகப் பிரதிநிதியான யூ.அருளானந்தமும் இந்நிகழ்வில் பங்கேற்றார்.

இறந்த கடற்றொழிலாளர்களின் சடலங்களை இலங்கை கடற்படையினர் பொறுப்பேற்று, அவர்களது உறவினர்களையும் அழைத்துவந்து இறுதிக்கிரியைகள் வரை அனைத்து விடயங்களையும் மேற்கொண்டனர் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்களது கூட்டுறவு சங்கங்களின் சமாசம் அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தது.

சடலங்கள் வைக்கப்பட்டிருந்த யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேற்றுக் காலை சென்றிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இறந்தவர்களது உறவினர்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டதுடன் இறுதிக்கிரியைகளை விரைவாக மேற்கொள்வதற்கான நடவடிக்கை முன்னெடுத்திருந்தார். (1)

# ஊவா மாகாணசபை ஆட்சியை கைப்பற்றியது ஆளும் ஐ.ம.சு. கூட்டமைப்பு

ஊவா மாகாணசபைத் தேர்தலில் 34 ஆசனங்களில் 25 ஆசனங்களைக் கைப்பற்றி மகத்தான வெற்றியை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஈட்டியுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தலில் வென்று மாகாணசபை ஆட்சியை அரசு கைப்பற்றியது.

மாகாணசபைக்கான தேர்தலில் 34 ஆசனங்களில் 25 ஐ ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு கைப்பற்றியது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏழு ஆசனங்கள் கிடைத்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதிகளவு ஆதரவான பகுதிகள் எனக் கருதப்பட்ட மொனராகலையில் ஆளும் கூட்டணிக்கு 80 வீத வாக்குகளும் பதுளையில் 60 வீத வாக்குகளும் கிடைத்துள்ளமை சுட்டிக் காட்டப்படவேண்டியதாகும். யுத்தத்திற்குப் பிந்திய சூழலில் நடைபெற்ற இந்த முதலாவது தேர்தல் குறித்து வாக்காளர்கள் தமது ஆர்வத்தைப் பெரிதாக வெளிப்படுத்தவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஊவா மாகாணசபையின் மொனராகலை மாவட்டத்தில் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பாகப் போட்டியிட்ட சசிந்திர ராஜபக்ஷ அதிகப்படியான விருப்பு வாக்குகளைப் பெற்று முன்னிலை வகிக்கிறார்.

இவர் ஒரு லட்சத்து 30 ஆயிரத்து 697 விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார்.

ஐ.தே.கவின் பட்டியலில் திஸ்ஸ ஹெட்டியாராய்ச்சி அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றிருக்கிறார். இவர் 13 ஆயிரத்து 49 விருப்பு வாக்குகளைப் பெற்றிருக்கிறார்.(சி)

## கண்ணீர் அஞ்சலி



எமது வங்கியின் முன்னாள் உதவி முகாமையாளர் ப.விஜயகுமார் அவர்களின் அன்புத் தந்தை

### பரமு பசுபதி

அவர்கள் 06/08/2009 அன்று காலமான செய்தி அறிந்து பெரும் துயருறுவதோடு அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கைதடி சமுர்த்தி வங்கி முகாமையாளரும் சக உத்தியோகத்தவர்களும்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## உத்தரக்கிரியை அழைப்பு



மலர்வு
31★12★1948

உதிர்வு
26.07.2009

அமரர்

### சீனிவாசக ஸ்தபதி தெட்சணாமூர்த்தி ஆச்சாரி

அவர்களின் உத்தரக்கிரியை இன்று (10.08.2009) திங்கட்கிழமை காலை 8 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து நவக்கிரக சாந்தியிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்போடு அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு பல வகைகளிலும் எமக்கு உதவிகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

90, சிவன்கோயில் வடக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### பொன்னையா அங்கையா



சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா அங்கையா நேற்று (09.08.2009) ஞாயிற்றுக்கிழமை காலை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-மீனம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், பராசக்தியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பையா - தெய்வானையின் அன்பு மருமகனும் வரதராசன் (சோதிடர்), மீனலோஜினி (ஆசிரியை,யா/ஸகந்தவரோதயாக் கல்லூரி) ஜீவலோஜினி (ஆசிரியை, யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜேஸ்வரி, சுப்பிரமணியம், ஸ்ரீதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும்,நிர்மிளா, கர்ஜன், கிரிசாந், சிவனுஜா, கேஷிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2009) திங்கட்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

தகவல்:
(87741) அ.வரதராசன் (மகன்).

## நாடகமும் அரங்கியலும் கருத்தமர்வு நாளை

யாழ்ப்பாணம், ஓக. 10

யாழ்ப்பாண கல்வி வலய பாடாசலைகளில் நாடகமும் அரங்கியலும் பாடநெறி கற்பிக்கும் ஆசிரியர்களின் வாண்மை விருத்தியை இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள தரவட்டமானது மாதாந்தக் கருத்தமர்வுகளையும், கந்துரையாடல்களையும் நடத்திவருகின்றது.

இத் தரவட்டத்துக்கான ஓகஸ்ட் மாதத்துக்கான கருத்தமர்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் பி.ப. ஒரு மணிவரை யாழ்.கல்வித் திணைக்கள வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தமர்வில் குழந்தை ம.சண்முகலிங்கம் வளவாளராகக் கலந்து கொள்வார்.

இந்த நிகழ்விற்கு யாழ்.கல்வி வலயத்தில் நாடகமும் அரங்கியலும் பாடத்தினைக் கற்பிக்கம் ஆசிரியர்கள் அழைக்கப்பட்டுள்ளதோடு. ஆர்வமுள்ள ஏனைய வலய ஆசிரியர்களும் கலந்து கொள்ளலாமென யாழ்.வலய கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (1)


## தேவை

கல்பேட், ஊர்ச்சேவல் உடன் தேவை.

தாசன் பாம்,
158/4, கோவில் வீதி,யாழ்ப்பாணம்.

## Personal Class

தரம் 6 -A/L வரையான மாணவர்களுக்கு English Personal Class உம் Spoken With Grammar உம் கற்கவிரும்புவர்களுக்கு வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். (அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை)
தொடர்பு :- ஆடிய பாதம் வீதி,
திருநெல்வேலி T.P - 077-8716113

## விற்பனைக்கு

NP KA XXXX இலக்கம் உடைய TATA INDICA ரக கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 0776069535 (87730)

## தேவை

புறொயிலர் இறைச்சிக் கோழி கொள்வனவு செய்யப்படும்.
தொடர்பு - கா. கலிஸ்ரஸ்,
T.P 0774125151 குப்பிளான்.

## விற்பனைக்குண்டு

Suzuki (RG 125) தொடர் இல WPHX-xxxx Chaly தொடர் இல. 500-xxxx கொண்ட மோட்டார் ... விற்பனைக்குண்டு.
... 0775821628, 0773268358


## மரண அறிவித்தல்கள்

### மாணிக்கத் தியாகராசா (இளைப்பாறிய ஆசிரியர்)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கத் தியாகராசா நேற்று (09.08.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2009) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் விளாவெளி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் வடக்கு.

தகவல் :
ஜெயரூபன் சுபாஜினி (மகள்).

### இரங்கநாதன் இலட்சுமிநாதன்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இரங்கநாதன் இலட்சுமிநாதன் கொழும்பில் 08.08.2009 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத வீதி,
தெல்லிப்பழை.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சசிகரன் ஜெகஜெனனி

இணுவில், கே.கே.எஸ்.வீதி, 4ஆம் கட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சசீகரன் ஜெகஜெனனி நேற்று (09.08.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சசீகரனின் அன்பு மனைவியும் குணதாஸ் - ஜெயராணி தம்பதிகளின் மகளும் இளங்கீதன், காண்டீபன், மோகனதாஸ், திவ்வியா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2009) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ஆம் மைல்கல்,
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

தகவல் :
இளங்கீதன்
(சகோதரன்).

### மாணிக்கம் இலட்சியன்



பன்னாலையைப் பிறப்பிடமாகவும் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் இலட்சியன் நேற்று (09.08.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - ஆசைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் சகுந்தலா தேவியின் (ஆசிரியை, யா/இளவாலை மெய்கண் டான் மகா வித்தியாலயம்) அன்புக் கணவரும் கௌரிவானுஜனின் (மாணவன், யா/மகாஜனாக் கல்லூரி) அன்புத் தந்தையும் சக்திக்குமரனின் அன்புச் சிறிய தந்தையும் சிவஞானம், சிவயோகம், இந்திராதேவி, கலாவதி, மகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சிவகுமார், விநாயகவசீகரன் மற்றும் கணநாதன், பாலச்சந்திரன், திருமதி ம.ஜெயச்செல்வி, காலஞ்சென்ற சாரதாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் இராகவன், தினேஸ், மைதிலி, சுதாகரன், பிரபாகரன், சுகிர்தினி, சுவரம்மியா, விபுலன், சங்கீதா, சஜீவன், பகீரதி ஆகியோரின் அன்பு மாமனும் பார்த்தீபனின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2009) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முள்ளானை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இளவாலை வடக்கு,
இளவாலை.

தகவல்:
சகுந்தலாதேவி (மனைவி),
கௌரி வானுஜன் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தேர்தலில் தமிழர் தந்த ஆதரவுக்கு ஈடாக அரசு பதிலுபகாரம் செய்யுமா?

யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் வவுனியா நகர சபைக்கான தேர்தல்கள் நடைபெற்று முடிந்துவிட்டன. தெற்கில் ஊவா மாகாண சபைக்கான தேர்தலையும் வடக்கில் இரண்டு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களையும் தேர்தல் திணைக்களம் ஒரே நாளில் வன்முறைகள் இன்றி வெற்றிகரமாக நடத்தி முடித்து விட்டது.

தமிழர் பிரதேசங்களில் நடத்தப்பட்ட தேர்தல்கள், போர் முடிவுற்றதன் பின்னரான தமிழர்களின் அரசியல் நிலைப்பாட்டின் ஒரு குறியீட்டைக் காட்டுவதற்கான முதல் முயற்சி எனக் கருதத் தக்கவை.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் தகுதிபெற்ற மொத்த வாக்காளர்களில் 18.26 வீதத்தினரும் வவுனியா நகரசபையின் மொத்த வாக்காளரின் 50 வீதத்தினரும் மட்டுமே தமது வாக்குகளை உபயோகித்துள்ளனர்.

இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்களுக்குத் தேர்தல்களில் அக்கறையும் ஆர்வமும் குன்றியிருப்பதையே இந்தப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன என்பது புறமொதுக்கக் கூடியதல்ல.

இதற்குக் காரணம் இல்லை என்று சொல்ல முயலாது. தமக்கு உரித்தான, தமது வாழ்க்கையில் பிரிக்கமுடியாத அரசியல் உரிமைகளுக்காக, கடந்த 60 வருடங்களுக்கும் மேலாக நடத்திய போராட்டங்களுக்கு உரிய பயன் எதுவும் கிடைக்காது போய்விடுமோ என்ற மன ஏக்கம் அவர்களைப் பீடித்திருப்பது மறைக்கக் கூடியதல்ல. நாட்டின் பெரும்பான்மை மக்களின் விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் வழங்கப்படும் பாகுபாட்டுப் பண்பியலின் சலுகைகளுடன் வாழும் நிலை உருவாகுமோ என்ற ஒருவகை அச்சமும் விரக்தியும் அவர்கள் மனங்களில் உறைந்திருப்பதும் கவனத்தில் - கணக்கில் - கொள்ள வேண்டியவை.

தமிழ்ப்பிரதேசங்களின் உள்ளூராட்சித் தேர்தல்களின் மக்கள் இப்போதைய வாக்களிக்கும் தேவையை, முக்கியத்தை மனதிற் கொள்ளாமல் இருந்தமைக்கு இதுவே முதற்காரணம் என்று சொல்வதில் தப்பில்லை.

அடுத்து -

வ்வுனியாவில், வெளியில் நடமாடும் சுதந்திரமுமின்றி, சுயமாக, குடும்பங்களாகச் சேர்ந்து வாழ்ந்து, தாமே உழைத்துத் தமக்குத் தோதான சுதந்திர வாழ்க்கையை நடத்த முடியாத தமது இரத்த உறவுகளுக்கு ஏற்பட்ட பாதிப்பும், அதிலிருந்து அவர்கள் எப்போது விடுவிக்கப்படுவார்கள் என்ற சரியான கால இடைவெளி தெரியாத ஏக்கமும் அவர்கள் தேர்தலில் போதிய வேண்டிய அக்கறை கொள்ளாதிருந்தமைக்கு மற்றொரு காரணம் என்பது தப்புக்கணக்கல்ல. ஏனெனில் மனித வாழ்க்கையின் யதார்த்தம் அதுவே.

யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தலில் அரச சார்பு முன்னணிக்கு அமோக ஆதரவு கிடைத்திருக்கிறது. வவுனியா நகரசபைத் தேர்தலிலும் அரசின் முன்னணிக்கு அதிக ஆதரவு கிடைத்திருக்கிறது.

தமிழர்களும் சமத்துவ அரசியல் உரிமைகளுக்கு உரித்தான வர்கள். அவர்களை புறம்போக்காளர்களாகக் கருதாமல் தமக்குரிய உரிமைகளுடன் அவர்களும் சுதந்திரம் பெற்ற மக்களாக வாழ வேண்டும். அதற்கான நியாயமான அரசியல் தீர்வு ஒன்றை தமிழர்களுக்கு வழங்கவேண்டும் என்ற புதிய நிலைப்பாடு ஒன்றை அரசாங்கம் பூண்டு செயற்பட்டால் எல்லோரும் சக வாழ்வு வாழும் நிலை உருவாகும். அரசாங்கம் இது குறித்து கருத்தூன்றிச் செயற்படுவதன் மூலமே சிறந்த எதிர்காலத்தைத் தோற்றுவிக்க இயலும். அரசாங்கம் இதனை மனதார்ந்து சிந்திக்குமாக.

தமிழ் மக்கள் தனக்கு அளித்துள்ள தேர்தல் - அரசியல் - ஆதரவை, உரிமையும் நிம்மதியும் சுபீட்சமும் நிறைந்த அவர்தம் வாழ்க்கைக்கு உதவுவதற்கு மனங்கொள்ள வேண்டும் என்பதே தேர்தல் முடிவு சொல்லும் செய்தியாகும்.

# பாதாள உலகக் கும்பல்களை ஒழிப்பதில் இனி அரசின் முக்கிய கவனம் திரும்பும்

**நேற்று (09.08.2009) 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் வெளியான அரசியல் விமர்சனத்திலிருந்து ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது.**

கொழும்பில் பெரும்பாலான குற்றச் சம்பவங்களில் தொடர்புடையவர்கள் இப்போதெல்லாம் "சுவீப் ரிக்கற்" விற்பனையில் இறங்கியுள்ளார்களாம். பொலிஸாரிடமிருந்து தப்பிக் கொள்வதற்காக குற்றவாளிகள் இப்போது அதிர்ஷ்டலாபச் சீட்டு விற்பனையில் இறங்கியிருக்கிறார்கள்.

குற்றச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டு தலைமறைவாகியுள்ளவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் தீவிரமடைந்திருப்பதால் அவர்களில் முக்கியமானவர்களுள் ஒருவர்பின் ஒருவராக செத்து விடுவதாகக் கூறப்படுகின்றது. குற்றச் சம்பவங்கள் அதிகரித்து விட்டமையால் அவை களைக் கட்டுப்படுத்துவதற்குப் பெரும் எடுப்பிலான நடவடிக்கையொன்றைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸ்மா அதிபர் நடத்திய உயர் மட்ட மாநாடொன்றில் உதவிப் பொலிஸ் அதிபர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் போன்றோர் கலந்து கொண்டனர். குற்றவாளிகள் மீது தீவிர நடவடிக்கையில் இறங்கும்படி பொலிஸ்மா அதிபர் அந்தக் கூட்டத்தில் கேட்டுக்கொண்டார்.

பொலிஸார் கைது செய்ய முற்படுகையில் எதிர்த்து நின்று பல குற்றவாளிகள் செத்து மடிந்துள்ளதாகப் பொலிஸார் கூறியுள்ளனர். இன்னும் சிலர் எதிர்க்குழுக்களுடனான மோதல்களில் ஈடுபட்டு இறந்துள்ளார்கள். இப்படியான ஒரு சம்பவத்தில் போதைவஸ்துக்கடத்தல் மன்னர் ஒருவர் ஐரோப்பிய நாடு ஒன்றுக்குச் செல்வதற்கு விமானம் ஒன்றின் படிகள் வரைக்கும் அவரது அரசியல் எசமானால் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டவராம். குறித்த போதைவஸ்துக் கடத்தல் மன்னருக்கு விமான நிலையத்தில் மிக முக்கிய பிரமுகர்களுக்குரிய மரியாதைகள் வழங்கப்பட்டதாம். நூற்றுக் கணக்கான இடம்பெயர்ந்த மக்களின் வீசா கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருக்கையில் இந்த மனிதர்மட்டும் ஏவ்வாறு வீசா பெற்றுக்கொண்டார் என்பது ஆச்சரியத்தை விளைவித்துள்ளது.

இதேவேளை குற்றச் செயல் நடவடிக்கைப் பிரிவுகளுக்குப் பொறுப்பான உதவி பொலிஸ் மா அதிபர் அனுரா சேனநாயக்க கருத்து கூறுகையில், "இது வரைக்கும் சமீபகாலத்தில் குற்றவாளிகள் எவரையும் கைது செய்யவுமில்லை, எவரையும் எதிர்கொள்ளவும் இல்லை" என்றார்.

**பிரதம மந்திரி தெரிவித்தது**

பாதாள உலக சக்திகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படுவது பற்றிய செய்தியை வேறு யாருமல்ல பிரதம மந்திரி ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தான் அண்மையில் நாடாளுமன்றத்தில் வெளியிட்டிருந்தார். அவசர கால சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிப்பது தொடர்பான விவாதத்தின் போது பிரதம மந்திரி இதைத் தெரிவித்தார்.

எந்த ஒரு நபரும் ஆயுதங்கள் கொண்டு திரிவதை அரசு அனுமதிக்கமாட்டாது.

சாதாரண மக்களின் ஜனநாயக உரிமையை நாசமாக்கி அதிகாரத்தை இவர்கள் கையில் எடுப்பதை அனுமதிக்க முடியாது என்று பிரதமர் விவாதத்தின் போது கூறினார்.

இன்று மக்கள் சுதந்திரமாக நடமாடுகிறார்கள். பயமின்றி வாழ்கிறார்கள். தேசிய பாதுகாப்பை மேலும் உறுதி செய்யவேண்டியது எமதுகடமை என்று அவர் மேலும் கூறினார்.

புலிகளின் கைகளிலிருந்து எமது படைகளினால் விடுவிக்கப்பட்டுள்ள எமது ஜனநாயக நாட்டில் பாதாள உலகக் கோஷ்டிகளின் நடவடிக்கைகளுக்கு நாம் ஒரு முடிவு கட்டியாக வேண்டும் என்று பிரதமர் மேலும் கூறினார்.

பாதாள உலக கோஷ்டிகளின் மீதான நடவடிக்கைகள் தொடர்கின்றன என்பதை பிரதமர் தெளிவுபடுத்தினார்.

பாதாள உலக சக்திகளை ஒடுக்குவதற்காக அவசரகாலம் நீடிக்கப்படுவது அவசியம் என்பது இப்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்த்தரப்பு உறுப்பினர் மங்கள சமரவீர கருத்துத் தெரிவிக்க வேண்டியவராய் இருந்தார். கடந்தவாரம் வியாழக்கிழமை பத்திரிகையாளர்கள் மத்தியில் அவர் பேசுகையில் பாதாள உலக சக்திகள் ஒழிக்கப்படவேண்டும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதனை அரசாங்கம் மேற்கொள்ளும் முறைதான் சரியில்லை என்றார் அவர். இதுவரை 90 பாதாள உலகக் கோஷ்டியினர் கொல்லப்பட்டிருப்பதாக அவர் கருதுகிறார்.

இதில் கடைசியாக அழிக்கப்பட்டவர் 'ஆமிரோஷான்' என்பவராவார் என்று அவர் தெரிவித்தார். தனது நண்பரும் காலம் சென்ற நாடாளுமன்ற சகாவுமான சிறிபதி சூரியராச்சிக்கு எதிராக ஆமிரோஷான் பொலிஸாருக்கு வாக்குமூலம் ஒன்று கொடுத்திருந்தார் என்றும் அவர் கைது செய்யப்படவிருந்த வேளையில் சூரியாராச்சி துரதிஷ்டவசமாகக் கார் விபத்தில் காலமானார் என்றும் மங்களசமரவீர தெரிவித்தார்.

சமரவீர எதிர்த் தரப்பில் தனிமைப்பட்டுப் போன போதிலும் அவரது குரல் பெரிதாகவும் தெளிவாகவும் ஒலிக்கத் தொடங்கியிருப்பது வரவேற்கத் தக்கது.

இந்த விடயங்களில் எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியினர் அமைதியாக இருப்பது வியப்பாகவுள்ளது.

இரண்டு குட்டியானைகள் தமது தாய்களிடமிருந்து பிரிக்கப்பட்டு விட்ட விடயம் கூட அவர்களின் கவனத்தை ஈர்க்கவில்லை.

கடந்த மாதம் சமரவீர இரகசியப் பொலிஸாரினால் தலைமை நிலையத்துக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார். ஒரு பிரமுகரின் கொலை முயற்சி உட்பட பல விடயங்கள் பற்றி அவர் விசாரிக்கப்பட்டுள்ளார்.

## சமரவீரவின் வீட்டு விருந்தில் சந்திரிகா பங்கேற்றார்

**சமரவீர நடத்திய விருந்தில் குமாரதுங்க**

மொறட்டுவையிலுள்ள அவரது இல்லத்தில் அவரது உறவினர் ஒருவர் 21 வயதை எட்டியது தொடர்பான பிறந்தநாள் விழா கடந்த 2 ஆம் திகதி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சமரவீர தமது நெருங்கிய நண்பர்கள் பலரை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உள்பட அழைத்திருந்தார். ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, ரவி கருணாநாயக்க மற்றும் திஸ்ஸ அத்தநாயக்க போன்றவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். இது அரச வட்டாரங்களில் பெரும் பரபரப்பையும் எதிர்வு கூரல்களையும் கிளப்பிவிட்டிருந்தது.

அவைகளில் ஒன்று சந்திரிகா குமாரதுங்க மீண்டும் அரசியலுக்குள் நுழைந்து எதிர்க்கட்சிகளின் விசால கூட்டணிக்குத் தலைமை வகிக்கப் போகிறார் என்பது.

அரசியல் வாதிகள் கூடும்போது அரசியல் பற்றிப் பேசாமல் இருப்பார்கள் என்பது சாத்தியமில்லை. ராஜபக்ஷ குழுவினர் தொடர்பாக குமாரதுங்க அதிகமாகவே கருத்து வெளியிட்டதாகக் கூறப்படுகிறது. ஆளும் கட்சியிலுள்ள பலர் தம்முடன் வழக்கமான தொடர்பு கொண்டிருக்கிறார்கள் என்று அவர் கூறியுள்ளார். இப்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் முறைகள் குறித்து அவர்கள் கசப்போடு பேசுகிறார்கள். ஏனைய நாடுகளில் போன்று முன்னாள் ஜனாதிபதி ஒருவர் நடத்தப்படும் விதத்தில் தாம் நடத்தப்படவில்லை என்று அவர் குறைகூறியுள்ளார்.

தம்மைச் சிலர் மீண்டும் அரசியலுக்குத் திரும்பும்படி கூறுகிறார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். பின்னர் சமரவீர நின்றிருந்த பக்கமாகச் சுட்டிக்காட்டி எல்லாவற்றுக்கும் அவர்தான் காரணம் என்று தமாசாகக் கூறியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் ஜனதாவிமுத்திப் பெரமுனையையும் ஒன்று சேர்த்ததில் சமரவீர வகித்த பங்கினை அவர் சாடையாகக் குறிப்பிட்டுள்ளார்.

2005ஆம் ஆண்டு ஜே.வி.பி.யின் ஆதரவில் ராஜபக்ஷ பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது சமரவீர தான் ராஜபக்ஷவின் பிரசார முகாமையாளராவிருந்தவர். பின்னர் வெளிநாட்டமைச்சராகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இதன்பின் விருந்துக்கு வந்திருந்தவர்களில் ஒருகுழுவினர் ஓர் இடத்தில் தனிமையாக உரையாடினார்கள்.

அவர்களில் ஒருவர் "இந்த அரசாங்கம்" பயன்படுத்தியபின் தூக்கி எறியும் அரசாங்கம் என்று வர்ணித்தார். ஆள்கள் தெரிவு செய்யப்பட்டு, பயன்படுத்தியபின் தூக்கி எறிந்து விடப்படுவார்கள் என்பதை இது சுட்டிக்காட்டியது. சமரவீர அப்படியானவர்களில் ஒருவர். அவர்தான் முதலில் தூக்கி எறியப்பட்டவர். ஜெனரல் சரத் பொன்சேக்க, தூதுவர் தயான ஜயதிலக்க, எச்.எம்.ஜீ.எஸ்.பாலிகாக்கார போன்றவர்கள் பற்றியும் பேசிக் கொள்ளப் பட்டது. ஊடகத்துறை உட்பட பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களும் குறிப்பிடப்பட்டார்கள்.

(ப)

**நாளை**

| | |
|---|---|
| ஆடி 26 | 11.08.2009 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | பஞ்சமி |
| | மு.ப. 11.02 வரை |
| நட்சத்திரம்: | ரேவதி |
| | மு.இ. 09.21 வரை |
| சுபநேரம்: | 10.34 - 12.04 |
| ராகுகாலம்: | 03.04 - 04.34 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்



திருமதி
திரேஸ்மலர்
கனகேஸ்வரி செல்வராசா

கடந்த (06.08.2009) இல் காலமான திரேஸ்மலர் கனகேஸ்வரி செல்வராசா (மலர்அக்கா)வின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு ஆறுதல் கூறிய அனைவருக்கும் எனது சார்பாகவும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தங்கராஜா டானியல் செல்வராசா
(கணவர்).

517,மானிப்பாய் றோட்,
யாழ்ப்பாணம்.
தொ.பே.0777150883 (87707)

## முழுமையாக நிதி கிடைக்காமையால் கலாசார மண்டப வேலைகள் ஸ்தம்பிதம்

வலி.தென்மேற்கு, ஓக.10

கலாசார மண்டபம் அமைப்பதற்கு மிகுதி நிதி ஒதுக்கப்படாததால் மானிப்பாய் கலாசார மண்டப் வேலைகள் இடை நடுவில் தடைப்பட்டுள்ளன.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு முதற்கட்டமாக நவீனவடிவிலான கலாசார மண்டபம் அமைப்பதற்கு 5 மில்லியன் ரூபாவை 2006இல் ஒதுக்கியது.

இதனைத் தொடர்ந்து நீதிபதி இரா. வசந்த சேனனால் வழங்கப்பட்ட இலவச காணியில் கட்டட வேலைகள் ஆரம்பித்தன. ஆனால் இக்கட்டட வேலைகள் தொடர்ந்தும் நடைபெறுவதற்கு நிதி ஒதுக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய்-கட்டுடை கலாசார மண்டப புனரமைப்புப் பணிகள் முடிக்கப்படாமல் இருப்பது தொடர்பாக வலி.தென்மேற்கு பிரதேச செயலர், மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

(04-302)

### கோப்பாய்ப் பிரதேசத்தில் கிராம எழுச்சி நிகழ்வு

கோப்பாய், ஓக. 10

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீள் எழுச்சிக் கிராம அறிமுக நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது.

சிறுப்பிட்டி ஜனசக்தி கிராமத்தில் காலையிலும் ஊரெழு கிழக்கு கிராமத்தில் பிற்பகலிலும் இந்த நிகழ்வு இடம் பெறவுள்ளது.

(1-72)

## விற்பனைக்கு

15'X 10' கடைக்குரிய கலர் அலுமினிய பிற்றிங்கிலான 08 கண்ணாடி அலுமாரிகளும், முன்பக்க கண்ணாடி அலுமாரிகளும், 15' நீள கண்ணாடி கவுண்டர் அலுமாரியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு - 0774366704.

(F/560235)

## நடிகர், நடிகையர் தேவை

உலக தொலைக்காட்சிகளில் அதிக பொருள்செலவுடன் தமிழ், சிங்கள மொழிகளில் விரைவில் வெளிவரவுள்ள சமூக விழிப்புணர்வுக் குறுந்திரைப்படத்தில் நடிப்பதற்கு ஆர்வம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

18-50 வயதுக்கு இடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம். ஒரு மாதத்திற்குள் எடுத்த புகைப்படப் பிரதியுடன் சுயவிவரத்தையும் ஆற்றல்களையும் குறிப்பிட்டு 17.08.2009 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

226, கே.கே.எஸ் வீதி;
யாழ்ப்பாணம். (F/560246)

பணிப்பாளர்,
கல்வி அபிவிருத்திக்கான அரங்க நிறுவனம்.

## சேவை நலன் பாராட்டு



முப்பத்தைந்து வருடங்களாக எமது சங்கத்தின் இலிகிதராகவும், செயலாளராகவும், கல்வி உத்தியோகத்தராகவும் பின் 6 வருடங்கள் பொது முகாமையாளராகவும் கடமையாற்றும் காலத்தில் சங்கத்திற்கு புதிய மாடிக்கட்டடம் அமைய அளப்பரிய சேவையாற்றி 10.08.2009 இல் சேவையில் இருந்து ஓய்வு பெறுவதையிட்டு இப் பெருந்தகையை ஓய்வுக்காலத்தில் குடும்பத்துடன் பல்வகைச் சிறப்புக்களையும் பெற்று நலமாக வாழ வாழ்த்துகின்றோம்.

திரு.நா.துரைச்சாமி
(பொது முகாமையாளர் மானிப்பாய் பரிஷ் ப.நோ.கூ.சங்கம்)

தலைவர்,
பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்,
கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம்,
ப.நோ.கூ.சங்கம், மானிப்பாய். ஊழியர் நலன்புரிச் சங்கம்.

(87705)

## 57 ஆவது பிறந்தநாள் வாழ்த்து
(10.08.2009)



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வடமராட்சி துன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட

திருமதி சுசீலா வைகுந்தநாதன்

அவர்கள் இன்று (10.08.2009) திங்கட்கிழமை தனது 57ஆவது பிறந்தநாளை கொண்டாடுகின்றார். இவரையும் குடும்பத்தினர் ஆகிய அ.வைகுந்தநாதன் (ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர், சமாதான நீதீவான்), வை.நிதிராசா (B.B.A,முன்னாள் முகாமைத்துவ உத்தியோகத்தர், தற்போது பாரிஸில் கடமையாற்றுபவர்) இவர்களையும் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துவோர்:

இலங்கைநாதன் பாலசுந்தரம்
(லயன் M.J.F.,J.P., தலைவர், ஆசிமட அரசடிப் பிள்ளையார் ஆலயம்),
கோண்டாவில் கிழக்கு.

துன்னாலை வடக்கு,
வடமராட்சி,
(87727)

# மனமார்ந்த நன்றிகள்...



அழிவுகளிலிருந்து ஆக்கத்துக்காக,
கனவுகளிலிருந்து யதார்த்தத்துக்காக,
தடைகள் நீங்கி வளங்கொழிக்கும் வாழ்வுக்காக,

வாக்களித்து எம்மைப் பலப்படுத்தியவர்களுக்கும்,
புதிய ஜனநாயகச் சூழலைச் சரியாகப் பயன்படுத்தி
நேர்மையான தேர்தலை நடத்த உதவிய அனைவருக்கும்
எமது மனமார்ந்த நன்றிகள்

எந்தக் கட்சிக்கு வாக்களித்தவர்களுக்கும்
ஒரே மாதிரி மக்களாக பாரபட்சமின்றிச் சேவையாற்றி
இழந்தவைகள் அனைத்தையும் மீளப்பெற்று
நடைமுறைச் சாத்தியமான தீர்வை வென்றெடுக்க
அனைவரையும் எம்முடன் கரங்கோர்க்குமாறு
உரிமையுடன் வேண்டிக் கொள்கிறோம்!

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தொடுத்தெழுதலில் முதலாம் இடம்

வேம்படி பெண்கள் உயர்தரப் பாட சாலை தரம் 11 மாணவியான செல்வி



நிஜானி குமரேசமூர்த்தி ஆங்கில தினப் போட்டிகளில் ஆங்கில மொழியில் தொடுத் தொழுதல் போட்டியில் பாடசாலை மட்டம், கோட்ட மட்டம், வலய மட்டம் என்பவற்றில் முதலாம் இடத்தையும் யாழ். மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்று மாகாண மட்ட போட்டிக்குத் தெரிவாகியுள்ளார். (04-230)

# யாழ். மாநகர சபைக்குத் தெரிவான உறுப்பினர்களின் விருப்பு வாக்குகளின் விவரங்கள் வெளியாகியுள்ளன

யாழ்ப்பாணம், ஓக:10

நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ். மாநகரசபைத் தேர்தலில் போட்டியிட்டு மாநகரசபை உறுப்பினர்களாகத் தெரிவான வேட்பாளர்கள் பெற்று கொண்ட விருப்பு வாக்குகளின் விவரம் தேர்தல் திணைக்களத்தால் நேற்றுக் காலை அறிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவாகியுள்ள உறுப்பினர்களும் அவர்கள் பெற்ற விருப்பு வாக்குகளும் வருமாறு:-

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு

துரைராஜா இளங்கோ - 3,387, முருகையா கோமகன் - 1,573, அப்புத்துரை மனுவல் மங்களநேசன் -1,394, மீராசாகிப் மொகமட் றமீஸ் - 1,338, பற்குணராசா யோகேஸ்வரி -1,250, பிலேவியன் எக்ஸ்பெடித் கிறேசியன் -1,166, மொகமட் மீரா சாகிப் முஸ்தப்பா -1,029, மாணிக்கம் கனகரத்தினம் -1,025, சுதர்சிங் விஜயகாந்த் -989, அஸ்கர் றூமி பதுர்தீன் - 979, அஜ்மயீன் அஸ்வர் - 960, சுவிதரன் நிசாந்தன் - 896, அந்தோனிப்பிள்ளை கிளாலோடாசியஸ்- 889.

இலங்கைத் தமிழரசுக் கட்சி

முடியப்பு றெமீடியஸ் - 4,223, அந்தோனிப்பிள்ளை மேரியம்மா -1,678, கே.என். கனகரத்தினம் -1,442, நடராஜா இராஜதேவன் -1,118, பெஞ்சமின் ஜேக்கப் -1,039, அரியக்குட்டி பரம்சோதி - 1,007, மரிய கெறற்றி அன்னர் -889, அருளப்பு கொர்ணேலியஸ்- 826.

தமிழர் விடுதலைக் கூட்டணி

வீரசிங்கம் ஆனந்த சங்கரி -424.

சுயேட்சைக் குழு -2

அகமது முகமது சுபியான் -1,779

(50-111-236)

# செல்வச்சந்நிதி ஆலயப் பெருந்திருவிழா 20 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.10



தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயப் பெருந்திருவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி வியா ழக்கிழமை மாலை 4.45 மணிக் குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி காலைத் திருவிழா ஆரம்பமாகும். காலைத் திருவிழா காலை 8 மணிக் கும் மாலைத் திருவிழா 5 மணிக்கும் இடம்பெறும்.

29ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் 30 ஆம் திகதி கைலாய வாகனமும் இடம்பெறும்.

அடுத்த மாதம் இரண்டாம் திகதி சப்பரத்திருவிழாவும் 3 ஆம் திகதி காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும் இடம்பெறும். 4 ஆம் திகதி காலை 8 மணிக்குத் தீர்த் தத் திருவிழா நடைபெறும். 5ஆம் திகதி மாலை 5மணிக்கு மௌனத் திருவிழாவுடன் ஆலயத் திருவிழா நிறைவடையும். (203-236-70)

# வலி. மேற்கில் 'டெங்கு' தொடர்பான முதற் கட்ட பிரசாரம் தீவிரம்

யாழ்ப்பாணம், ஓக.10

டெங்கு ஒழிப்பு தீவிர பிரசாரத்தில் வலி. மேற்கு பிரதேச சபை தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ள டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் முன்மாதிரியாக வலிகாமம் பகுதியில் முதற் கட்டமாகத் தெருக்கூத்து மூலம் டெங்கு ஒழிப்பு தொடர்பாக விழிப்புணர்வு செய்யப்படுகிறது.

வலி. மேற்கு பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

வண. ரி. எஸ் யோசுவா (வலி. மேற்கு ஆலோசனைப் பிரதிநிதி) அடிகளாரின் நெறியாள்கையில் டெங்கு ஒழிப்புத் தொடர்பான தீவிர பிரசாரம் பிரதேச ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் -

மக்கள் மழைக்காலத்திற்கு முன்னர் தமது சூழலையும், பொது இடங்களையும், பாடசாலைகளையும் எவ்வாறு பேண வேண்டும் என்ற தொனிப்பொருளில் துண்டுப்பிரசுரமும் வழங்கப்பட்டு வருகிறது.

டெங்கு ஒழிப்புக்கான அனுசரணையை யாழ்.வை.எம்.சீ.ஏ. தலைவர் டாக்டர் ரி. டபிள்யூ. ஜெயகுலராஜா வழங்கி வருகின்றார்.

பிரசாரத்துக்கான அனைத்து ஆலோசனைகளையும் மானிப்பாய் பிரதேச சபை அதிகாரி டாக்டர் டினேஸ் ஜெயக்குமரனும் பொதுச் சுகாதார பரிசோதகரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

''டெங்கு'' தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு, கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறவுள்ள கண்காட்சிக்கு முன்னோடியாக இடம்பெறவுள்ளது. (04-302)

# வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் அராலி - வேலணை கடற்பாதை புனரமைக்கப்படும்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஓக 10

வடக்கின் வசந்தம் அபிவிருத் தித் திட்டத்தின் கீழ் அடுத்த இரண்டு ஆண்டுகளில் அராலி- வேலணை கடற்பாதை மீள் புனரமைப்புச் செய்யப்படும்.

இவ்வாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. கணேஷ் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட தேச வள விவசாயிகள் சம்மேளனத் தலைவர் சி.பொ.வ.மா.க முதலியார் திட்டத்தை முன்மொழிந் திருந்தார்.

வலி.மேற்கு பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி, பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கத் தலைவர் ச. செல்வரத்தினம் ஆகியோருக்கே இவ்வாறு அரச அதிபர் அறிவித்துள்ளார்.

வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அராலி- வேலணை கடற் பாதை புனரமைப்புத் திட்டம் எனும் தலைப்பில் அராலி - வேலணை கடற் பாதை புனரமைப்புத் திட்டமானது இரண்டாண்டு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஏற்கனவே உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதற்குரிய நிதி கிடைத்தவுடன் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் யாழ்.மாவட்ட அரச அதிபர் க. கணேஷ் அறிவித்துள்ளார்.

இதேவேளை, வடக்கின் வசந்தத்தின் கீழ் மேற்படி பாதை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்பதும் தீவக மற்றும் வலிகாமம் பகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையாக இருந்து வந்ததும் குறிப்பிடத்தக்கது. (04-230)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# கசிப்புடன் அதிகாலையில் வந்தவர் பொலிஸாரிடம் வசமாகச் சிக்கினார்

வலி வடக்கு, ஓக.10

அதிகாலை வேளையில் கசிப்பினைக் கொண்டு சென்ற நபர் ஒருவர் சுன்னாகம் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக்கொண்டார்.

நேற்று முன்தினம் அதிகாலை 5.00 மணியளவில் சபாபதிப் பிள்ளை வீதியில் உள்ள நலன்புரி நிலையத்திற்கு கசிப்புடன் வந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவராவார்.

இவரிடம் இருந்து ஆறு போத்தல் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்ட நபர் மல்லாகம் மாவட்ட நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டதைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கும்படி கட்டளையிடப்பட்டுள்ளது.

குறித்த நலன்புரி நிலையத்திற்கு கசிப்பினை அதிகாலை வேளையில் கொண்டு வந்து விற்பனை செய்வது நீண்டகாலம் நடைபெற்று வருவதாகவும், இது சம்பந்தமாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (04-86)

# மர்மப் பொருள் வெடித்ததில் கடை ஊழியர் படுகாயம்

வலி.வடக்கு, ஓக. 10

பழைய இரும்புப் பொருள்களை விற்பனை செய்யும் கடையொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட இரும்பு பொருள்களை ஒழுங்குபடுத்திய கடை ஊழியர் ஒருவர் இனந்தெரியாத மர்மப் பொருள் ஒன்று வெடித்ததினால் படுகாயமுற்ற நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் கந்தரோடையில் உள்ள பழைய இரும்புகள் வாங்கி விற்பனை செய்யும் கடையொன்றின் ஊழியரான மல்லாகத்தைச் சேர்ந்த குடும்பஸ்தரான திருநாவுக்கரசு கோகுலகாந்தன் (வயது 38) என்பவரே படுகாயமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

வெளியில் இருந்து வாங்கிய பழைய இரும்புப் பொருள்களைக் குறிப்பிட்ட கடைக்குப் பலர் விநியோகம் செய்து வந்துள்ளார்கள்.

இவ்வாறு விநியோகம் செய்யப்பட்ட பொருள்களில் ஒன்றை அறுத்துக் கொண்டு இருக்கும் வேளையில் அந்தப் பொருள் திடீரென வெடித்தில் ஊழியர் பாதிக்கப் பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சுன்னாகம் பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (04-86)



உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரியின் பரிசளிப்புவிழா நிகழ்வில் விருந்தினர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களால் மேடைக்கு அழைத்து வரப்படுகின்றனர். நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாடசாலை மேம்பாட்டுத் திட்ட இணைப்பாளர் ந.அனந்தராஜ், உடுப்பிட்டி பாதுகாப்புப் படைப் பிரிவுப் பொறுப்பதிகாரி மேஜர் அமித் பெரேரா, ஓய்வுபெற்ற ஆசிரியர் ஆர்.பொன்னம்பலம் ஆகியோர் மாணவருக்குப் பரிசில் வழங்குகின்றனர். (படங்கள்: சுந்தர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 16 ✱ 07 ✱ 1932



இறப்பு 23 ✱ 07 ✱ 2008

## தம்பு கிருஸ்ணபிள்ளை

*திதி: பஞ்சமி (10.08.2009)*

பாசத்தின் இருப்பிடமாய் பண்பின் சிகரமாய்
அன்பால் அரவணைத்து ஆசை மொழியூட்டி
மன்னு புகழ் கீர்த்தியுடன் வாழ வைத்த தெய்வமே!
பாசமுடன் இணைந்த இனிய உங்கள் முகம்
எங்கள் நெஞ்சோடு வாழுமப்பா
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பத்தமேனி, அச்சுவேலி. குடும்பத்தினர்.

(சி/560177)

# விளையாட்டு விழா

கரவெட்டி,ஒக.10

கரவெட்டி மைக்கல் விளையாட்டுக் கழக வருடாந்த விளையாட்டுவிழா இன்று திங்கட் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கழக மைதானத் தில் விளையாட்டுக் கழகத் தலைவர் சி.செல்வ தீபன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் மருதங்கேணி பிரதேச செயலக உதவிக் கணக்காளர் செ.சுபசெல்வன் பிரதம விருந்தினராகவும் கரவெட்டிப் பிரதேச செய லக விளையாட்டு உத்தியோகத்தர் பா.முகுந் தன், கரவெட்டி இளைஞர் சேவை அலுவலர் ஐ.தவேந்திரன், துன்னாலை மத்தி கிராம சேவ கர் க.ரதீசன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக வும் கலந்துகொள்வர்.

## வேலை ஆள்கள் தேவை

கைதடி எரிபொருள் நிலையத்தில் கூட மையாற்ற (பம்மர்) ஊழியர்கள் தேவை. கிராம சேவையாளரின் நற்சாட்சிப் பத்திரத் துடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

கைதடி எரிபொருள் நிரப்பு நிலையம்,
கைதடி. (87702)

## தவறிவிட்டது

கிளாலி எழுதுமட்டுவாள் என்னும் முகவரியுடைய மரிசலின் அக்கினேசம்மா என்பவரது தேசிய அடையாள அட்டை (708312207 V) கடந்த 05.08.2009 அன்று யாழ்.மாவட்ட செயலகப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 348, கடற்கரை வீதி, நாவாந்துறை என்னும் முகவரியுடன் அல்லது 077 9671293 ஹன்னும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ள வும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (87719)

# மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 30.06.2008இற்கு முன்பு அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின் வரும் திகதிகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப் படும்.

| தொடர் இல. | கிளை | ஏலம் விடப்படும் திகதி | இடம் |
|---|---|---|---|
| 1 | யாழ்.ஸ்ரான்லி வீதி - 030 | | மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லிவீதிக்கிளை - 030 |
| 2 | சேவை நிலையம், மானிப்பாய் - 837 | 04.10.2009 | |
| 3 | காங்கேசன்துறை - 031 | 05.10.2009 | |
| 4 | சேவை நிலையம், மல்லாகம் - 899 | 06.10.2009 | |
| 5 | யாழ்.பிரதான வீதி - 104 | 10.10.2009 | |
| 6 | சேவை நிலையம், உரும்பிராய் - 865 | | |
| 7 | ஊர்காவற்றுறை - 105 | | |
| 8 | நெல்லியடி - 106 | 11.10.2009 | |
| 9 | அச்சுவேலி - 107 | 12.10.2009 | |
| 10 | சங்கானை - 108 | 18.10.2009 | |
| 11 | சுன்னாகம் - 109 | 19.10.2009 | |
| 12 | சாவகச்சேரி - 110 | | |
| 13 | சேவை நிலையம், கொடிகாமம் - 904 | 20.10.2009 | |
| 14 | வல்வெட்டித்துறை - 141 | 24.10.2009 | |
| 15 | யாழ்.பல்கலைக்கழகம் - 162 | 25.10.2009 | |
| 16 | சேவை நிலையம், திருநெல்வேலி - 855 | | |
| 17 | யாழ்.கன்னாதிட்டி - 284 | & | |
| 18 | சேவை நிலையம், இணுவில் - 905 | | |
| 19 | பருத்தித்துறை - 285 | 26.10.2009 | |

அறிவித்தலின்றித் திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

மக்கள் வங்கி,
பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

உதவிப் பொதுமுகாமையாளர்
வடவலயம்.

(சி/560193)

# இடிகுண்டு நீர்த்தேக்கத்தை விரைவில் புனரமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக.10

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிர தேச செயலர் பிரிவிற்குட்பட்ட கட்டுடை இடி குண்டு நீர்த்தேக்கம் மழை காலத்திற்கு முன்னர் புனரமைப்புச் செய்யப்படும் என்று மானிப்பாய் பிரதேசசபைச் செயலாளர் திரு மதி பு.சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கட்டுடை இடிகுண்டு நீர்த்தேக்கம் அழிவடைந்து செல்வதாக வும் அருகில் உள்ள மதில் - வீதி என்பன இடிந்து - இடி குண்டுக்குள் வீழும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புனரமைப்புப் பணிகள் விரைவில் மேற் கொள்ளாது விட்டால் - இவ்வருட பெரும் போக மழையின் போது - பாரிய சேதம் ஏற் பட்டு மக்கள் போக்குவரத்துக்கும் பாரிய சேதம் ஏற்படும் எனவும் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (04-302)

# மானிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சைக்கிள், மரதன் ஓட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஒக.10

மானிப்பாய் பிரதேச சைக்கிள், மரதன் ஓட்டப் போட்டிகளை 28 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களிடையே நடத்த வுள்ளது.

பிரதேச சபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் இதற்கான நடவடிக்கையினை எடுத் துள்ளார்.

மரதன் ஓட்டம் (ஆண்) 7 மைல் ஓட்டத் தினையும் சைக்கிள் 25 மைல் (ஆண்) ஓட் டத் தினையும் கொண்டுள்ளது.

இதனை விட - பிரதேச மட்டத்தில் உள் ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு துடுப் பாட்டம், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் மற்றும் 100மீற்றர், 200மீற்றர் ஓட்டம் (பெண்), 800 மீற்றர், 1500 மீற்றர் ஓட்டம் (ஆண்) மற் றும் கயிறு இழுத்தல் போட்டி (ஆண்/பெண்) என்பனவும் இடம்பெறவுள்ளன.

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட சன சமூக நிலைய உறுப்பினர்கள் உள்ளூராட்சி வார விளையாட்டு குழு தலைவர் கு.இரத் தினராசாவுடன் தொடர்வு கொள்ளுமாறு கேட் கப்பட் டுள்ளது. (203-302)


edexcel INTERNATIONAL

BTEC

# HND

## Registrations are Open for September 2009 Intake

**IIS City Campus** நிறுவனத்தின் **September 2009** பிரிவு பட்டக்கல்விக்கான அனுமதிகள் வழங்கலும்,மாணவர் உள்வாங்கலும் ஆரம்பமாகியுள்ளது. இப்பிரிவுகளில் கணனித்துறை,கணிய அளவியல் துறை,குடிசார் பொறியியற்துறை ,முகாமைத்துவ வர்த்தகத் துறைகளில் மாணவர்கள் தமது பட்டக்கல்விக்கான அனுமதிகளைப்பெற்றுக்கொள்ள முடியும். இப்பிரிவில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் குடிசார் பொறியியற்துறையும் ,வர்த்தக முகாமைத்துவத்துறையும் குறிப்பிடதக்கவையாகும். இக்கற்கை நெறிகளுக்கான மாணவர் அனுமதிகள் க.பொ.த உயர்தரப்பரீட்சைப்பெறுபேறுகள், தெரிவுப்பரீட்சை, நேர்முகத்தேர்வு என்பவற்றினுடாக வழங்கப்படும். கற்கை நெறிகளுக்கான மாணவர் சேர்க்கை வரையறுக்கப்பட்டுள்ளதால் உங்கள் அனுமதிகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்.

**இப்பிரிவில் ஆரம்பமாகும் HIGHER NATIONAL DIPLOMA கற்கை நெறிகள்**

## HND in Computing



**HND in Computing (General)**
**HND in Computing (ICT System Support)**
**HND in Computing (Software Development)**

இக்கற்கை நெறியினை தொடர விரும்பும் மாணவர்கள் மேற்குறிப்பிட்ட மூன்று பிரிவுகளில் ஏதேனும் ஒன்றைதெரிவு செய்ய முடியும் இரண்டு வருடகாலத்தினை கொண்ட இக்கற்கை நெறி- களை மேற்கொள்ளும் மாணவர்கள் இறுதியாண்டினை கொழும்பு, பிரித்தானியா, அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில்உள்ள முன்னணிப் பல்கலைக்கழகங்களில் B.Sc தகவல்தொழில்நுட்பத்தில் அல்லது கணனி விஞ்ஞானத்தில் இறுதியாண்டு மாணவராக இணைய முடியும். இக்கற்கை நெறி உங்கள் வெளிநாட்டு உயர்கல்விக்கான விசாக்களை இலகுவாகவும் உறுதியாகவும் ஆக்குகின்றது. நூற்றுக்கணக்கான மாணவர் களுக்கு ஓர் வெற்றிப்பாதையை ஏற்படுத்திக்கொடுத்த இக்கற்கைநெறியில் உங்களை இணைத்துக் கொள்வதனூடாக குறுகிய காலத்தில் ஓர் கணனிப்பட்டதாரியாகும் வாய்ப்பினை பெற்றுக் கொள்கிறீர்கள்.

## HND in Quantity Surveying



Edexcel நிறுவனத்தின் தரப்படுத்தலில் 'A' தரத்தினைப்பெற்று HND கற்கை நெறிக்கு தனித்துவம் மிக்க எமது நிறுவனத்தில் HND QS கற்கை நெறியினை கற்கின்ற இவ்வரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுங்கள். இரண்டு வருட கால இக்கற்கை நெறியினை பூர்த்தி செய்த மாணவர்கள் முன்னணி ஆறு நட்சத்திரப் பல்கலைக்கழகமான Salford பல்கலைக்கழகத்தில் தொடரலாம். Edexcel நிறுவனத்தின் இக்கற்கை நெறியானது ICBT Campus உடன் இணைந்து எம்மால் நடாத்தப்படுகின்றது.சர்வதேச தரம் வாய்ந்த இக்கற்கை நெறிகளினை தென்பகுதி சென்று, குறிப்பாக கொழும்பில் கற்கவேண்டிய நிலையை முற்றாக மாற்றி, பெற்றோரின் அரவணைப்பிலும் பாதுகாப்பிலும் இருந்து கொண்டே தமது சொந்த பிரதேசத்தில் குறைந்த செலவுடன் மேற்கொள்ள கூடிய வாய்ப்பினை IIS City Campus நிறுவனம் ஏற்படுத்திதந்துள்ளது.

## HND in Business Management



எமது மாணவர்களுக்கு வர்த்தக முகாமைத்துவத் துறையில் பட்டக் கல்வியினை வழங்கும் நோக்கில் எமது நிறுவனத்தில் முதல் முறையாகHND in Business Management கற்கை நெறி அறிமுகப்படுத்தப்படுகின்றது. இக்கற்கை நெறியானது சர்வதேச அங்கீகாரம் கொண்ட BA(Hons)/ BBA(Hons) தகைமையினை பெறுவதற்காக வாய்ப்புக்களை வழங்குகின்றது. இரண்டு வருடகால இக்கற்கை நெறியினைபூர்த்தி செய்த மாணவர்கள் இறுதியாண்டு பட்டப்படிப்பினை கொழும்பு, பிரித்தானியா , அவுஸ்ரேலியா , நியூசிலாந்து ,கனடா, அமெரிக்கா போன்ற சர்வதேச பல்கலைக்கழகத்தில் தொடரலாம்.

## HND in Civil Engineering



தொழிற் சந்தைக்கு பொருத்தமான கற்கை நெறிகளை வழங்கிவரும் எமது நிறுவனம் நாட்டின் இன்றைய தேவையை மிகவும் அவதானமாக அடையாளம் கண்டும் யாழ் மாணவர்களின் தேவைகளை அறிந்தும் முதன் முதலில் HND in Civil Engineering கற்கை நெறியை அறிமுகப்படுத்தியுள்ளது. இரண்டு வருட கால இக்கற்கை நெறியினைபூர்த்தி செய்த மாணவர்கள் பட்டப் படிப்பினை பிரித்தானியா ,அவுஸ்ரேலியா முன்னணி பல்கலைக் கழகங்களில் தொடரலாம். Edexcel நிறுவனத்தின் இக்கற்கை நெறியானது ICBT Campus உடன் இணைந்து எம்மால் நடாத்தப்படுகின்றது. ஒவ்வொரு மாணவரினதும் பொறியியளாராக வேண்டும் என்ற கனவினை இக்கற்கை நெறி நிறைவேற்றித்தர வல்லது.

**HND in Computing /HND in Business Management கற்கை நெறிகளினை பூர்த்தி செய்து கொள்ளும் மாணவர்கள் பிரித்தானியா Middlesex பல்கலைக்கழகத்தின் இறதியாண்டு பட்டப்படிப்பினை எமது நிறுவனத்திலே தொடரமுடியும் .**

"A" Rated centre for quality for the 5th consecutive year from Edexcel International-UK

# IIS CITY CAMPUS

#200,Sivan Pannai Road,Jaffna.
Tel:021 222 8000 Fax:021 222 6933
Email:iiscc@sltnet.lk Web: iiscitycampus.com



## விற்பனைக்கு

- வீட்டுத் தளபாடங்கள்
- ஸ்கிறீன் பிறிண்டிங் உபகரணங்கள்0
- பிளாஸ்ரிக் தொழில் உபகரணங்கள் / இயந்தி ரங்கள்.
- SLT தொலைபேசி (96 ... இலக்கம்)

என்பன உடன் விற்பனைக்கு

212, கோயில் வீதி, நல்லூர் (கைலாசபிள்ளையார் கோயிலடி) (87728)



நாளை

## மாபெரும் கருத்தரங்கு

A/L 2009

**அரசியல்**

இவ்வாண்டு பரீட்சைக்கான பயன்தரும் வினாக்களும், விடைகளும்விளக்கமும் வழங்கப்படும்.

*நேரம்: காலை 9மணி*

உங்கள் பிரபல்யம் பெற்ற ஆசான் **S.M.ஜெனா**

இடம்: **பொருளியற் கல்லூரி**
*யாழ்ப்பாணம் (நாவலர் வீதி).*


(சி/560243)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கழிவறை செல்ல முன்னரே கசிந்து விடும் சிறுநீர்!

**கேள்வி:** பெண் வயது 33. முதற் குழந்தை சாதாரண பிரசவம். இரண்டாவது குழந்தை நாலரை வருடம் கழித்து 'சிசேரியன்' சத்திரசிகிச்சை மூலம் பெறுவிக்கப்பட்டது. அதன் பின்னர் இருந்து எனது வயிறு பெரிதாகவே உள்ளது. வயிற்றின் பருமனை குறைக்க வழி சொல்லவும்.

**பதில்:** பிரசவத்தின் பின்னர் - அது சாதாரண பிரசவமாக இருக்கட்டும் - அல்லது சிசேரியன் - சகிச்சை பிரசவமாக இருக்கட்டும் - பொதுவாகவே வயிறு பெருத்துத்தான் காணப்படும். இதற்கு காரணம் - கர்ப்பகாலத்தின் போது சிசு வளர்ச்சிக்கு ஏதுவாக வயிற்று மற்றும் இடுப்பு தசைகள் ஈய்ந்து கொடுக்கின்றன. பிரசவத்தின் பின்னர் - தளர்ந்து போன இந்த தசைகளை




இறுக்கப்படுத்த சில உடற்பயிற்சிகள் உண்டு. இந்த உடற்பயிற்சிகளை - பிரசவம் முடிந்து அடுத்தடுத்த தினங்களிலே மெல்ல மெல்ல ஆரம்பிக்கலாம்.

சிசேரியன் சிகிச்சை செய்தவர்கள் இந்த பயிற்சிகளை 6 மாதம் கழித்து ஆரம்பிக்கலாம். இப்படி கிரமமாக செய்வதனால் - தளர்ச்சியுள்ள தசைகள் - வலுவடைந்து, தொந்தி, அல்லது வயிறு ஏற்பட இடமளிப்பதில்லை மேலும் பிரசவத்தின் பின்னர் செய்யப்படும் பயிற்சிகளால் - பிரசவத்தின் பின்னர் - கருப்பை அறையினுள் தேங்கிக்கிடக்கின்ற இரத்த கழிவுகளும் வெளியேறுவது மட்டுமல்லாமல் கருப்பையும் சீக்கிரமாக தனது பழைய நிலையை அடையும். சிலர் பிரசவத்தின்பின்னர் வயிற்றை இறுக்கி துணி கொண்டு கட்டிக் கொள்வர் - அல்லது ABDOMINAL BELT என்கின்ற வர்த்தக நோக்கில் தயாரிக்கப்பட்ட பட்டியை அணிந்து கொள்வர். வெறுமனே வயிற்றை இறுக்கி கட்டிக் கொள்வதால் வயிறு பெருப்பதை தடை செய்து விடலாம் என்பது உண்மையில்லை. ஓரளவு இவ்வாறான - 'துணி கட்டுதல்' செயல் முறை - ISO-METRIC முறையில் தசைகளை இறுக்கம் செய்தாலும் எதிர்பார்க்கும் அளவிற்கு தசைகள் இறுகமாட்டாது. இந்த செயல் முறையோடு - உடற்பயிற்சியும் சேர்ந்து தான் - பலனைத் தரும். அதுமட்டுமல்ல எந்தவித பிரசவத்தின் பின்னரும் தாயின் உணவு முறைகளில் நாம் கவனம் செலுத்துவதில்லை. முறையாக பிரசவத்தின் போது இழந்த இரத்தத்தை நிறைவு செய்ய - இரும்புசத்து, புரதசத்து அதிகமாக உள்ள உணவுகள் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் நாமோ 'பத்திய உணவு' - கருப்பைக்கு பெலனான உணவு' என்று மாச்சத்து அதிகம் உள்ள கொழுப்பு சத்துள்ள உணவுகளைத்தான் அதிகளவில் தாய்மாருக்கு தருகின்றோம். உடல் உழைப்பு இல்லாத, ஓய்வாக இருக்கும் இந்த காலப்பகுதியில் மாச்சத்தும் கொழுப்பும் - உடலின் கொழுப்பு சத்துக்களை அதிகரிக்கின்றன. இவை முக்கியமாக - குடல் பகுதியை மூடியிருக்கும்.

Mesentery என்ற பகுதியில் கொழுப்பு கலங்களாக சேகரிக்கப்பட்டு - அந்த Mesentery அதிகளவில் வளர்ந்து மேலும் தளர்வுற்றிருக்கும் தசையினூடாக - அல்லது தசையை தள்ளிக்கொண்டு வயிற்றை பெருப்பிக்கின்றன. எனவே உங்களுக்கு இந்த மாதிரியான விஷயங்களால் வயிறு பெருத்திருக்கும். இனி இதனை நிவர்த்தி செய்ய - உணவுக்

## உடல்சூடுதான் காரணமா?

கட்டுப்பாடும், தேகப்பயிற்சியும் அவசியம். ஒரு உணவியல் நிபுணர் - மருத்துவ நிபுணர் என்போரின் கூட்டு ஆலோசனை உங்களுக்கு அவசியம் இன்னொரு முக்கியமான விஷயம் - வயிற்றின் தசைகள் தளர்வுறுவதனால் குடல் பகுதி - வெளியே - Hernia என்கின்ற் குடல் இறக்க முறையில் தள்ளப்படும். இதனை Diverication of Rectus Muscles என்று கூறுவா இந்த Rectus க்கு தசைகள் தான் வயிற்றை இறுக்கமாக வைத்திருப்பவை இந்த கோளாறால் - குடல் வெளியே தள்ளப்படுவதால் இந்த நிலையும் வயிறு பெரிதாக இருக்கும் தோற்றத்தை தரும். எனவே மருத்துவ ஆலோசனை பெற்று உங்கள் கோளாறுக்கு காரணம் அறியப்பட வேண்டும். ✱

**கேள்வி:** பெண் வயது 20. எனது பெண் உறுப்பின் வலது பக்கத்தில் மாதவிலக்கு ஏற்படுவதற்கு முன்னர் ஒரு வீக்கம் ஏற்படுகிறது. மூன்று தடவை சத்திரசிகிச்சை நடைபெற்றும் குணமில்லை சில வேளைகளில் சீழ் வெளியேறியதும் வீக்கம் குறைகிறது. விரைவில் நான் மத்தியகிழக்கு செல்லவுள்ளேன். திருமண பேச்சும் நடைபெறுகிறது. எனது கோளாறு எதனால் ஏற்பட்டது - பரிகாரம் தரவும்.

**பதில்:** யோணி வாசலின் அருகே உள்ள சருமத்தில் - Bartholins Glands என்கின்ற சுரப்பிகள் இருபக்கமும் இருக்கின்றன. பற்றீரியா தொற்றின் காரணமாக இந்த சுரப்புகளில் அல்லது அவற்றின் குழாய்களில் அழற்சி ஏற்பட்டு - அது சில வேளைகளில் சீழ் கட்டியாக மாறலாம். இதனால் அந்தப்பக்கத்தில் வீக்கம் ஏற்படும். சிலவேளைகளில் தொற்றுக்காரணமாக - வீக்கத்துடன் வலியும் வேதனையும் ஏற்பட இடமுண்டு ஒரு சிலருக்கு இந்த சுரப்புகளின் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு வீக்கம் மட்டும் ஏற்படலாம். இதனை Bartholin Cyst என்று கூறுவர் இந்த கோளாறுதான் உங்களுக்கு ஏற்பட்டுள்ள 50 வயதிற்கு குறைந்தவர்களுக்கு - இந்த வீக்கம் அடிக்கடி ஏற்பட்டு ஒரு காலகட்டத்தில் மறைந்தே போய்விடும். எதுவித சிகிச்சையும் தேவையில்லை.

**பதில்:** 50 வயதிற்கு மேல் பெண்களுக்கு இப்படி ஏற்பட்டால் - புற்றுநோய் காரணிகளை சந்தேகித்து - Biopsy என்கின்ற நோயியல் பரிசோதனை அவசியம் தேவை. உங்கள் விஷயத்தில் இந்த சுரப்பி - வீங்கியதே ஒழிய வேதனை வலி, காய்ச்சல் எதுவும் இருக்கவில்லை. இந்த நிலையில் ஏன் சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. என்பது விளக்கமில்லாதிருக்கிறது. அப்படி செய்யப்படும் சத்திரசிகிச்சையின் போது - கட்டியை கீறி - சலத்தை வெளியே விட்டால் மட்டும் போதாது. அப்படி சாதாரணமாக விட்டுவிடின் - கீறப்பட்ட இடம் திரும் பவும் மூடப்பட்டு - சலம் சுரந்து கட்டி அடிக்கடி ஏற்பட இடமுண்டு. பொதுவாக - Marsuplisation என்ற முறையில் கட்டியை பிழைத்து திரும்பவும் அதன் விளிம்புகள் சேராத வண் ணம் பின் னால் வளைத்து தையல் போடுவார்கள். காய[illegible] சில நாள் எடுத்தாலும் இந்த பிரச்சினை முற்றாக குணமடையும். ஞற்கும்- நீங்கள் பெண் நோயியல் நிபுணரின் ஆலோசனை பெறுவது நல்லது. ✱

**கேள்வி:** ஆண் வயது 35 எனக்கு சிறுநீர் வந்தால் அடக்க முடியாது. கழிவறைக்குப் போக முன்னரே சிறுநீர் சிந்திவிடும். எனக்கு எதுவித சிறுநீரக கோளாறுகளும் இல்லை. உடம்புச் சூட்டினால் தான் இப்படி நடை பெறுகின்றது என்று சொல்கிறார்கள் நண்பர் கள். உங்கள் ஆலோ சனைகளை வேண்டுகின்றேன்.

**பதில்:** இப்படி சிறுநீர் கழிக்கும் உணர்வு அவசரமாக ஏற்படுவதையும் சிறுநீர் கழிக்க முன்னரே கழிந்து விடுவதையும் - ஆங்கிலத்தில் Urinary Urgency and Precipitancy என்று கூறுவார்கள். வயதானகாலத்தில் சிலவேளை இப்படி ஏற்படும். புரஸ்டேட் என்ற சிறுநீர்ப்பை வாசலில் உள்ள சுரப்பியில் ஏற்படும் வீக்கம் அல்லது சிறுநீர்ப்பையின் அதீத இயக்கம் (Overractive Bladder) ஆகியவற்றால் இது ஏற்பட வாய்ப்புள்ளது. சில வேளைகளில் சிறுநீர் அடைப்பு (Acute Retetion) இதற்கு காரணமாயிருக்கலாம். ஆனால் அப்படி யிருந்தால் சிறுநீரில் - வீழ்க் கலங்கள் இருக்கும். அத்துடன் எரிவோடு சிறுநீர் கழியும். சிறுநீர்ப்பையில் கற்கள் விளைந்திருந்தால் கூட இப்படி அடக்க முடியாத சிறுநீர் கழிப்பு ஏற்படும். புரஸ்டேட் சுரப்பிகளின் அழற்சியும் இதற்கு இன்னொருகாரணம். இப்பொழுது உங்கள் கேளாறுக்கு பல காரணங்கள் இருக்கின்றன. என்பதை புரிந்து கொண்டிருப்பீர்கள். எனவே நீங்கள் Urologist என்கின்ற விசேட சிறுநீரக கிசிச்சை நிபுணர் ஒருவரின் ஆலோசனையை விரைந்து நாடுவது அவசியம் என்று எண்ணுகின்றேன். ✱

**கேள்வி:** எனது தந்தையார், வயது 73. நீரிழிவு நோய் பாதிப்பு உண்டு. அவர் தனது பதினொரு வயதிலிருந்தே மூக்குக் கண்ணாடி உபயோகித்து வருகின்றார். சமீபத்தில் கண் பரிசோதனைக்கு சென்ற பொழுது கண்ணுக்குள் நீர் (Retinal Fluid) கோர்த்திருப்பதாகவும் அவரது பார்வை 3 அடி தூரத்துக்குத்தான் தெளிவு என்றும் கண்டறியப்பட்டது. பரிசோதித்த டாக்டர் - கண்ணுக்குள் ஊசி மருந்து ஏற்றி இருவாரம் கழித்து 'நீரைக் குறைக்க மூன்று தடவைகள் லேசர் சிகிச்சை செய்ய வேண்டும் என்றும் பின்னர் Cataract சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் என்றும் பதில் கூறினீர். எங்களுக்கு ஒன்றுமே



புரியவில்லை பயமாகவும் இருக்கின்றது. உங்கள் ஆலோசனையை வேண்டுகின்றோம்.

**பதில்:** நான் முன்னர் இந்த வைத்திய பகுதிகளில் அடிக்கடி குறிப்பிடுவதைப் போன்று நீரிழிவு நோய் கண்களுக்கு ஒரு முக்கிய எதிரியாகும். நீரிழிவு நோய்க்கு சரியாக மருந்து செய்தாலும், கட்டுப் பாட்டுக்குள் வைத்திருந்தாலும் கூட - நீரிழிவு நோய் கண்களுக்கு ஓரளவாவது தீங்கு இளைக்கின்றன. அநேகமாக நீரிழிவு நோயாளர்களுக்கு - நீரிழிவு நோய்க்கு ஜோடியாக - அதி உயர் இரத்த அழுத்த நோயும் பொது வாகக் காணப்படுவதுண்டு.

கண்களுக்குள் நாம் பார்க்கும் பொருட்களின் விம்பம் விழும் பகுதி Retina எனப்படும் திரையாகும் படம் எடுக்கும் 'கமெரா'வில் படம் பதிவதற்கு 'பிலிம்' Film Roll எப்படியோ - அப்படியே - இந்த Retina திரையும் பார்வைக்கு அவசியம். இந்த திரையில் நிறையவே மிகச் சிறிய இரத்தக் குழாய்கள் உள்ளன. நீரிழிவு நோய் காரணமாக -இந்த சிறிய இரத்தக் குழாய்களினால் அவர்கள் பாதிக்கப்பட்டு, வலுவிழந்து Retina திரைக்குள் இரத்தத்தையும், இரத்தம் சம்பந்தமான Plasma என்கின்ற திரவத்தையும்- ஒழுக (Leak) விடுகின்றன. இப்படி ஏற்படும் கோளாறை Retinnopathy என்று மருத்துவர் அழைப்பர். பத்து வருடங்களுக்கு நீரிழிவு நோயால் பீடிக்கப்பட்டிருந்தோருக்கு - நிச்சயம் ஓரளவாவது இந்த கோளாறு ஏற்படும் சாத்தியக்கூறு அதிகம். இப்படி இரத்தத்தாலும், திரவத்தாலும் - Retina திரை வீங்கி பார்வை குறைந்து, குருட்டுத்தன்மை ஏற்படலாம். எவ்வளவு விரைவில் இந்தக் கோளாறை கண்டறிந்து சிகிச்சை அளிக்கின்றோமோ அவ்வளவுக்கு மேலும் பார்வை குறைபாடு ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

இதற்கு உங்கள் கண் சிகிச்சை கூறியபடி, ஆரம்பத்தில் ஊசி மருந்து சிகிச்சையும் - அதன் பின்னர் லேசர் சிகிச்சையும் அவசியம். காலம் தாழ்த்தாமல் மருந்துவ ஆலோசனையைப் பின்பற்றவும். ✱

**கேள்வி:** ஆண் வயது 23. கடந்த 3 மாதங்களாக எனது விதைப்பை (Scrotum) பெரிதாகி வருவதை உணர்கின்றேன். எனது ஆண் உறுப்பில் எதுவித மாற்றமும் இல்லை. சைக்கிள் ஓடும் போது, அல்லது உட்கார்ந்து இருக்கும் போது அந்தரமாக இருக்கின்றது. இதற்கு என்ன காரணம்?

**பதில்:** நீங்கள் கடந்த 3 மாதங்களாகத்தான் விதைப்பை பெருத்து வருவதை கவனித்துள்ளீர்கள். இந்த பெருப்பத்தினால் வலியோ,

இலவச மருத்துவ ஆலோசனை பெறுங்கள்
நீங்களும் கேள்விகளை அனுப்பி மருத்துவ ஆலோசனைகளைப் பெறலாம்.
நீண்ட கால அனுபவம் உள்ள பிரபல டாக்டரும் வைத்தியத்துறை எழுத்தாளருமாகிய
டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம்
பதில் தருகிறார்.
இலவச மருத்துவ ஆலோசனை
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நோவோ எதுவும் இருந்திருந்தால் நிச்சயம் இங்கு அதனை குறிப்பிட்டிருப்பீர்கள். நீங்கள் அப்படி எதுவும் குறிப்பிடாததால் - இது - வலி-நோவற்ற விதை வீக்கம் என்று நான் அனுமானிக்கின்றேன். விதை வீக்கத்திற்கு - விதை அழற்சி (Epididymo -- Orchitis) ஒரு காரணம்.

இந்த கோளாறின் போது வலி நிச்சயம் இருக்கும். உங்களுக்கு வலி இல்லாதலால் இது காரணமாக இருக்க முடியாது. அடுத்தடுத்து வலி இல்லாத வீக்கத்துக்கு Hydrocoele என்கிற விதையை சுற்றியுள்ள சவ்வுகளின் இடையே ஏற்படும் நீர்க்கோர்ப்பு காரணமாயிருக்கலாம். மேலும் இலங்கையின் பல கரையோரப் பகுதிகளில் Culex வகை நுளம்புகளினால் பரவுகின்ற Filariasis என்கின்ற யானைக்கால் வியாதியும் விதைகளுக்குச் செல்லுகின்ற நிணநீர் குழாய்களை அடைத்து இப்படியான நீர்க்கோப்பை ஏற்படுத்தும். அதேவேளையில் இன்னொரு முக்கியமான விஷயத்தையும் நினைவில் கொள்ளவேண்டும். விதையில் ஏற்படும் புற்றுநோய் கூட வலி இல்லாத வீக்கத்தால் ஏற்படுத்தும். உங்களுக்கு ஏற்பட்டிருப்பது எந்தக் கோளாறாக இருக்கும் என்பதை அறிய, இரத்தப் பரிசோதனை Filarial Antibody என்கின்ற Fat பரிசோதனை மற்றும் Scan பரிசோதனை என்பவை செய்யப்பட்டு சிகிச்சையளிக்கப்பட வேண்டும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாகா கல்லூரி, கொழும்பு.
## இறுதித் தவணைப் பரீட்சை - Final Term Test
## க.பொ.த.உயர்தரம் - ஜூலை 2009.
### உயிரியல் பகுதி - 1

01. பின்வருவனவற்றுள் எச்சோடிச் சேர்வைகள் N ஐக் கொண்டிராது, P ஐக் கொண்டி ருக்கும்?
1) கேசின், கைற்றின். 2) அல்புமின், RNA 3) கியூற்றின், RUBP
4) கிளைக்கோசன், கொலாஜன். 5) ATP, PEP

02. ஒளி நுணுக்குக்காட்டி தொடர்பான தவறான கூற்று எது?
1) பிரிக்கை வலு 200mm 2) நிற விம்பங்களைப் பெறலாம்.
3) உச்ச உருப்பெருக்கம் × 2000 ஆகும்.
4) உயிருள்ள, உயிரற்ற மாதிரிகளை அவதானிக்கலாம்.
5) உயர் வலுவில் மாத்திரம் நுண்மையான செப்பனிடு பயன்படுத்தப்படும்.

03. DNA மூலக்கூறு தொடர்பான தவறான கூற்று எது?
1) இரண்டு எதிர்ச்சமாந்தர அமைப்புடைய பல்நியுக்கிளியோரைட்டு பட்டிகைகள் உண்டு.
2) DNA இல் ஏற்படும் கட்டமைப்பு மாற்றங்கள் விகாரங்களை உண்டாக்கும்.
3) N மூலகங்களுக்கு இடைப்பட்ட H பிணைப்புகள் 2 பட்டிகைகளையும் நிலையாக வைத்திருக்க முடியும்.
4) சைற்றோசின் 40% தையும் 10% அடினையும் கொண்டது.
5) அடுத்தடுத்த நியுகியோரைட்டுகள் மூலத்திற்கும் $PO4^{3+}$ கூட்டத்திற்கும் இடையே இறுக்கமான பிணைப்பை ஏற்படுத்தும்.


04. பொருத்தமற்ற சோடி எது? (புன்னங்கம் - தொழில்)
1) கொல்கி உடல் - கிளைக்கோலிப்பிட்டு உற்பத்தி.
2) SER- இலைசோசோம் உற்பத்தி. 3) இரைபோசோம்- புரத உற்பத்தி.
4) பேர் ஒட்சிசோம் - அற்ககோலை நச்சகற்றல்.
5) புன்மையத்திகள் - நுண்குழாய்களின் சேர்க்கையும் ஒழுங்கமைப்பும்.

05. நொதியம் தொடர்பான தவறான கூற்று எது?
1) இவை கோளப்புரதங்கள். நீர் ஊடகத்தில் உயிர்ப்பாக இருக்கும்.
2) நொதியம் தாக்கமொன்றின் சமநிலையை மாற்றாது.
3) நொதியத்தின் தனித்துவமானது பூட்டுத்திறப்பு பொறிமுறையின் மூலம் விளக்கப்படும்.
4) நொதியங்களின் தொகுப்பானது கலவட்டத்தில் G2 அவத்தையில் மட்டுமே நடைபெறும்.
5) வெந்நீர் ஊற்றுக்களில் வாழும் பற்றீரியாக்களின் நொதியங்கள் அகவெப்ப நிலையிலும் உயிர்ப்பாக காணப்படும்.

06. குளோரோபில் மூலக்கூற்றின் கட்டமைப்பில் அடங்கியுள்ள மூலகங்கள்,
1) N,Mg,Cl,C 2) C,H,O,N,S 3) Mg,N,Fe,C
4) C,H,O,N,Mg,Fe 5) N,Mg,C


07. ஒளித்தொகுப்பு தொடர்பான சரியான கூற்று,
1) எல்லா ஒளித்தொகுப்பு அங்கிகளும் குளோரோபில் aயைக் கொண்டவை.
2) ஆய்வுகூடத்தில் 'ஹில்' இன் தாக்கத்தைக் காட்ட ஆய்வுகூடங்களில் பொட்டாசியம் பெரிசயனைட்டு பயன்படும்.
3) PGA என்பது ஒளித்தொகுப்பின்போது உற்பத்தியாகும் முதலாவது காபோவைதரேற்றுப் பெறுமதியாகும்.
4) ஒளித்தொகுப்பு 1 இனால் வெளியேற்றப்படும் உயர்சக்தி இலத்திரன் இறுதியில் NADPஇனால் பெறப்படும்.
5) நீருள் ஒளிப்பகுப்பானது பச்சையவுருவெளிப் பஞ்சணையில் நிகழும்.

08. எளிமையான சுவாசமானிகள் இரண்டு தரப்பட்டுள்ளன. பரிசோதனையை ஆரம்பித்து t செக்கனில் குழாயில் ஏறிய திரவ நிரலில் உயரம் A இல் 6cm உம், B இல் 2cm உம் ஆகும். குழாயின் குறுக்கு வெட்டுப்பரப்பளவு $0.2cm^2$ ஆகும். ஆயின், பின்வருவனவற்றுள் தவறானது எது?




1) உறிஞ்சப்பட்ட $O_2$ கனவளவை Aஇன் மூலம் அறியலாம்.
2) உறிஞ்சிய $O_2$ கனவளவுக்கும் வெளியேற்றிய $CO_2$ கனவளவுக்கும் இடையிலான வேறுபாடு B இனால் காட்டப்படுகின்றது.
3) t செக்கனில் உறிஞ்சிய $O_2$ கனவளவு $1.2cm^3$ ஆகும்.
4) சுவாச ஈவு 0.6 ஆகும்.
5) வெளியேற்றிய $CO_2$ கனவளவு $4.0cm^3$ ஆகும்.

09. IUCN செந்தரவுப் புத்தகத்தில் தரப்பட்டுள்ள ஆபத்து மட்டங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.




இங்கு a,d மட்டங்களைச் சேர்ந்த விலங்குகள் முறையே எவை?
1) கொம்பு ஓணான், பசுஞ்சிறுத்தை (கொலதிரியா)
2) ஆசிய யானை, புலத்ஹப்பயா மீன். 3) ஹந்துன் திவியா, மந்தி.
4) பண்டா, கல்லாமை. 5) மலைப்பாம்பு, கொம்பு ஓணான்.

10. ஒரு தோட்டத்தில் காணப்பட்ட விலங்கில் உடலானது 2 தெளிவான பகுதிகளைக் கொண்டது. தலையாடு செயல் இல்லை. உடலின் முற்பக்கத்தில் சில சோடிக் கால்கள் உண்டு. இவ்விலங்கானது எவ்வகுப்பைச் சேர்ந்தது?
1) இன்செக்ரா. 2) அரக்னிடா.
3) கைலோபோடா. 4) ஒலிகோகீற்றா. 5) ரெப்ரிலியா.


11. அப்சசிக் அமிலம், $K^+$, விற்றமின்கள் ஆகியன தாவரத்தினுள் கொண்டு செல்லப்படும் வழிகள் முறையே,
1) காழ், உரியம், காழ் மூலம். 2) காழ், காழ் + உரியம், பரவல் மூலம்.
3) உரியம் + பரவல் உரியம் + காழ், உரியம் மூலம்.
4) பரவல், காழ், காழ். 5) உரியம் + காழ், காழ்+ உரியம், பரவல் மூலம்.

12. பூக்கும் தாவரங்களுக்கு மண், வளி தேவைப்படுவதன் பிரதான காரணம்,
1) புரத உற்பத்திக்குத் தேவையான நைதரசனைப் பெறல்.
2) ஒளித்தொகுப்புக்குத் தேவையான $CO_2$ பெறல்.
3) ஒட்சிசன் போன்ற தாவர வளர்ச்சிப் பதார்த்தங்கள் பெறல்.
4) வேர்களின் சுவாசத்துக்கத் தேவையான $O_2$ பெறல்.
5) மண் நுண்ணுயிர்களின் நோய்களைத் தடுக்க உதவுதல்.

13. பின்வருவனவற்றுள் தவறான இணைப்பு எது?
1) எதிலீன் - பூப்பதைத் தூண்டுதல். 2) ஒக்சிசன் - கன்னிக்கனியமாதல்.
3) சைற்றோக்சைனின் - முதிர்ச்சியைத் தாமதப்படுத்துவதைத் தூண்டுதல்.
4) NAA - தண்டுகளில் வேர்கள் உற்பத்தியைத் தூண்டுதல்.
5) ஜிபரெலின் - வித்துக்களில் உறங்கு நிலைலை ஏற்படுத்தல்.

14. ஓர்க்கிட்டு தாவர வேர்கள் தொடர்பாகத் தவறான கூற்று,
1) ஆரைய கலன்கட்டுக்கள் உண்டு.
2) தெளிவான மேற்பட்டையும் ஃமயவிழையமும் உண்டு.
3) உட்டோல் கப்பாரிக் பட்டிகளும் கொண்ட தனிப்படை.
4) துணை வளர்ச்சி கிடையாது.
5) புடைக்கலவிழையக் கலங்களால் மட்டும் ஆன மேற்படை.

15.




மேற்படி உருக்கள் தொடர்பான தவறான கூற்று முறை,
1) A, B, C முறையே Selaginella, Cycas பூக்குந்தாவர கூட்டங்களாகும்.
2) ஆண் (நுண்) வித்திகள் வித்திக்கலனிலிருந்து வெளியேறும் சந்தர்ப்பங்கள்.
3) பிந்திய நிலையில் B, C மகரந்தக் குழாய்களைத் தோற்றுவிக்கும்.
4) அனைத்திலும் சவுக்குமுளைகள்/ பிசிருடைய விந்துக்கள் தோன்றும்.
5) A இல் மட்டுமே ஆண் கலவாக்கி உண்டு.


16. கூட்டு, தனிவரையப் பூந்துணர் உள்ள தாவரம் எது?
1) Crotalania (கிலுகிலுப்பை) 2) Mangifera
3) Dendrobium 4) Jasmin 5) Stachytarpheta

17. இரைப்பைச் சுவர், இதயச் சுவர் ஆகிய இரண்டிலும் காணப்படாத இழைய வகை/ வகைகள்,
a - சிற்றிடை வெளியிழையம். b - எளிய நிரல் பிசிர்தாங்கு மேலணி இழையம்.
c - நரம்பிழையம். d - வன்கூட்டுத்தசை இழையம்.
e - படை மேலணி.
1) a, b, c 2) b, d, a 3) b, d, e 4) a, d 5) c, d

18. பின்வருவனவற்றுள் உண்மையான கூற்று எது?
1) மனிதனின் கல மேற்பரப்பில் தோன்றும் குருதித்திரளில் பைபிரினோசன் அடங்கியிருக்கும்.
2) மூக்குப் பிரிசுவருள் நார்த்தன்மையுடைய கசியிழையம் அமைந்துள்ளது.
3) நெருக்கமான என்பின் நிறையின் உயர் நூற்றுவீதம் சேதனப்பகுதியாகும்.
4) இலக்கு நரம்பு, Axon இனால் ஆனது.
5) சிறுமணியுருவான வெண்குருதிக் கலன்கள் பெறல், தெளிவாக சிறு கோணங்களைப் கருவைக்கொண்டவை.

19. பின்வரும் கூற்றுகளுள் மனிதனின் கலச்சீராக்கம் தொடர்பான தவறான கூற்று,
1) நுரையீரல்களின் வருகை வாங்கிகள் தூண்டப்பட்டவுடன் தடைசெய்யும் நரம்புகள்.
2) pH பெறுமானம் குறையும்போது உச்சி இரசாயன வாங்கிகள் தூண்டப்படும்.
3) சுவாசத்தின் அடிப்படை சத்தம் நீள்வளைய மையவிழையத்திலுள்ள உட்சுவாசப் பரப்பினால் தொடக்கப்படும்.
4) சுவாசக்கட்டுப்பாட்டில் அலையுரு நரம்புகளும். நாவுரு தொண்டை மண்டையோட்டு நரம்புகளும் பங்குபற்றும்.
5) உட்சுவாச - வெளிச்சுவாச இயைபாக்கம் பரிவகக்கீழில் உள்ள சுவாச இரசாயன மையத்தினாலும் மேற்கொள்ளப்படும்.

20. நுரையீரல்களின் சுவாச கனவளவுகளைக் காட்டும் மேற்படி வரைபில் a,b,c,d,e ஆகிய கனவளவுகள் தொடர்பாக சரியான கூற்று எது?



1) a இன் பெறுமானம் மாறிலி. அது ஒருபோதும் வேறுபட மாட்டாது.
2) ஆரோக்கியமான வளர்ந்த மனிதன் ஒருவனின் dஇன் பெறுமானம் ஏறத்தாழ400 ml ஆகும்.
3) ஆழ்ந்த உட்சுவாசத்தின்போது, aஇற்கு மேலதிகமாக, சுவாசத்தொகுதியினுள் உள்ளெடுக்கப்படும் வளிக்கனவளவு bஇனால் காட்டப்படுகின்றது.
4) e இன் பெறுமானம் அண்ணளவாக ஏறத்தாழ 1000 mlஆகும்.
5) b, c பெறுமானங்களின் கூட்டுத்தொகை d இன் பெறுமானத்துக்கு சமன்.

21. மனித வாயினுள் அமைந்துள்ள கட்டமைப்புகள் தொடர்பான தவறான கூற்று,
1) தாடைக்கீழ் உமிழ்நீர்ச்சுரப்பி - பல சிறுகான்கள் நாக்கின் கீழ் திறக்கும்.
2) சுவையரும்புகள் - நாக்கு மேற்பரப்பில் காணப்படும்.
3) உதிரும் பற்கள் - கடைவாயிற்பற்கள் 8 உண்டு.
4) வேட்டைப்பற்கள் - தனி வேர் உண்டு.
5) மேலண்ணம் - வாய்க்குழியை மூக்குப்பாதையிலிருந்து வேறாக்கும்.

* 22. - 23 பின்வரும் அட்டவணை பற்றியது

| நொதியங்கள் | உற்பத்தி இடம் | விளைவுகள் |
|---|---|---|
| A- தயலின் | E- உமிழ் நீர்ச்சுரப்பிகள் | P- திருச்சின் |
| B- கைமோதிருப்சின் | F- முன்சுறுகுடல் | Q- மோலரோசு |
| C- என்ரரோகைனேசு | G- சதையி | R- சிறியபல் பெப்ரைட்டுகள் |

22. A,B,C நொதியங்கள் உற்பத்தியாகும் இடம்,
1) GFE 2) FGE 3) EGF 4) FEG 5) GEF

23. A,B,C இன் ஊக்குவித்தலினால் பெறப்படும் விளைவுகள்,
1) PRQ 2) RQP 3) QPR 4) QRP 5) PQR

24. குருதிச்சுற்றோட்டத் தொகுதி பற்றிய சரியான கூற்று எது?
1) எல்லா பல்கல அங்கிகளும் இதைக் கொண்டுள்ளது.
2) எல்லா முள்ளந்தண்டுளிகளும் இரட்டைச் சுற்றோட்டத்தைக் கொண்டது.
3) சில முள்ளந்தண்டுளிகள் திறந்த குருதிச் சுற்றோட்டத்தைக் கொண்டவை.
4) எல்லா முள்ளந்தண்டுலிகளும் சுவாச நிறப்பொருளைக் கொண்டவை.
5) முள்ளந்தண்டுளிகளின் அடிப்படை நாடி விற்களின் 4 ஆவது நாடி வில்லில் இருந்து தொகுதிப் பெருநாடி உருவாகிறது.

25. மனிதனின் நாளம் தொடர்பான பொருத்தமற்ற சோடி எது?
1) ஈரல்வாயினாளம் - ஈரலில் திறக்கும்.
2) கீழ்ப்பெருநாளம் - வலது இடது புடைதாங்கி நாளங்கள் இணைவதால் உண்டாகும்.
3) முற்பெருநாளம் - வலது இடது கழுத்து நாளங்கள் இணைவதால் உண்டாகும்.
4) சுவாசப்பை நாளங்கள் - இடது இதய அறையில் 4 நாளங்கள் திறக்கும்.
5) ஈரல் நாளம் - பிரிமென்றகட்டிற்கு அருகில் கீழ்ப்பெருநாளத்தில் திறக்கும்.

26. மானிட கண் பற்றிய சரியான கூற்று எது?
1) விழித்திரையில் அதிகளவு உள்ளவை கூம்புகள் ஆகும்.
2) விழிவெண்படலத்திற்கும் வில்லைகளுக்கும் இடையேயுள்ள அறை கண்ணாடி மயவுடனீரால் நிரப்பப்பட்டுள்ளது.
3) ஆரைக்குரிய தசைகளின் சுருக்கத்தால் கதிராளியின் கண்மணியின் பருமன் சிறியதாகும்.
4) பிசிருடல் மழுமழுப்பான, வன்கூட்டுத் தசைகளைக் கொண்டது.
5) கண்ணுக்குள் புகும் மிகையான ஒளி நிறப்படையினால் அகத்துறிஞ்சப்படும்.

27. இடுப்பு வளையம் பற்றிய பொருத்தமற்ற கூற்று எது?
1) ஒவ்வொரு புடைதாங்கியின் வெளிப்பரப்பிலும் திருவென்பு மூட்டு கொள்வதற்குரிய மேற்பரப்புகள் உண்டு.
2) புடைதாங்கி உச்சியில் தசைகள் இணைக்கப்படும்.
3) பூப்பென்பானது முற்பக்கமாக காணப்படும். இதுவே நிர்நாமவென்பின் மிகச் சிறிய என்பாகும்.
4) நிர்நாம என்பின் மிக வன்மையான என்பு நாரியம் ஆகும்.
5) கின்னக்குழியை தோற்றுவிப்பதற்கு நிர்நாம என்பின் 3 என்புகளும் பங்கு பற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. மானிட முதிர்மூலவுருவின் 6ஆவது மாத இறுதியில் எது காணப்படாது?
1) அதிகளவு என்புகள் ஒசிபேனற்றப்படும். 2) தோல் சுருங்கியிருக்கும்.
3) உடலின் மேற்பரப்பிலுள்ள மயிர்மூடல் அகற்றப்படும்.
4) இதயத்துடிப்பை அளக்கலாம்.
5) கண்புருவங்கள் ஒன்றில் இருந்து ஒன்று வேறாக்கப்படும்.

29. AaBbDd x aabbdd என்ற சோதனை கலப்பில் எப்பிறப்புரிமை காட்டப்பட மாட்டாது?
1) AaBbDd 2) aaBbDd 3) aabbdd 4) aaBbDd 5) AabbDd

30. பிறப்புரிமையில் இணைப்பு பற்றி எது பிழையான கூற்று?
1) ஒரே நிற மூர்த்தத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பரம்பரை அலகுகள் உண்டு.
2) ஒடுக்கற்பிரிவில் பரம்பரை அலகுகளின் குறுக்குப் பரிமாற்றம் நடைபெறும்.
3) இரண்டு பரம்பரை அலகுகளுக்கு இடையேயுள்ள தூரம் கூடும்பொழுது மீளச் சேர்க்கை அமைப்புகள் குறையும்.
4) மீளச்சேர்க்கை வீதமானது பரம்பரையலகுகளுக்கு இடையேயுள்ள தூரத்தைக் காட்டும்.
5) இணைக்கப்பட்ட பரம்பரையலகுகள் ஒன்றாக தலைமுறையுரிமை அடையும்.


31. பின்வரும் விஞ்ஞானிகள் பற்றி திருத்தமற்ற கூற்று எது?
1) இலாமார்க் - அனுகூலமான பேதங்களை தேர்ந்தெடுப்பதன் மூலம் சூழலுக்கு அங்கிகள் சிறப்பாக இசைவாக்கமடையும்.
2) சார்ள்ஸ் லயல் - ஆரம்ப பூமியில் கால நிறை மாற்றங்கள் ஏற்பட்டது.
3) ரூசல் வலசு - கூர்ப்பு பொறிமுறை இயற்கை தேர்வாகும்.
4) தோமஸ் மலதசு - பட்டினி வரும்பொழுது வாழ்க்கையில் போராட்டம் ஏற்படும்.
5) லீனியஸ் - உயிரினங்கள் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவை.

32. ஓர் அரிதான நரம்பு நோய் பின்னடைவான பரம்பரை அலகினால் ஏற்படும். சனத் தொகையில் 1/10,000 இந்நோயினால் பாதிக்கப்படுவர். இப்பின்னடைவான அலகின் காவிகளின் அதிர்வெண் யாது?
1) 0.9801 2) 0.0001 3) 0.0198 4) 0.99 5) 0.0099

33. வெளிறல் நோயின் வரலாற்று/ சந்ததி அட்டவணை பின்வருமாறு:-

◯ - பெண் □ - ஆண்

கருமையாக்கப்பட்டவை ஆண்கள், பெண்கள், காவிகள், நோயுள்ளவர்கள். கருமை யாக்கப்படாதவை ஆரோக்கியமானோர்




இது பற்றிய தவறான கூற்று எது?
1) A ஒரு ஆண் காவி.
2) C, D இன் எல்லா பிள்ளைகளும் நோயுன்னவர்கள்.
3) E பின்னடைவான பரம்பரை அலகைக் கொண்டுள்ளது.
4) இது இலிங்கத்தால் தீர்மானிக்கப்படும் பாரம்பரியம் அல்ல.
5) F ஆனவர் ஓர் ஓரின நுக ஆட்சியுடைய நபரை மணக்கும்பொழுது நோயுள்ள குழந்தைகள் பிறக்காது.

34. பின்வருவனவற்றுள் சரியான கூற்று எது?
1) மாறன மண்டலத்திலுள்ள $O_3$ படை பூமிக்கு U, V கதிர்வீசலின் ஊடுருவ வதைத் தடுக்கும்.
2) முழு நீரினதும் 3% ஐ மனிதன் நுகரமுடியும்.
3) $CO_2$ வும், $NO_2$ வும் பிரதானமாக அமில மழையைத் தோற்றுவிக்கும்.
4) நீர்வட்டமானது சூரிய சக்தியின் உள்ளீட்டுடன் கட்டுப்படுத்தப்படும்.
5) மனிதன் இன்றிலிருந்து 8,000 ஆண்டுகளுக்கு முன்னர் விவசாயத்தை ஆரம்பித்தான்.

35. ஆபத்துக்குரிய இவைகளின் வர்த்தகம் பற்றிய சர்வதேச சமவாயம் எது?
1) பேசல். 2) சைற்றிஸ். 3) கியோற்றோ.
4) றம்சார். 5) உயிர்ப் பல்வகைகளும்.

36. வினாவானது பின்வரும் தரவுகளை தழுவியுள்ளது.
a - நிலக்கரி வலுவீடு அமைத்தல்.
b - கால்நடை வேளாண்மை அதிகரிப்பு.
c - சூரிய தொகுதிகளை பாவித்தல். d - காடுகளை அழித்தல்.
e - கருவலு நிலையங்களை உயிர்ப்பூட்டல்.
இவற்றுள் எது/ எவை பச்சைவீட்டு விளைவுக்கு அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்தும்?
1) a,b,d 2) a,d,e 3) b,c,e 4) a,c 5) a,b,c

37. சிறிய மீன் குடித்தொகை குறையும்போது எது நடைபெறலாம்?
1) நீர்ப்பாம்பினதும், மீன்கொத்தியினதும் குடித்தொகை அதிகரிப்பு.
2) விறாலின் குடித்தொகையை அதிகரித்தல்.
3) அலை விலங்குகளினதும், வாற்பேய்களினதும் குடித்தொகை அதிகரிப்பு.
4) அலைதாவரங்களினதும், அல்காவினதும் குடித்தொகை அதிகரிப்பு.
5) வாற்பேய்களினதும், இறால்களினதும் குடித்தொகை குறைவு.

38. சேதன குளோரின் பூச்சிநாசினியைக் குளத்திற்குச் சேர்க்கும்போது எது குறைந் தளவு பூச்சிநாசினிச் செறிவைக் கொண்டிருக்கும்?
1) நீர்ப்பாம்பு. 2) மீன்கொத்தி. 3) விறால்.
4) அலைதாவரம். 5) சிறிய மீன்.

39. நுண்ணுயிர் உடலெதிரியாக்கிகளைக் கொண்டிராதது எது?
1) இளம்பிள்ளைவாத குற்றுப்பால்.
2) விசர்நாய்கடிக்கு எதிரான குற்றுப்பால்.
3) ஈரல் அழற்சி. 4) முக்கூட்டு குற்றுப்பால். 5) BCG

40. நுண்ணுயிர்பாவனையில் பொருத்தமற்ற சோடி எது?

| | கைத்தொழில் | உற்பத்தி ,நுண்ணங்கி |
|---|---|---|
| 1) | தெத்திராசைக்கிளின் | *Streptomyces aureofaciens* |
| 2) | இலிப்பேசு | *Aspegillus oryzae* |
| 3) | பாற்கட்டி | *Lactobacillus bulgaricus* |
| 4) | இன்சுலின் | *E. Coli* |
| 5) | தும்புக் கைத்தொழில் | பல்லின நுண்ணுயிர்க் குடித்தொகை |

41. நுண்ணங்கிகள்-நோய்கள் தொடர்பான பிழையான கூற்று,
1) நுண்ணங்கிகளின் உக்கிரம் அவற்றின் நோய் ஆக்கிரமிக்கும் இயல்பில் தங்கி உள்ளது.
2) நோய் ஆக்கிரமித்தலுக்கு லெசித்தினேசு நொதியம் காரணமாகும்.
3) நோயாக்கிகளினால் பொசுபோ இலிப்பேசு என்ற கலப்புற நொதியம் உற்பத்தி செய்யப்படும்.
4) நோயாக்கத்திற்கும், விருந்துவழங்கிக்கும் இடையே உள்ள உறவுமுறை இயக்க நிலையானது.
5) பொக்களிப்பான் வைரசின் உக்கிரம் அதிகமாகும்.

42. மாசடைந்த நீரின் அடிப்படைப் பரிகரிப்பில் உள்ளடக்கப்படாத படிமுறை எது?
1) எண்ணெய், கிரிஸ் அகற்றப்படல்.
2) அடையல்தாங்கியில் திண்மப் பதார்த்தங்களின் படிவு.
3) சேதனப்பொருட்களின் ஒட்சியேற்றம். 4) அடையலை அகற்றல்.
5) பெரிய மிதக்கும் பதார்த்தங்கள் அகற்றப்படல்.

43. வளர்ப்பு ஊடகம் பற்றிய பிழையான கூற்று எது?
1) போசணை ஏகார் ஒரு திரவ ஊடகம் ஆகும்.
2) பங்கசுக்களை வளர்க்க உருளைக்கிழங்கு டெக்ஸ்ரோசு பயன்படும்.
3) சக்தி மூலத்திற்காகக் குளுக்கோசு சேர்க்கப்படும்.
4) நுண்ணங்கிகள் ஏகாரை இலகுவாகப் பிரிகையடையச்செய்யாது.
5) ஈரவெப்ப முறையால் கிருமியழிக்கப்படும்.

44. தவறான கூற்று எது?
1) ஊதாக்கந்தக பற்றீரியா ஒளி தற்போசணைக்குரியது.
2) *Salmonella* வின் கலச்சுவர் அகநஞ்சுகளைக் கொண்டது.
3) *Nitrobactor* இரசாயன தற்போசணைக்குரியது.
4) *Norcardia* தூளியங்களை உருவாக்கும்.
5) *Clostridium* அகவித்திகளைத் தோற்றுவிக்கும்.

45. *Necator americanus* பற்றிய சரியான கூற்று,
1) வால் புணர்ச்சித்தகடு/கிழி பெண்புழுவின் பிற்பக்க முளையில் காணப்படும்.
2) $L_3$ குடம்பி மானிட சிறுகுடலில் இரண்டு தடவை தோல்கழற்றலை மேற் கொள்ளும்.
3) மலக்கழிவினாலும், மாசடைந்த நீரினாலும் மனிதனில் தொற்றுதலை ஏற் படுத்தும்.
4) அகக்கருக்கட்டலின் பின்னர் பெண்புழு $L_1$ குடம்பியை உண்டாக்கும்.
5) முதிர் புழுவின் பிரதான உணவு பெருங்குடலில் உள்ள சேதன உணவு.

46. மீன்வளர்ப்பு முறைகளில் தவறானது,
1) இலங்கையில் தூயநீர் மீன்வளர்ப்பு பிரதானமாக விரிவான முறையாலேயே மேற்கொள்ளப்படும்.
2) பல்லின மீன்வர்ப்பில் 3 இந்தியக் கெண்டை இனங்கள் பயன்படுத்தப்படும்.
3) விரிவான வளர்ப்பு முறையின் அறுவடைக்கு பூவலையும், வீச்சுவலையும் பயன்படுத்தப்படும்.
4) இறால்களின் பிந்திய குடம்பி நிலைகள் பொரிப்பகத்தில் உண்டாக்கப்படும்.
5) பகுதி செறிவான வளர்ப்பு முறையில் நீரின் தரம் பேணப்படுவதில்லை.

* a- வண்டு, b- ஈ, c- அந்து, d- மூட்டுப்பூச்சி, e- தத்திவெட்டி.

47. வெட்டி மெல்லும் வாய்ப்பகுதிகளைக்கொண்ட குடம்பிகளை உண்டாக்கும் பூச்சி/ பூச்சிகள்,
1) a,c 2) a,b,c 3) a,c,e 4) d,e 5) b,e,d

48. உழுதல், நீர்வடியச்செய்தல் போன்ற பாரம்பரிய பீடைக் கட்டுப்பாட்டு முறைகளால் கட்டுப்படுத்தப்படும் பூச்சிகள் முறையே,
1) இராணுவப்புழு, கபிலத்தாவரத் தத்தி.
2) மஞ்சள் சந்துகுத்தி, உறைதாங்கிப்புழு.
3) நெல் மூட்டுப்பூச்சி, கபிலத்தாவரத் தத்தி.
4) நெல் இராணுவப்புழு நெல் மூட்டுப்பூச்சி
5) மஞ்சள் சந்துகுத்தி, இராணுவப்புழு.

49. இரண்டு குடித்தொகைகளின் நியம விலகல் 10,14 ஆகும். மாதிரியின் அளவு 10 ஆயின், அண்ணளவான நியம வழு யாது?
1) 30 2) 6 3) 4 4) 2.4 5) 14

50. 80 போஞ்சிக்காய்களின் நீளம் அதிர்வெண் பரம்பல் வரைபைக் காட்டுகின்றது. நியம விலகல் 2மி.மீ, ஆகாரம் 120 மி.மீ. 124 மி.மீ ஐ விட நீளம் கூடியதும், 116 மி.மீ ஐ விட நீளம் குறைந்ததுமான போஞ்சிக்காய்களின் தூண்டற்பேறுகள் முறையே,
1) 1,1 2) 2,1 3) 2,2 4) 2.5,2.5 5) 2,5

* 51-56 ஆம் வினாக்களுக்கான அறிவுறுத்தல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| அறிவுறுத்தல்கள் | |
|---|---|
| a,b,d சரி | - 1 |
| a,c,d சரி | - 2 |
| a,b சரி | - 3 |
| c,d சரி | - 4 |
| வேறுவிடைகள் | - 5 |

51. இதய வைரம் பற்றி எது சரியானது?/எவை சரியானவை?
a) உயிரற்ற கலங்களை மட்டும் கொண்டது.
b) தனின், குங்கிலியப் படிவுகளைக் கொண்டது.
c) நீர், சேமிப்பு உணவு கொண்டது.
d) கடத்தல் செய்முறை இல்லை.
e) இலகுவில் பூச்சிகள், நுண்ணங்கிகளால் தொற்றுதலுக்கு உட்படும்.

52. Mimosa வின் இலை தொட்டவுடன் மடியும். இது பற்றிய சரியான கூற்று/கூற் றுக்கள்,
a) கலங்களின் வீங்குகை வேறுபாடு. b) இது ஓர் ஒளித்திருப்ப அசைவு.
c) காழினூடாக நொதியத்தைக் கடத்தும். d) மீளும் அசைவுடையது.
e) புடைப்புக்கலங்களின் சமனற்ற வளர்ச்சி.

53. மனிதனில் காணப்படும் மெண்டலின் பாரம்பரியமற்ற இயல்புகள்,
a) நேரான பெருவிரல். b) இணைக்கப்பட்ட காதுச்சோணைகள்.
c) இலிங்க துணிபு. d) பல பரம்பரையலகு தலைமுறையுரிமையடைதல்.
a) நேரான பெருவிரல். b) இணைக்கப்பட்ட காதுச்சோணைகள்.
c) இலிங்க துணிபு. d) பல பரம்பரையலகு தலைமுறையுரிமையடைதல்.
e) நாக்கினது உருளாத்தன்மை.

54. சில நோய்களும், அவற்றின் நோயாக்கிகள் உட்புகும் பாதைகளும் தரப்பட்டுள்ளன. அவற்றுள் சரியானது/சரியானவை,
a) தொண்டைக்கரப்பான் - சுவாசப்பாதை.
b) கூகைக்கட்டு - இரைப்பை-குடற்பாதை.
c) சின்னமுத்து - இரைப்பை-குடற்பாதை.
d) ஈரல் அழற்சி - தோலில் உள்ள காயங்கள்.
e) நெருப்புக்காய்ச்சல் - சுவாசப்பாதை.

55. ஒட்டுண்ணிகளைக் கொண்ட வகுப்பு/வகுப்புக்கள்,
a) Trematoda b) Turbellaric c) Hirudinea
d) Insecta e) Cestoda

56. நீடித்து நிலைக்கும் அபிவிருத்தி பற்றிச் சரியானது/சரியானவை,
a) மூலதனம் அழிவுக்கு உட்படுவதைத் தடுத்தல்.
b) தொடர்ச்சியாக நீண்டகாலத்திற்கு உற்பத்தி மட்டத்தைப் பேணுதல்.
c) சூழலுக்கு ஆபத்தான கழிவுப்பொருட்களை வெளியேற்றும் செயற்றிட்டங் களை மேற்கொள்ளாமை.
d) இயற்கை வளங்களின் பாவனையைத் தடுத்தல்.
e) குறுகிய காலத்தில் அபிவிருத்தி இலக்குகளை அடைதல்.

57. பின்வருவனவற்றுள் சரியான தொடர்பு/தொடர்புகள்,
a) இறப்பர் - அரும்பொட்டுதல்.
b) உருளைக்கிழங்கு - தண்டுவெட்டுத்துண்டங்கள்.
c) வாழை - இழைய வளர்ப்பு.
d) நெல் - வித்துமுளைப்பதால் பெறப்படும் நாற்றுக்கள்.
e) வெற்றிலை - வித்துமுளைத்தல்.

58. சில மீன்களும் அவற்றின் புறவுருவ இயல்புகளும் தரப்பட்டுள்ளன. அவற்றுள் சரியானது/சரியானவை,

| | மீன் | உருவவியல் இயல்புகள் |
|---|---|---|
| a) | பொதுக்கெண்டை | சோடித் தொடுமுளைகள். |
| b) | திலாப்பியா | முதுகுப்புறச் செட்டையில் முட்கள் இல்லை. |
| c) | சூரன்/சூரை | சுயாதீன முதுகுப்புற சிறுசெட்டைகள். |
| d) | பாரை | திண்ம, பக்கச் செதில்களை விளிம்பில் கொண்ட பக்கக்கோடு. |
| e) | சுறா | ஓரினமான வாற்செட்டை. |

59. உடல்வெப்பநிலை அதிகரிப்புக்கு உதவாதது,
a) வியர்வைச்சுரப்பிகள் தூண்டப்படல். b) தோலின் குருதிக்கலன்கள் விரிதல்.
c) வெப்பக்கட்டுப்பாட்டு மையம். d) றவுணின் குழியங்கள்.
e) அதிரினலீன் ஓமோன்.

60. a,b,c,d,e பற்றி பிழையானது/பிழையானவை,
a) உணர்திறனுள்ள கணத்தாக்கங்கள் A யினால் தேர்ந்தெடுக்கப்பட்டு மூளைய மேற்பட்டையின் பொருத்தமான இடங்களுக்கு வழிகாட்டப்படும்.
b) B இல் நரம்புக்கலங்களில் கலவுடல்கள் காணப்படும்.
c) C யினால் மூளைய முண்ணான் பாய்பொருள் சுரக்கப்படும்.
d) D யினால் இச்சிசைவழித் தசைகளின் இயைபாக்கம் மேற்கொள்ளப்படும்.
e) E யில் வெண்சடப்பொருள் ஆழமாகவும், நரைச்சடப்பொருள் சுற்றயலிலும் காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்தரங்குக் குறிப்புகள்
# பொருளியல்
## V .பரமேஸ்வரன்.

1. (i) நடைமுறையில் உற்பத்தி சாத்திய வளையியானது வெளிநோக்கி குவிவடைந்திருப்பதற்கான காரணத்தை விளக்குக.
(ii) பின்வருவன ஒவ்வொன்றையும் ஆக்கஇயல்தகவு எல்லை வரைபடங்களில் காட்டி விளக்குக.
(அ) பொருளாதார வள்ர்ச்சியினால் வேலையின்மை ஏற்படல்
(ஆ) பொருளாதார மந்தநிலை தோன்றுதல்
(இ) பொருளாதாரத்தில் கீழுழைப்புநிலை தோன்றுதல்
(ஈ) வறட்சி காரணமாக விவசாய உற்பத்தி பாதிப்படைதல்
(உ) தொழிலாளர் வேலைநிறுத்தத்தில் ஈடுபடல்
(ஊ) பொருளாதார வளர்ச்சியின்போது விவசாயத்துறையின் சார்பு ரீதியான முக்கியத்துவம் குறைதலும் கைத்தொழில்துறையின் சார்புரீதியான முக்கியத்துவம் அதிகரித்தலும்
(எ) உற்பத்தியில் வினைத்திறன் நிலவுதல்
(ஏ) வளப்பங்கீட்டில் வினைத்திறன் நிலவுதல்

2. (i) நுகர்வோன் மிக்க, உற்பத்தியாளன் மிகை ஆகியவற்றை வரையறுத்து வரைபில் காட்டுக.
(ii) பின்வரும் வரைபடத்தை பயன்படுத்தி கீழே தரப்படும் வினாக்களுக்கு விடைதருக.
(அ) வரிக்குமுன் நுகர்வோன் மிகை (ஆ) வரிக்குப்பின் நுகர்வோன் மிகை
(இ) வரிக்குமுன் உற்பத்தியாளன் மிகை (ஈ) வரிக்குப்பின் உற்பத்தியாளன் மிகை
(உ) வழங்குனரின் மொத்த வருமானம்

3. a. (i) உற்பத்தியில் வினைத்திறன், வளப்பங்கீட்டில் வினைத்திறன் ஆகியவற்றை விளக்குக.
(ii) ஊழிய விளைதிறன் என்றால் என்ன? இலங்கையில் ஊழிய விளைதிறன் எவ்வாறு கணிப்பிடப்படுகின்றது
(iii) சிக்கன இலாபம் என்றால் என்ன?

b. (i) உற்பத்தியில் வினைத்திறன், வளப்பங்கீட்டில் வினைத்திறன் ஆகியவற்றை விளக்குக.
(ii) ஊழிய விளைதிறன் என்றால் என்ன? இலங்கையில் ஊழிய விளைதிறன் எவ்வாறு கணிப்பிடப்படுகின்றது
(iii) சிக்கன இலாபம் என்றால் என்ன?
(iv) ஒருவர் தேசிய சேமிப்பு வங்கியில் (வருடாந்தம் 22% வட்டி வழங்கும்) நிலையான வைப்பொன்றில் ரூபா 100,000 ஐ வைப்புச் செய்திருந்தார். அவர் அத்தொகையைப் பயன்படுத்தி ரூபா 15000 மாதச் சம்பளம் தரக்கூடிய அரசாங்க வேலை ஒன்றையும் தியாகஞ் செய்து, மாதமொன்றுக்கு 8,000 ரூபாவிற்கு வாடகைக்குக் கொடுக்கக் கூடிய தனது கட்டிடத்தில் வியாபாரமுயற்சி ஒன்றை ஆரம்பித்தார். அவ்வியாபாரம் மூலம் விற்பனை செய்த பொருட்களுக்கான வருடாந்த செலவு ரூபா 80000 ஆகும். வருடாந்த விற்பனை வருமானம் 400,000 ரூபா ஆகும்.
இவ்வணிக முயற்சி தொடர்பான கணக்கியல் இலாபம், சிக்கன இலாபம் ஆகியவற்றை கணிப்பிடுக.

3. a.(i) கட்டில்லாச் சந்தைப் பொருளாதாரத்தில் விலைகளின் முக்கிய மூன்று தொழிற்பாடுகளையும் விளக்குக..
(ii) கிஃபன் பண்டம் (Giffen Goods) வெப்லன் பண்டம் (Veblen Goods) ஆகியவற்றை வேறுபடுத்துக.
(iii) சாதாரண பண்டம், இழிவுப் பண்டம், கிஃபன் பண்டம் ஆகியவற்றிற்கு வருமான விளைவு, பதிலீட்டு விளைவு, விலைவிளைவு என்பன எவ்வாறு காணப்படும் என்பதை கூறுக.
(iv) செயற்படு கேள்வி (Effective Demand) என்பதன் கருத்து யாது?
(v) நிரம்பல் விதி தொழிற்படுவதற்கான காரணத்தை விளக்குக.

b. ஒரு போட்டிச் சந்தையில் பின்வரும் கேள்வி, நிரம்பல் தொழிற்பாடுகள் தரப்பட்டுள்ளன.

Qd = 120 - 10p Qs = 40 + 10p
(i) மேலுள்ள சமன்பாடுகளை பயன்படுத்தி கேள்வி நிரம்பல் வளையிகளை வரைந்து சமநிலை விலையையும் தொகையையும் காட்டுக.
(ii) சமநிலையில் உற்பத்தியாளர் மிகையை மதிப்பிடுக.
(iii) இப்பண்டத்தின்மீது அரசாங்கம் 2/= வரியை விதிக்குமாயின் வரிக்கு பின்னரான உற்பத்தியாளர் மிகையை கணிக்க.
(iv) வரிக்கு பின்னரான உற்பத்தியாளரின் மொத்த வருமானத்தையும் தேறிய வருமானத்தையும் கணிப்பிடுக.
(v) நலன் இலப்பு

4. (i) ஒரு பண்ட விலை வீழ்ச்சியினால் ஏற்படும் வருமான விளைவையும் பதிலீட்டு விளைவையும் விளக்குக.
(ii) பின்வருவன எத்தகைய பொருட்களுக்கு காணப்படும்
அ) எதிரக்கணிய விலைசார் கேள்வி நெகிழ்ச்சி
ஆ) எதிர்க்கணிய குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சி
இ) எதிர்க்கணிய வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி
ஈ) நேர்க்கணிய விலைசார் கேள்வி நெகிழ்ச்சி
உ) நேர்க்கணிய குறுக்குக் கேள்வி நெகிழ்ச்ச
ஊ) நேர்க்கணிய வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி

5. (i) பேரினப் பொருளாதாரம் ஒன்றில் மொத்தக் கேள்வி (Aggregate Demand) என்பதனால் கருதப்படுவது யாது?
(ii) "மொத்தக் கேள்வியும் (AD) மொத்த நிரம்பலும (AS) சமப்படும் இடத்தில் சமநிலை வெளியீடு நிர்ணயிக்கப்படும்". இந் நிலமையினை ஒரு வரிப்படத்தில் காட்டுக.
(iii) திறந்த பொருளாதாரம் தொடர்பான தரவுகள் பின்வருமாறு:
C = 60 + 0.8y
I = 300 பில்லியன் ரூபா G = 200 பில்லியன் ரூபா
T = 100 பில்லியன் ரூபா X = 250 பில்லியன் ரூபா
M = 150 பில்லியன் ரூபா
அ) சமநிலையின் போதான மொத்த கேள்வி மட்டத்தை கணிப்பிடுக.
ஆ) பாதீட்டு நிலுவை, வர்த்தக நிலுவை ஆகியவற்றை காண்க.
இ) செலவுப்பெருக்கியின் பெறுமதி யாது?

6. (i) எளிய பொருளாதாரம் ஒன்றில் முதலீடு 400 பில்லியன் ரூபாவினால் அதிகரித்த போது சமநிலை வெளியீடு 1000 பில்லியன் ரூபாவினால் அதிகரித்தது எனின் பொருளாதாரத்தின் எல்லை நுகர்வு நாட்டத்தின் பெறுமதி யாது?
(ii) மூடிய பொருளாதாரம் ஒன்றில் எல்லை நுகர்வு நாட்டம் 0.8 ஆக காணப்பட்ட போது நேர் வரி 200 பில்லியன் ரூபாவினால் அதிகரித்தால் சமநிலை வெளியீட்டில் எத்தகைய மாற்றம் ஏற்படும்.
(iii) பொருளாதாரம் ஒன்றில் நேர்வரியை 100 பில்லியன் ரூாவினால் குறைப்பதா அல்லது அரச செலவை 100 பில்லியன் ரூபாவினால் அதிகரிப்பதா என எண்ணுமாயின் எதன் விளைவு பொருளாதாரத்தில் அதிக விரிவாக்க விளைவை ஏற்படுத்தும்? (எல்லை நுகர்வு நாட்டம் 0.75 எனக்கொள்க.)
(iv) திறந்த பொருளாதாரம் ஒன்றில் சேமிப்பு 20 பில்லியன் ரூபாவாகவும், முதலீடு 15 பில்லியன் ரூபாவாகவும், நேர்வரி 10 பில்லியன் ரூபாவாகவும், அரச செலவு 20 பில்லியன் ரூபாவாகவும், இறக்குமதி 5 பில்லியன் ரூபாவாகவும், ஏற்றுமதி 10 பில்லியன் ரூபாவாகவும் காணப்பட்டது எனின் பொருளாதாரத்தின் தேசிய வருமான சுற்றோட்டம், மொத்த கேள்வி மட்டம் ஆகியவற்றில் எத்தகைய மாற்றம் ஏற்படும்?

7. பின்வரும் கூற்றுக்களை ஏற்றுக்கொள்வீரா? உமது விடையை விளக்குக.
(i) திறந்த பொருளாதாரமொன்றில் நடைமுறைச் சந்தை விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியும் மொத்த உள்நாட்டுச் செலவும் சமனாகும்.
(ii) திறந்த பொருளாதாரமொன்றில் மெய்த்தேசிய வருமானமும் மெய்த் தேறிய உற்பத்தியும் சமனாகும்.
(iii) அரச பாதீட்டின் சமூல நிலுவையானது குறையாகக் காணப்படுதல் அரச சேமிப்பு எதிர்க் கணியமாக உள்ளதை எடுத்துக்காட்டும்.

8. (i) இலங்கையில் அரசாங்க நடைமுறைச் செலவீட்டின் பிரதான கூறுகள் யாவை?
(ii) அண்மைய ஆண்டுகளில் அரச நடைமுறை செலவீட்டில் நீர் அவதானிக்கும் மாற்றங்கள் யாவை?
(iii) இம்மாற்றங்களின் பொருளாதார விளைவுகள் யாவை?
(iv) அண்மைய ஆண்டில் இலங்கை அரச செலவுக் கட்டமைப்பைத் தருக


1. (i) பொருளியல் வளங்களையும், பொருளியல் சாராத வளங்களையும் வேறுபடுத்துக.
(ii) வெளிப்படையான செலவு (Explicit Cost) உளவாரியான செலவு (Implicit Cost), பொருளியல் செலவ (Economic Cost) ஆகியவற்றை வேறுபடுத்துக.
(iii) மாற்றல் கட்டணம், பொருளாதார வாடகை ஆகியவற்றை வேறுபடுத்துக.
(iv) எந்த சந்தர்ப்பத்தில் ஊழியம் பெறும் வருமானம் முழுவதும் பொருளாதார வாடகையாக காணப்படும்.

2. பொருளாதாரமொன்றின் ஆக்க இயல்தகவு எல்லையின் சார்பு பின்வருமாறு தரப்படுகின்றது.

$$Y = 5000 - 2.5x$$

(i) கிடையச்சில் $x$ பொருள் உற்பத்தியையும் நிலைக்குத்தச்சில் y பொருள் உற்பத்தியையும் குறிக்கும் ஆக்க இயல்தகவு எல்லையை வரைக.
(ii) ஒரு அலகு $x$ பொருள் உற்பத்திக்கான அமையச் செலவு யாது?
(iii) ஒரு அலகு y பொருள் உற்பத்திக்கான அமையச் செலவு யாது?
(iv) இப்பொருளாதாரம் y பொருள் உற்பத்தியை 3000 அலகுகளிலிருந்து 4000 அலகுகளாக அதிகரிப்பதற்கான அமையச் செலவு யாது?
(v) தற்பொழுது $x$ பொருள் உற்பத்தியில் புதிய தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவதாகக் கொள்க. இதன் காரணமாக $x$ பொருள் உற்பத்தி 25% இனால் அதிகரிப்பின்,
(a) புதிய உற்பத்தி சாத்திய வளையியை வரைக.
(b) புதிய உற்பத்தி சாத்திய வளையியின் சார்பினைத் தருக.

3. (அ) பூச்சிய சிக்கன இலாபம், நேர்க்கணிய சிக்கன இலாபம் ஆகியவற்றை வேறுபடுத்துக.
(ஆ) நிறைபோட்டி நிறுவனமொன்று பற்றிய தரவுகள பின்வருமாறு




பின்வருவனவற்றைத தருக.
(i) இலாபத்தை உச்சப்படுத்தும் நிறுவனவெளியீட்டு மட்டம்
(ii) அலகு விற்பனைவிலை
(iii) சராசரிச் செலவு
(iv) சராசரி மாறும் செலவு
(v) சராசரி நிலையானசெலவு
(vi) அலகு இலாபம்
(vii) நிறுவனம் தொழிலைவிட்டு வெளியேறாமல் இருப்பதற்காக எதிர்பார்க்கும் குறைந்தபட்சவிலை
(viii) நிறுவனத்தின் குறுங்கால நிரம்பல் கோட்டுக்குரிய புள்ளிகள்

4. போட்டிச் சந்தையொன்றில் குறித்த பொருளுக்கு நிலவிய கேள்வி, மிக்க, வழங்கல் பற்றிய தரவுகள் பின்வருமாறு.

Qd = 350 - 6p Es = -300 + 12p

(i) சமநிலைவிலை, சமநிலைத்தொகை ஆகியவற்றை கணிப்பிடுக.
(ii) இப்பண்ட உற்பத்திமீது அரசாங்கம் 50% பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) விதிப்பின் புதிய சமநிலைவிலை, சமநிலைத் தொகை ஆகியவற்றைக் கணிப்பிடுக.
(iii) அலகுக்கான வரியின் அளவு யாது? இதில் நுகர்வோர், உற்பத்தியாளர் செலுத்தும் அளவுகள் யாவை?
(iv) வரிவிதிப்பின் பின்னரான உற்பத்தியாளரின் தேறிய வருவாய் எவ்வளவு?
(v) வரிக்குப் பின்னரான நுகர்வோன் மிகை, உற்பத்தியாளன் மிகை ஆகியவற்றைக் காண்க.

5. (அ)(i) வீக்க இடைவெளி, சுருக்க இடைவெளி ஆகியவற்றை விளக்குக.
(ii) வரிப்பெருக்கி, மாற்றல் பெருக்கி, சமநிலை வரவு செலவுத்திட்டப் பெருக்கி ஆகியவற்றை விளக்குக.
(iii) எளிய பொருளாதாரமொன்றில் சமநிலை வெளியீட்டு மட்டம் ரூபா 500 மில்லியனிலிருந்து ரூபா 700 மில்லியனாக அதிகரித்தது எனக் கொள்க. இப்பொருளாதாரத்தின் எல்லை நுகர்வு நாட்டத்தின் பெறுமதி 0.75 எனின் முதலீட்டில் ஏற்பட்ட மாற்றத்தின் பெறுமதி எவ்வளவாக இருக்கும்?
(ஆ) அரச தலையீடற்ற கற்பனையான திறந்த பொருளாதாரமொன்று பற்றிய தரவுகள் பின்வருமாறு.
நுகர்வு C = 150 + 0.8y
முதலீடு I = 250 பில்லியன் ரூபா
ஏற்றுமதி X = 100 பில்லியன் ரூபா
இறக்குமதி M = 20 + 0.2y
(i) இப்பொருளாதாரத்தின் சமநிலை வெளியீட்டு மட்டம் யாது?
(ii) வருமானப் பெருக்கியின் பெறுமதியைக் காண்க.

6. (அ) கற்பனையான பொருளாதாரமொன்றின் தேசிய கணக்கீடு தொடர்பான தரவுகள் பின்வருமாறு.

| | பில்லியன் ரூபா |
|---|---|
| வட்டி | 250 |
| வாடகை | 350 |
| பங்குலாபங்கள் | 200 |
| பகிரப்படாத இலாபங்கள் | 140 |
| ஊழியருக்கான கொடுப்பனவுகள் | 500 |
| கம்பனி வருமான வரி | 100 |
| நேரில் வரிகள் | 80 |
| மூலதன நுகர்ச்சி | 50 |
| மானியக் கொடுப்பனவுகள் | 20 |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | (-60) |

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.
(i) தேசிய வருமானம்
(ii) நடைமுறைக் காரணிச்செலவு விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி
(iii) நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த தேசிய உற்பத்தி

(ஆ) இலங்கையின் தேசிய கணக்கீட்டில் பணிகள் துறையின் தற்போதைய உள்ளடக்கங்களைத் தருக. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பணிகள் துறையின் பங்களிப்பு வீதம் அண்மைய ஆண்டில் எவ்வாறு உள்ளது?

7. (அ) தேசிய கணக்குகளை கணிப்பீடு செய்யும்போது பின்வருவன கணிப்பீட்டில் உள்ளடக்கப்படுமா, இல்லையா எனக் கூறுக. (ஒவ்வொரு விடைக்கான விளக்கத்தையும் தனித்தனியே தருக)
(i) அரசு பெற்ற கடன்களுக்காக செலுத்தும் கடன் வட்டிக் கொடுப்பனவுகள்.
(ii) ஓய்வுபெற்ற அரசாங்க சேவையாளர் ஒருவர் பெறும் மாதாந்த ஓய்வூதியம்
(iii) பல்கலைக்கழக மாணவன் ஒருவன் அரசிடமிருந்து பெறும் புலமைப்பரிசில்
(iv) கொழும்பு பங்குச் சந்தையில் கம்பனி ஒன்றின் பங்குகளை ஒருவர் கொள்வனவு செய்தல.
(v) பங்குத்தரகு நிறுவனமொன்று பெறும் தரகுப்பணம்
(vi) புதிய வீடு ஒன்று நிர்மாணிக்கப்படல்
(vii) ஏற்கனவே உள்ள வீடுகளின் உடமை
(viii) காப்புறுதி ஒன்றின் கொள்வனவு

(ஆ) "வெளிவாரி நிலைகள் காணப்படும்போது உற்பத்தியானது உத்தம மட்டத்தை அடைவதில்லை" இக்கூற்றை ஏற்பீரா? காரணம் தருக.

இ) அரசாங்கத்தின் தோல்வி என்பதனால் கருதப்படுவது யாது?

8. (i) பொதுச் சொத்து வளங்கள் என்பதனால் கருதப்படுவது யாது?
(ii) பொதுப் பொருட்களை வழங்குவதில் சந்தைகள் ஏன் தோல்வியடையலாம் என்பதனையும் சமூக நலப் பொருட்களை ஏன் அவை குறைவாக வழங்குகின்றன என்பதையும் விளக்குக.
(iii) பொருளாதாரச் சமமின்மையினின்றும் எழும் சந்தைகளின் தோல்வியை அரசாங்கம் எவ்வாறு சரிப்படுத்த முயலும்?
(iv) தனியார் பண்டங்கள், போலிப் பொதுப் பண்டங்கள், தூய பொதுப்பண்டங்கள் ஆகியவற்றின் பிரதான வேறுபாடுகளைத் தருக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியல்-II

1. (i) உயர்வலுப்பணம் என்பதனால் கருதப்படுவது யாது? உயர்வலுப்பணத்தை தீர்மானிக்கும் காரணிகள் யாவை? (ii) உயர்வலுப்பணத்திற்கும், பணவழங்கலுக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக.
(iii)பணப்பெருக்கி, பணவாக்கப்பெருக்கி ஆகியவற்றை வேறுபடுத்துக.

2. (i) வினைத்திறனான திறந்த சந்தை நடவடிக்கை (Active Open Market Operation - AOMO) என்பதனால் நீர் கருதுவது யாது?
(ii) அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமை (Real Time Gross Settlement System-RTGS) என்றால் என்ன? இம்முறையின் அனுகூலங்கள் யாவை?
(iii)பொதுவிலை மட்டத்தின் ஒரு அளவீடாக் பழைய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணுடன் ஒப்பிடும் போது புதிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் காணப்படும் சிறப்பம்சங்கள் யாவை?

3. வங்கித்தொழில் முறைமையிலுள்ள வணிகவங்கி ஒன்றின் ஐந்தொகை பின்வருமாறு தரப்படுகின்றது.

| பொறுப்புக்கள் (மில்லியன் ரூபா) | | சொத்துக்கள் (மில்லியன் ரூபா) | |
|---|---|---|---|
| வைப்புக்கள் | 60000 | ஒதுக்குகள் | 15000 |
| பிணைகள் | 20000 | | |
| கடன்கள் | 25000 | | |
| | 60000 | | 60000 |

(அ)ஒதுக்குவீதம் 15% ஆயின் இவ்வங்கி வழங்கக்கூடிய புதிய கடன்களின் உச்ச அளவு யாது?
(ஆ)இம்மேலதிக கடன்களை வழங்கிய பின்னர் வங்கியின் ஐந்தொகை எவ்வாறு மாற்றமடையும்?
(இ)இவ்வங்கி புதிய கடன்களின் பொருட்டு வழங்கிய காசோலைகள் யாவும் வங்கிக்கெதிராக தீர்ப்பனவு செய்யப்பட்ட பின்னர் வங்கியின் ஐந்தொகை எவ்வாறு அமையும்?
(ஈ) ஆரம்ப ஐந்தொகையை கவனத்தில் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.
(உ) மத்திய வங்கியினால் வெளியிடப்படும் திறைசேரி உண்டியல்களில் ரூபா 4000 மில்லியன் பெறுதியான உண்டியல்களை இவ்வணிகவங்கி கொள்வனவு செய்யுமாயின் வங்கியின் ஐந்தொகை எவ்வாறு மாற்றமடையும்?

4. (i) முழுவறுமை (Absolute poverty) சார்பு வறுமை (Relative Poverty) ஆகியவற்றை வேறுபடுத்துக.
(ii) ஆள்வீதச் சுட்டெண் (Head Count Inderx) வறுமை இடைவெளிச் சுட்டெண் (Poverty Gap Index) ஆகியவற்றை சுருக்கமாக விளக்குக.
(iii)வறுமையின் நச்சுவட்டம் (Vicious Circle of Poverty) என்பதனால் கருதப்படுவது யாது?
(iv)பின்வருவன தொடர்பான இலங்கையின் அண்மைக்கால புள்ளிவிபரங்களைத் தருக.
அ) மானிட அபிவிருத்திச் சுட்டெண் (HDI)
ஆ) ஆள்வீதச் சுட்டெண் (HCI)
இ) சனத்தொகையின் இயற்கை அதிகரிப்பு வீதம் (NIR)

5. (i) அண்மைய ஆண்டில் இலங்கையின் வேலையின்மை வீதங்களின் பால் ரீதியான பங்களிப்புக்களை தருக.
(ii) குறித்த ஆண்டு ஒன்றிற்கான இலங்கையின் குடித்தொகை பற்றிய தரவுகள் பின்வருமாறு:

| | மில்லியன் |
|---|---|
| மொத்த சனத்தொகை | 1000 |
| 10 வயதும் 10 வயதுக்கு மேற்பட்டதுமான வீட்டுத்துறை சனத்தொகை | 800 |
| 15 தொடக்கம் 64 வயது வரையான சனத்தொகை | 600 |
| தொழில் புரிபவர்கள் | 450 |
| தொழில் தேடுவோர் | 50 |
| தொழில் செய்ய விருப்பம் அற்றவர்கள் | 50 |

6. (i) இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கையின் கருவிகள் யாவை?
(ii) மத்திய வங்கி பயன்படுத்தும் நாணயக்கொள்கையின் கருவிகளில் தற்பொழுது எவற்றிற்கு மத்தியவங்கி முக்கியத்துவம் கொடுக்கின்றது? எக்கருவிகளைப் பயன்படுத்துவதை மத்திய வங்கி தற்பொழுது நிறுத்தியுள்ளது?
(iii)நாணயக் கொள்கையானது எப்பிரதான வழிகளினூடாக தனது விளைவுகளை ஏற்படுத்துகின்றது என்பதனை இனங்காண்க.
(iv)பணவீக்கமானது கேள்விப் பக்கத்திலும் அதேவேளை நிரம்பல் பக்கத்திலும் தோன்ற முடியும்.
(அ )பணவீக்கத்தை ஏற்படுத்தும் கேள்விப்பக்க காரணிகள் யாவை?
(ஆ) பணவீக்கத்தை ஏற்படுத்தும் நிரம்பல் காரணிகள் யாவை?

7. (i) பணத்திற்கான கேள்வி என்றால் என்ன? இதனை நிர்ணயிக்கும் காரணிகளை விளக்குக.
(ii) பிணைகளின் விலைகள், வட்டிவீதம், உத்தேச நோக்க பணக் கேள்வி ஆகியவற்றுக்கிடையிலான தொடர்புகளை விளக்குக.
(iii)ஒரு நாட்டின் பணநிரம்பலில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் கருதுக. இத்தகைய நிலமையில் ஏற்படக்கூடிய தாக்க விளைவுகளை விளக்குக.

8 . (i) பணநிரம்பலை நிர்ணயிக்கும் காரணிகளை. தருக.
(ii) வணிக வங்கிகளின் வைப்பாக்கம் என்றால் என்ன?
(iii)பொருளாதாரம் ஒன்றில் வைப்பாக்கத்தை தீர்மானிக்கும் காரணிகள் எவை?
(iv)ஆரம்ப வைப்பு 1000 ரூபா, சட்டரீதியான ஒதுக்குவீதம் 10 வீதம், மிகை ஒதுக்குகள் எதுவும் பேணப்படவில்லை கேள்வி வைப்பின் ஊடாக மட்டும் கொடுக்கல் வாங்கல் இடம்பெறக்கூடிய பொருளாதாரம் ஒன்றில் பணவாக்கம் இடம் பெறும் செயன்முறையை விளக்குக..
(v) இலங்கையின் சென்மதி நிலுவையின் அண்மைக்கால போக்குகள் எவ்வாறு உள்ளன?

9. பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய இரு நாடுகள் ஒரு அலகு உள்ளீட்டை பயன்படுத்தி துணி, கோதுமை ஆகியவற்றில் உற்பத்தி செய்யக்குடிய அளவுகள் பின்வருமாறு.

| | பிரான்ஸ் | இங்கிலாந்து |
|---|---|---|
| கோதுமை | 20 | 10 |
| துணி | 10 | 8 |

(i) எந்த நாடு எந்தப் பொருளில் முழுநன்மையை கொண்டுள்ளது?
(ii) எந்த நாடு எந்தப் பொருளில் ஒப்பீட்டு நன்மையை கொண்டு ள்ளது?
(iii) நாடுகளின் பரிமாற்ற விகிதம் எவ்வாறு அமையும்.
(iv) இருநாடுகளிடமும் தலா 100 அலகு உள்ளீடுகள் இருப்பதாகவும் அவற்றில் இருபொருட்களின் உற்பத்திக்கும் சம அலகுகள் வீதம் ஒதுக்குவதாகவும் கொண்டால் சர்வதேச வர்த்தகத்திற்கு முன்னர் உலக உற்பத்தி எவ்வாறு காணப்படும்.
(v) பிரான்ஸ் ஒப்பீட்டு நன்மையை கொண்டுள்ள பொருளின் உற்பத்திக்கு 80 வீத உள்ளீடுகளையும் இங்கிலாந்து ஒப்பீட்டு நன்மையை கொண்டுள்ள பொருளுக்கு முழு உள்ளீடுகளையும் ஒதுக்கினால் சர்வதேச வர்த்தகத்திற்கு பின்னர் உலக உற்பத்தி எவ்வாறு காணப்படும்?
(vi)பிரான்ஸ் கோதுமையில் 500 அலகுகளை ஏற்றுமதி செய்து துணியில் 350 அலகுகளை இறக்குமதி செய்யுமாயின் இரு நாடுகளினதும் நுகர்வுப் புள்ளிகள் எவ்வாறு காணப்படும் என்பதனை உற்பத்தி சாத்திய வளையிகளில் காட்டுக

10. (i)ஒரு நாடு நாணயப் பெறுமதி இறக்கம் செய்வதனால் அதன் வர்த்தக நிலுவையில் எவ்வாறு முன்னேற்றம் ஏற்படும் என்பதனை விளக்குக.
(ii) நாணயப்பெறுமதி இறக்கம் செய்வதன் மூலம் வர்த்தக நிலுவையில் எப்பொழுதும் ஒரு முன்னேற்றம் ஏற்படுமா? காரணம் தருக.
(iii) J - வளையி (J- curve) என்பதனால் நீர் கருதுவது யாது?
(iv)இலங்கையின் அன்னியச் செலாவணிச் சந்தையில் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு கேள்வி ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் 5 தருக.

11. (i)1977 ஆம் ஆண்டுக்கு பின்னர் இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பின் போக்குகள் எவ்வாறு உள்ளன என்பதனை விளக்குக.
(ii) 1977 ஆம் ஆண்டுக்கு பின்னர் இலங்கையின் இறக்குமதிக் கட்டமைப்பின் போக்குகள் எவ்வாறு உள்ளன என்பதனை விளக்குக.
(iii)வெளிநாட்டுப்படுகடன் பணி விகிதம் என்றால் என்ன? அண்மைய ஆண்டில் வெளிநாட்டுப் படுகடன் பணிகளின் வீதம் எவ்வாறு இருந்தது?

12.(i) சமநிலையான பிராந்திய அபிவிருத்தி (Balanced Regional Development) என்பதனால் கருதப்படுவது யாது?
(ii) இலங்கையில் தற்பொழுது நிலவும் பிராந்திய பொருளாதார சமமின்மைகளை விபரிக்குக.
(iii)பிராந்திய பொருளாதார சமமின்மைகளை குறைப்பதற்கு அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் நடைமுறைப்படுத்தி வரும் திட்டங்களும் எவை?
(iv)பிராந்திய சமமின்மைகளை குறைப்பதில் மாகாண சபைகள் எத்தகைய நடவடிக்கைகளை எடுக்கலாம்?

# பொருளியல்-II

1. மாற்றல் கட்டணம் என்பது (Transfer Earnings) பின்வருவனவற்றில் எத்னைக் குறித்நிற்கும்?
(i) பயிற்சியளித்தல் காலத்தில் ஊழியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள்.
(ii) வேலையற்றவர்களுக்கும் ஓய்வு பெற்றவர்களுக்கும் அரசினால் வழங்கப்படும் கொடுப்பனவுகள்
(iii) சிக்கன வாடகையின் ஒரு பகுதியைக் குறித்து நிற்கும்.
(iv) ஒரு உற்பத்திக்காரணி தனது பயன்பாட்டின் போது பெறுகின்ற குறைந்த பட்ச கொடுப்பனவு.
(v) குறைந்த பட்ச கொடுப்பனவைவிட மேலதிகமாக பெறும் வருமானம்.

2. பின்வருனற்றில் எது தேசியவருமான கணிப்பீட்டில் மாற்றல் கொடுப்பனவு (Transfer Payment)என வரையறுக்கப்படாதது?
(i) புலமைப்பரிசில்கள் (ii) சமுர்த்திக் கொடுப்பனவு
(iii) உரமானியம் (iv) ஓய்வூதியக் கொடுப்பனவு
(v) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சம்பள கொடுப்பனவு

3. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு கைத்தொழில் முறையின் கீழ் மொத்த உள்நாட்டு உற்பத்திக் கணிப்பீட்டில் உள்ளடக்கப்படும் பிரிவுகளின் எண்ணிக்கை
(i) 11 (ii) 9 (iii) 13 (iv) 7 (v)12

4. பொருளாதாரம் ஒன்றில் எல்லைநுகர்வு நாட்டத்தின் பெறுமதி 0.8 எனின் மாற்றல் பெருக்கியின் பெறுமதி
(i) 8 (ii) 2 (iii) 10 (iv) 5 (v)4

5. எளிய பொருளாதாரமொன்றில் வருமானம் ரூபா 200 பில்லியனாக காணப்பட்டபோது சராசரி நுகர்வு நாட்டம் 1.2 ஆகவும் வருமானம் ரூபா 400 பில்லியனாக அதிகரித்த போது சராசரி நுகர்வு நாட்டம் 1 ஆகவும் காணப்பட்டது எனக் கருதுக. இப்பொருளாதாரத்தில் முதலீடு ரூபா 50 பில்லியனால் அதிகரித்தால் நுகர்வு எத்தனை பில்லியனால் அதிகரிக்கும்.
(i) 250 (ii) 50 (iii) 200 (iv) 400 (v) 62.5

7. ஒரு பண்டம் அல்லது சேவைக்கான கேள்வியானது
1. அப்பண்டம் அல்லது சேவைக்கான பதிலீடுகள் மிகக்குறைவாக இருப்பின்
2. நுகர்வோரது பாதீட்டில் அப்பண்டத்தின் அல்லது சேவையின் பங்கு கூடுதலாக இருக்குமாயின்
3. விலையில் மாற்றமேற்படும் பொழுது நுகர்வோர் தம்மை சரிசெய்து கொள்வதற்கு அதிககாலம் கிடைக்குமாயின்
4. அப்பண்டம் அல்லது சேவை பரந்த அடிப்படையில் வரையறுக்கப படுமாயின்
5. அப்பண்டம் அல்லது சேவை அத்தியவசியமானதாகவிருக்குமாயின் கூடிய நெகிழ்ச்சிகொண்டதாக இருக்கும்.
(i) 1 வதும் 2 வதும் (ii) 2 வதும் 3 வதும்
(iii) 3 வதும் 4 வதும் (iv) 4 வதும் 5 வதும்
(v) 1 வதும் 5 வதும்

8. பிழையான கூற்றை மட்டும் தெரிவு செய்க.
(i) ஒரு சாதாரண பண்டம் நேர்க்கணிய வருமான நெகிழ்ச்சியைக் கொண்டிருக்கும்.
(ii) ஆடம்பரப் பொருளொன்று ஒன்றுக்கும் கூடிய வருமான நெகிழ்ச்சியைக் கொண்டிருக்கும்.
(iii) ஒரு கிஃபன் பண்டத்தினது விலை வீழ்ச்சியாலேற்படும் பதிலீட்டு விளைவு எதிர்கணியமாக இருக்கும்
(iv) ஒரு இழிவுப் பண்டத்தின் விலை வீழ்ச்சியாலேற்படும் வருமான விளைவு எதிர்க்கணியமாக இருக்கும.
(v) ஒரு சாதாரண பண்டத்தின் விலை வீழ்ச்சியாலேற்படும் வருமான விளைவு நேர்க்கணியமாக இருக்கும்.

9. திறந்த பொருளாதாரம் ஒன்றில் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது
(i) நுகர்வு, மொத்த முதலீடு, அரச செலவு, தேறிய இறக்குமதி
(ii) நுகர்வு, தேறிய முதலீடு, அரச செலவு, தேறிய ஏற்றுமதி
(iii) நுகர்வு, மொத்த முதலீடு, அரச செலவு, மொத்த ஏற்றுமதி
(iv) நுகர்வு, மொத்த முதலீடு, அரச செலவு, தேறிய ஏற்றுமதி
(v) கூலி, வாடகை, வட்டி, இலாபம், பெறுமானத் தேய்வு
என்பவற்றின் கூட்டுத்தொகைக்குச் சமனாகும்.

10. பின்வருவனவற்றுள் எது அரச பொதுப்படுகடன்களில் இடம்பெறாதது
(i) நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடன்கள்
(ii) உள்ளூராட்சி மன்றங்கள் பெறும் கடன்கள்
(iii) வெளிநாட்டு செயற்றிட்டக் கடன்கள்
(iv) வெளிநாட்டு செற்றிட்டமல்லா கடன்கள்

11. பின்வருவனவற்றுள் எது தூய பொதுப்பண்டம்
(i) தபால் சேவை (ii) பொலிஸ் சேவை
(iii) போக்குவரத்துச் சேவை (iv) அம்புலன்ஸ் சேவை
(v) தொடர்பாடல் சேவை

12.வரிப் பெருக்கியானது (வயஒ அரடவனிடநைச)
(i) நேர்க்கணியமாகவும், வருமானப் பெருக்கியை விடச் சிறியதாகவும் இருக்கும்.
(ii) எதிர்க்கணியமாகவும், வருமானப் பெருக்கியை விடச் சிறியதாகவும் இருக்கும்.
(iii) நேர்க்கணியமாகவும், வருமானப் பெருக்கியைவிடப் பெரியதாகவும் இருக்கும்.
(iv) எதிர்க்கணியமாகவும், வருமானப் பெருக்கியைவிடப் பெரியதாகவும் இருக்கும்.
(v) நேர்க்கணியமாகவும், வருமானப் பெருக்கிக்குச் சமமாகவும் இருக்கும்.

13. வருமான முறையினூடாக மொத்த தேசிய உற்பத்தியின் மதிப்பீட்டினைச் செய்யுமிடத்து பின்வருவனவற்றில் எது நீக்கப்படுகின்றது?
(i) நிறுவன பகிரப்படாத இலாபங்கள் (ii) நேர்வரி
(iii) அரசிடமிருந்தான வட்டிவருவாய் (iv) பங்குலாபம் (v) பெறுமானத்தேய்வு

14.சரியான கூற்றாக உம்மால் கருதப்படும் கூற்றை இனங்காண்க.
(i) மொத்த உள்நாட்டுச் செலவும் மொத்த உள்நாட்டு உற்பத்தியும் எப்பொழுதும் சமமாக காணப்படும்
(ii) மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் வெளிநாட்டு தேறிய முதலீட்டைக் கூட்டுவதன் மூலம் பெறப்படுவது மொத்த தேசிய செலவாகும்.
(iii) தேசிய வருமானக் கணிப்பீட்டில் நேர்வரிகள் உள்ளடக்கப் படுவதில்லை.
(iv) துடித்தன வருமானத்துக்குள் அரசிடமிருந்தான வட்டிப் பெறுவனவுகள் உள்ளடக்கப படுவதில்லை.
(v) வருமான அணுகுமுறையின்படி தேசிய கணக்கீட்டை மேற்கொள்ளும் பொழுது உழைப்பு வருமானங்களே கணக்கில் எடுக்கப்படுகின்றன.

15. ஆண்டு 1 இல் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 500 பில்லியன் எனக் கருதுக. 6 ஆண்டுகளில் மெய் வெளியீடு 40% இனால் அதிகரிக்க மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி இரு மடங்காக அதிகரிப்பின் 6 வது ஆண்டில் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதி யாது?
(i) ரூபா 2000 பில்லியன் (ii) ரூபா 1400 பில்லியன்
(iii) ரூபா 1000 பில்லியன் (iv) ரூபா 750 பில்லியன்
(v) ரூபா 700 பில்லியன்

16. எளிய பொருளாதாரம் ஒன்றில் சேமிப்பானது முதலீட்டை விட அதிகமாகக் காணப்படுமாயின்
(i) வெளியீடு அதிகரிக்கும் (ii) வெளியீடு குறைவடையும்
(iii) வெளியீடு மாற்றமடையாது (iv) வெளிப்பாய்ச்சல் குறைவாக இருக்கும்
(v) எதுவும் கூற முடியாது

17. எளிய பொருளாதாரம் ஒன்றில் நுகர்வுச் சார்பானது C = 50 + 0.90yd ஆகவும், முதலீடு 50 பில்லியனாகவும் காணப்பட்டது. எனின் சமநிலை வெளியீட்டு மட்டத்தில் நுகர்வின் அளவு
(i) 900 பில்லியன் (ii) 100 பில்லியன் (iii) 850 பில்லியன்
(iv) 950 பில்லியன் (v) 95 பில்லியன்

18. எளிய பொருளாதாரம் ஒன்றில் சேமிப்புச் சார்பு S = -75 + 0.20yd ஆகவும் முதலீடு 75 பில்லியனாகவும் காணப்பட்டது. எனின் சமநிலை வெளியீட்டு மட்டம்.
(i) 400 பில்லியன் (ii) 150 பில்லியன் (iii) 75 பில்லியன்
(iv) 750 பில்லியன் (v) 675 பில்லியன்

19. 2007 ஆம் ஆண்டில் இலங்கை அரசபாதீட்டின் மொத்த அரசிறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக
(i) 15.8% (ii) 14.2% (iii) 10.2%
(iv) 10.2% (v) 90%

20. 2007 ஆம் ஆண்டில் இலங்கை அரசபாதீட்டின் மொத்த அரச செலவுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக
(i) 17.4% (ii) 23.5% (iii) 8.2%
(iv) 7.7% (v) 34.8%

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராசி பலன்

10-08-2009 முதல்
16-08-2009 வரை

பொ.சந்திரலிங்கம்




**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர் அயலவர் விலகி இருக்கவிரும்புவர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்கும்.




**கார்த்திகை 2, 3, 4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர் அயலவர் உதவுவர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமணவாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக எண்ணம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இராது..




**மிருகசீரிடம் 3, 4. திருவாதிரை,புனர்பூசம் 1, 2, 3**

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர். அயலவர் பகை கொள்ளக் கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக எண்ணம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இராது.




**புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாண்வர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்ட்டம் உண்டு. தெய்வீக எணணம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவி செய்வர். மன அமைதி இருக்காது.




**மகம், பூரம், உத்தரம் 1**

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு தாமதமாகலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷடம் இருக்காது. தெய்வீக எண்ணம் குறையலாம். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.




**உத்தரம் 2, 3, 4. அத்தம், சித்திரை 1, 2**

காரியத் தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு தாமதமாகலாம். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர் அயலவர் விலகி இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தாலம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.




**சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.**

காரிய சித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர். அயலவர் விலகி இருக்க விரும்புவர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதியுண்டு.




**விசாகம் 4, அனுசம், கேட்டை**

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக் கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இராது.




**மூலம், பூராடம், உத்தராடம் 1.**

காரிய சித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விலகி இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக எண்ணம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்கும்.




**உத்தராடம் 2 ,3, 4. திருவோணம், அவிட்டம் 1, 2**

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் பகை கொள்ளக் கூடும். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.




**அவிட்டம் 3, 4. சதயம், பூரட்டாதி 1, 2, 3**

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு தாமதமாகலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இராது.




**பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறை வேறும். மன அமைதி இருக்கும்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் யோசப் பற்றிக் (ராசா)

தோற்றம்: 07.03.1940
மறைவு: 10.08.2006

வாழும் காலத்தில் எங்களோடு வாழ்ந்தாயப்பா!
வாழவழிகாட்டிய கலங்கரை விளக்கே!
பாசத்தின் சிகரமே எங்கள் குடும்ப உயர்ச்சிக்காக
நீங்கள் எடுத்த முயற்சிகள் ஒவ்வொன்றும்
அடுத்தவரில் தங்கி வாழ விடாத முயற்சிகள்
ஒவ்வொன்றும் நாள்கள் ஆண்டுகள்
ஆனாலும் தினமும் எண்ணிப் பார்க்கின்றோம்- நீங்கள்
எங்களை விட்டுப் பிரிந்து மூன்று ஆண்டுகள் என்ன
முப்பது ஆண்டுகள் ஆனாலும் நினைவும் பாசமும்
மாறாது உங்களின் ஆன்ம சாந்திக்காக
இறைவனை வேண்டுகின்றோம்.

149/2. கதீற்றல் லேன், யாழ்ப்பாணம். (87704)
என்றும் நினைவுடன்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


SKY COMPUTER (Pvt) Ltd.
sky (யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம் அருகாமையில்)
No, 05 Devos Avenue, Colombo - 04, Tel:- 0115 - 335261 Fax:- 0115 - 371229
No, 162, Main Street. Jaffna. Tel:- 021-4590325 0779053545
விடுமுறைகால பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்
Course Details
Diploma In Ms Office - 2 Months
Diploma In DTP -2 Months
Diploma In Hardware - 2 Months
Diploma In Web Design - 3 Months
Diploma In Competerized Accounting -3 Months
Kids Program - 2 Months
Type Setting - 1 Month
Internet & Email - 2 Weeks
ICT
மாணவர்ளளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு-1 10-08-2009 பிரிவு-2 14-08-2009
Today You Learn Tomorrow You Lead.


## சைவ சமய பாட செயலமர்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.10

உடுவில், தெல்லிப்பழைக் கோட்ட சைவ சமயபாட ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் இன்று திங்கட்கிழமையும் நாளை மறுதினம் புதன்கிழமையும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

இன்று திங்கட்கிழமை தரம்10 சைவசமய பாட ஆசிரியர்களுக்கும் நாளை மறுதினம் புதன்கிழமை தரம்11 சைவசமயபாட ஆசிரியர்களுக்கான செயலமர்வும் இடம்பெறவுள்ளன.

உரிய ஆசிரியர்களை இதில் கலந்து கொள்ளுமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (203)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 07 . 11 . 1931



ஆண்டவனின் அடியில் 23 . 07 . 2008

திருமதி தெய்வேந்திர குமாரசாமி சிவகாமிப்பிள்ளை

திதி: 10.08.2009

உள்ளத்தில் நல்லவளாய்
ஊர் போற்றும் உத்தமியாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
மனிதருள் மாணிக்கமாய்
புனிதமாய் வாழ்ந்தவளே!
பாசவலை அறுத்து
முத்துமாரி அடி சேர்ந்தனையோ
ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறாது எம் துயரம்.

முதலியார் வளவு,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.
தொ.பே.: 222 6810.

குடும்பத்தினர். (87673)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

அந்தோனிப்பிள்ளை பத்திநாதன்

(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்- ஊர்காவற்றுறை, பருத்தித்துறை)

மலர்வு: 14.03.1947

உதிர்வு: 10.08.2007

தரணியிலே எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
நீங்கள் சென்று ஈராண்டு ஆனாலும்
மாறாது மாறாது எம் நெஞ்சமதில்
உங்களோடு நாம் வாழ்ந்த
பசுமையான நினைவுப் பதிவுகள்.

ஈரவிழிகளுடன் உங்கள்
[illegible]
[illegible]

"தணிகை", அல்வாய் வடக்கு, அல்வாய். (87650)

## மூதாட்டியின் கை முறிந்தது

யாழ்ப்பாணம், ஓக.10

பேருந்தில் ஏற முயன்ற மூதாட்டி அவ்வழியே வந்த சைக்கிளுடன் மோதியதில் மூதாட்டிக்குக் கை முறிந்தது.

இச்சம்பவம் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் இடம்பெற்றது.

சாவகச்சேரியைச் சேர்ந்த வி.நாகம்மா (வயது- 74) என்பவர் கைமுறிந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (203-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது சட்டத்தை நடைமுறைப்படுத்த இலங்கைக்கு அழுத்தம் கொடுக்குமாறு மன்மோகனிடம் தமிழ்க்கட்சிகள் வலியுறுத்து -

**சட்ட அமுலாக்கத்தைக் கண்காணிக்க ஐ.நா.படை பிரசன்னம் குறித்து பிரஸ்தாபம்**

புதுடில்லி, ஓக 10

1987 ஆம் ஆண்டு இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைவாக உருவாக்கப்பட்டுள்ள 13 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை அமுல்படுத்துமாறு வலியுறுத்த வேண்டுமென இந்திய பிரதமர் மன்மோகன்சிங்கிடம் சில தமிழ்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

வடக்கு, கிழக்கை மீள ஒருங்கிணைத்தல் உள்ளிட்ட சகல சரத்துக்களும் அமுல்படுத்தப்பட வேண்டுமெனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளதாக இணையத்தள செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் தலைவர்களான குணசேகரன், வசீகரன் ஆகியோர் இந்திய பிரதமரிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

13 ஆவது திருத்தச் சட்ட மூலம் அமுல்படுத்தப்படுகின்றதா என்பது குறித்துக் கண்காணிப்பதற்கு ஐக்கிய நாடுகளின் படை இலங்கையில் நிலை நிறுத்தப்பட வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர்.

தமிழகக் காங்கிரஸ் முக்கியஸ்தர் அன்பரசும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கில் புதிய குடியேற்றங்களை உருவாக்கி அதில் சிங்கள மக்களை அரசாங்கம் குடியமர்த்தி வருவதாக தமிழ் கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

அதேவேளை, இலங்கை நிலைமை குறித்து தாம் அறிந்திருப்பதாகவும், தமிழர்களுக்குச் சமவுரிமை பெற்றுக் கொடுக்கத் தேவையான சகல முயற்சிகளையும் இந்திய மத்திய அரசு மேற்கொள்ளும் எனவும் பிரதமர் உறுதியளித்துள்ளார்- என்றும் அந்த இணையத்தளச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-9)

# நலன்புரி நிலையங்களில் மக்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருப்பது கவலைதருகிறது

## அமெரிக்கத் துணை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக 10

வன்னியில் தமிழ் மக்கள், அவர்களின் விருப்பத்திற்கு மாறாகத் தொடர்ந்து தங்க வைக்கப்பட்டுள்ளமை குறித்து அமெரிக்கா கவலையடைந்துள்ளது என வும் தமிழ் மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகள் தாமதப்படுவது குறித்தும் அது தனது கவ லையை வெளியிட்டுள்ளது எனவும் அமெரிக்க சனத்தொகை அகதிகள் மற்றும் குடிபெயர்ச் சித்துறை துணை அமைச்சர் எரிக் சுவார்ட்ஸ் தெரிவித்துள்ளார்.

நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களில் 75 ஆயிரம் பேர் இந்தமாத இறுதிக்குள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர் என்று இலங்கையின் அதிகாரிகள் அறிவித்திருக்கின்றனர்.

இது குறித்து கருத்து வெளியிட்ட எரிக் சுவார்ட்ஸ், இலங்கையின் நடவடிக்கையை வரவேற்றதுடன் மீள்குடியமர்வுப் பணிகள் மேலும் விரைவுபடுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

கடந்த மாதம் இலங்கை சென்றிருந்த அமைச்சர் சுவார்ட்ஸ், வன்னியில் தமிழ் மக்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ள முகாம்களுக்கும் சென்று பார்வையிட்டிருந்தார்.

பொதுவாக மீள்குடியமர்வு என்று வரும் போது அகதிகளும் ஏனைய இடம்பெயர்ந்த மக்களும் தமது விதியைத் தாமே தீர்மானிப் பவர்களாக இருப்பார்கள். போர் முடிந்த பின்னர் எப்போது சொந்த இடங்களுக்கு திரும்பச் செல்வது என்பதை அவர்களே முடிவு செய்வார்கள்.

எல்லா இடங்களிலும் அதுதான் நடக்கிறது. இலங்கையிலும் அதுதான் நடக்க வேண்டும் ஆனால், அங்கு அப்படி நடக்கவில்லை. ஏனென்றால் அந்த மக்கள் முகாம்களுக்குள் அடைக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் அவர்களின் விருப்பத்திற்கு மாறாக அடைத்து வைக்கப்படக்கூடாது.

தனது சட்டப்பூர்வமான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இலங்கையரசு சரியான வேறு வழிவகைகளைக் கண்டறிய வேண்டும் என அவர் மேலும் கூறினார். (04)

# புலிகள் இயக்கத்துக்கு புத்துயிர் அளிக்க முயல்வோர்குறித்து கே.பியிடம் தகவல்கள் கறக்கப்படுகின்றனவாம்

கொழும்பு, ஓக 10

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு வெளிநாடுகளில் இருந்து கொண்டு புத்துயிர் அளிக்க முற்படும் பிரமுகர்கள் குறித்த விவரங்களை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கே.பியிடம் துருவித் துருவி விசாரித்தும் கறந்தும் வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான தகவல் ஒன்றை தேசிய பாதுகாப்புக்கான ஊடக நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மன் ஹுலுகல்லேயை மேற்காட்டி இணையத்தளம் ஒன்று வெளியிட்டுள்ளது.

புலிகளுக்கு ஆயுதம் வழங்கிய விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பான மிக நீண்ட-சரமாரியான-கேள்விகளுக்கு புலிகளின் முக்கியஸ்தரான கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன் பதிலளிக்க வேண்டியுள்ளார் என்றும் லக்ஷ்மன் ஹுலுகல்லே தெரிவித்தார். (அ-03)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக 10

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து கலாசாரத் திணைக்களத்தால் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் திருமதி மகிந்தினி விஜயகுமார் தலைமையில் ஆன்மீக நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சைவப்புலவர் நா.நவராஜ் 'கற்றாரையான் வேண்டேன்....' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

திருநெல்வேலி சைவவித்தியா விருத்திச் சங்க அறநெறிப் பாடசாலை, கொடிகாமம் தவசிக்குளம் கண்ணகை அம்மன் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

* * *

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் இசையரங்கு நிகழ்வு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம் பெற்று வருகின்றது.

இன்று திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு திருமதி விக்னேஸ்வரி நரேந்திராவின் பாட்டு இடம் பெறவுள்ளது. வயலின்-அ.ஜெயராமன், மிருதங்கம்-எஸ்.மகேந்திரன், கெஞ்சிரா-வி.சிவமூர்த்தி.

* * *

நல்லூர் ஆலயப் பெருந் திருவிழாவை முன்னிட்டு ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் கான கதா வாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா 'கம்பராமாயணம்' தொடர் சொற்பொழிவு நிகழ்த்தி வருகின்றார்.

இதில் இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு 'கைகேயி வரம்' என்னும் தலைப்பில் இன்று சொற்பொழிவு இடம்பெறும். (203)








# நல்லூர் பெருந்திருவிழாக் கால உதயனின் சிறப்பம்சம்



## துயர் நீக்கிட மயிலேறி வருவாய்

ஆறுபடை வீடதனைப் பாடியநக் கீரனுக்கு
அருள்செய்து சிறையை மீட்டாய்
அடியரையும் ஆட்கொண்டு மனவிருள் நீக்கியே
அகந்தையை நீக்கி டையா
தேறுதல் உளாதமனச் சஞ்சலம் நீக்கியே
ஜெகமதில் வாழ வைப்பாய்
செல்வநிறை நல்லூரின் தேவனே கந்தனே!
சீர்பெருகு கங்கை சுதனே
மாறுபடு சூரனை வதைத்தமுரு கையனே
மயக்கிடும் மாந்தர் தமக்கு
மாசிலா அருளதனைப் பொழிந்தெமது வாழ்வுக்கு
மண்ணிய துணையு மாவாய்
ஏறுமயில் ஏறிநீ எங்களுளம் மகிழ்ந்திட
எழிலாக் வலம்வ ருவாய்
எங்கள் நாயகா நல்லைநகர் சுவாமியே
எழில்பெருகு வடிவே லனே

பண்டிதை திருமதி, பொன் பாக்கியம்,சுழிபுரம்.

## அபயம் தந்து காத்தருள்வாய்

ஓங்காரத் தத்துவனே
மெரு கூட்டி அழகு தரும்
கொவ்வைச் செவ்வாயழகனே
ஆனைமுகன் துணையுடன்
குறத்தி மகள் வள்ளியை
மணந்த பெருமானே
உலகாளும் நியெம்மை
அபயம் தந்து காத்தருள் வாய்

மகேந்திரலிங்கம்-நிரோஷனா, கோப்பாய்.

.......

தொல் வினையறுப்பான் தோகைமயிலாடுவான்-வள்ளல் குமரன்
பல்லுயிருமோம்புவான் பணிவர்க்கு அருள்வான்-புண்ணியம்சேர்
நல்லையில் கோயில் கொண்டான் நம்மிடர் தீர்க்கவே-வீதியுலா வருகிறான்
விரைந்து வாரீர் அவன் புகழ் பாடி பணிவோம்!

கந்த தியாகராசா, கோண்டாவில்.

## மயில் ஏறி வருவான்

செல்வப் பழநிவேல் நாதன் - நம்மை
சீக்கிரம் ஆண்டருள் போதன்
வல்லவனாம் பெரு நீதன் - நல்ல
மங்கள வார்த்தை சொல்கீதன்
அறு முகத்தவன் தாண்டி - அவன்
அன்பு மனத்தவன் ஆண்டி
ஏறுமயில் ஏறி வருவாண்டி - நல்லூர்
எழிலாளன் அருள் வானடி.

சைவப் புலவர் செ.பரமநாதன், மண்டைதீவு.

## கந்தனைக் கண்ணாரக் காணலாம்

அறுபடைவீ டிலமர்ந்து அருள்செய் வானை
அருள்மிகுநல் லூர்உறையும் சேவற்கொடி யோனை
நறுந்தொடைமார் பன்நெடும்வேல் தாங்கும் வீரனை
நாடினோர்க்கு நன்மைபல புரிவான் தன்னை
அறுதொழில்அந் தணர்வேள்வி உவக்கும் அழகனை
சங்கரன்ம கன்சரவ ணபவன் தன்னை
மறுவிலாஞா னியர்செல்வப் பரோடு யோகரும்
வந்தனைபு ரிந்தநல்லூர் பதியினில் கண்டிடலாம்
சிங்கள வேந்தன்சப் புமல்கு மாரன்
சிந்தைமகிழ்ந் துதிருப்பணி புரிந்தவே லவனை
சங்கத்த மிழ்வாழ்ந் திடும்பெ ருமானை
சங்கிலியன்த லைநகரில்கோ யில்கொண் டானை
தங்கமயில் வாகனனைதா ரகன்சங் காரனை
சூரர் குடிகெடுத்த சூரா திசூரனை
தேங்கம்பொ ழில்சூழ்ந்த சிங்கா ரநல்லூர்
செழும்பதி யிற்கண் ணாரக் கண்டிடலாம்.

பா.பாலச்சந்திரன், சுன்னாகம்.

## விழுந்து கும்பிட்டால் வில்லங்கம் இல்லையடி ஞானத்தங்கமே

நல்லூரை வலம் வந்து விழுந்து கும்பிட்டால்
நன்மைகள் செய்வானடி ஞானத்தங்கமே!
எல்லோரும் மனமிசைந்து கும்பிட்டால்
ஏற்றதோர் தீர்வு தருவானடி ஞானத்தங்கமே!
வில்லங்கம் தீருமென்று விழுந்து கும்பிட்டால்
விடிவிங்கே சேருமடி ஞானத்தங்கமே
பொற்கோயில் வலம்வந்து கும்பிட்டால் - ஒரு
பொல்லாப்பும் இல்லையடி ஞானத்தங்கமே!

- மதுரகவி, காரை.எம்.பி.அருளானந்தன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1111 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மேடம்

18 21 35 36

07-08-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 10,239,550/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 210,231 | 20/- | 4,204,620/- |
| 2 இலக்கங்கள் | 19,328 | 40/- | 773,120/- |
| 1 இல. + லக்கினம் | 18,962 | 60/- | 1,137,720/- |
| 2 இல. + லக்கினம் | 1,756 | 200/- | 351,200/- |
| 3 இலக்கங்கள் | 520 | 1000/- | 520,000/- |
| 3 இல. + லக்கினம் | 45 | 10,000/- | 450,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 10,239,550/- | - |
| மொத்தம் | | | 7,836,660/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 250,849 | | 8,336,660/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 10,709,425/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்கார வெற்றியாளர்: சீ.ஜயபீரித்த பெரேரா, மாபோல, வத்தளை

கைத்தொலைபேசி வெற்றியாளர்: டிலானி வனிகரத்ன, [illegible]

2009 ஆகஸ்ட் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 1 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

[illegible]

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| இரத்தினபுரி | 500398323-3-46 |
| கம்பஹா | 500392880-4-09 |
| கண்டி | 500404954-6-14 |
| கண்டி | 500392243-6-17 |
| குருநாகல் | 500396945-2-47 |

(சி/560018)



## தவறிவிட்டது

46, நல்லூர் குறுக்கு வீதி என்னும் முகவரியுடைய இராசு முத்தம்மா என்பவரது தேசிய அ. அட்டை (816724465V) கடந்த 01.08.2009 சனிக்கிழமை இரவு 7.00 மணியளவில் பருத்தித்துறை பேருந்தில் பிரயாணம் செய்த வேளை பேர்சுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (87725)


## கைதடி - உரும்பிராய் வீதியை புனரமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக.10

கைதடி - உரும்பிராய் வீதியைத் தார் ஊற்றிப் புனரமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கோப்பாய் சந்தியில் இருந்து மருதனார்மடம் சந்தி வரை இவ் வீதியைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்திஅதிகார சபை இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. (203-224)

## கசிப்பு வைத்திருந்த நால்வருக்கு 44 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், ஓக.10

கசிப்பு வைத்திருந்த நால்வருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 44 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸார் மீசாலை, கல்வயல், மட்டுவில் மத்தி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மூவருக்கு எதிராகவும் பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினர் வரணியைச் சேர்ந்த ஒருவருக்கு எதிராகவும் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இவ் வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மீசாலையைச் சேர்ந்த நபருக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 15 மாத சாதாரண சிறைத் தண்டனையும், கல்வயலைச் சேர்ந்த நபருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 10 மாத சிறையும் மட்டுவில் மத்தியைச் சேர்ந்த நபருக்கு 8 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 8 மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

மதுவரித் திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் வரணியைச் சேர்ந்த நபருக்கு 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 6 மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. (203-207)

## பூசகரின் மோட்டார் சைக்கிள் வாள்முனையில் அபகரிப்பு

வலி. வடக்கு ஓக.10

ஆலயக் கொடியிறக்க நிகழ்வில் கலந்து கொண்ட பூசகர் ஒருவரின் ஹொண்டாரக மோட்டார் சைக்கிள் ஒன்று வாள் முனையில் திருடிச் செல்லப்பட்டுள்ளது.

இணுவில் காரைக்கால் சிவன் கோயில் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் கொடியிறக்க நிகழ்வில் கலந்து கொண்ட பூசகரின் மோட்டார் சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:

ஆலய வீதியில் மோட்டார் சைக்கிளை விட்டுவிட்டு ஆலயத்தில் நுழைந்த பூசகரின் மோட்டார் சைக்கிளை இருவர் திருட முயன்றுள்ளார்கள்.

இதனை அவதானித்த அடியார் ஒருவர் அதனைத் தடுத்துநிறுத்த முற்பட்டபோது வாளையெடுத்து அவரை மிரட்டிய திருடர்கள் மோட்டார் சைக்கிளைத் திருடிக் கொண்டு விரைந்து சென்று விட்டனர்.

இது சம்பந்தமாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (04-86)


# சேவை நலன் பாராட்டு



யா/இளைபதம்பீ இந்து வித்தியாலயம்

திருமதி பரமேஸ்வரி சிவகுருநாதன்

[விஞ்ஞான ஆசிரியை]

இன்முகத்துடன் யாவருடனும் பழகி இருக்குமிடம் தெரியாது சேவையாற்றினீர்கள். இல்லத்தின் நலத்திற்காக இடைவிட்டீர் உங்கள் சேவையை. ஓய்வு பெற்றுச் செல்லும் எமது விஞ்ஞான ஆசிரியை அவர்கள் நீண்ட ஆயுளுடன் சீரும் சிறப்பும் பெற்றுவாழ வாழ்த்துகின்றோம்.

யா/இளைபதம்பி இந்துவித்தியாலயம், வண்ணார்பண்ணை. (87721)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.



# 24 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 10 * 02 * 1956

விண்ணில் 10 * 08 * 1985



திருமதி கமலாதேவி சுப்பிரமணியம்

(ஆசிரியை, றோ.க.பாடசாலை, கோப்பாய் தெற்கு)

ஒவ்வொரு கணமும் உங்கள் நினைவுமாய்
இருபத்திநான்கு ஆண்டுகள் உருண்டதம்மா!
எங்களின் துயரம் ஆற்றயாருமில்லை
இதயம் உருகிட அஞ்சலி செய்கிறோம்

பிரிவால் துயருறும்:
சுப்பிரமணியம் (கணவர்)
சுதர்ஸன் - மகன்
சங்கீதா - மருமகள்.

கிறிஸ்தவ கல்லூரி முன்பு,
கோப்பாய் மத்தி,
கோப்பாய். (87722)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 09.08.1933



மறைவு: 11.07.2009

## வாரித்தம்பி சின்னத்துரை

11.07.2009 சனிக்கிழமை காலமான எமது குடும்பத் தலைவரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று [10.08.2009] திங்கட்கிழமை எமது இல்லத்தில் காலை 9 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. அதில் பங்குபற்றி அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன்,

அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் எமது ஞாபகத்திற்கு அப்பாற்பட்ட நிலையில் யாரையும் அழைக்கத் தவறியிருப்பின் அதனைப் பெருமனத்துடன் மன்னித்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்.

உசன்,
மிருசுவில். (சி/560221)

குடும்பத்தினர்.



அன்னை மடியில்: 1986.09.17

ஆண்டவன் மடியில்: 2007.08.10

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## பாலசிங்கம் சுரேஸ்



ஈராண்டுகள் ஓய்ந்தது
எம் பெருமூச்சு ஓயவில்லை
மறக்க முடியவில்லை உன் சிரித்த
முகத்தினையும் துடுக்கான பேச்சினையும்
காதோடு வந்த செய்தி -உன்
உயிர் துடிக்கிறது என்று - மூன்று
நாள்களின் பின்பு எனக்கு வந்த
செய்தி உன் உயிர் பிரிந்தது - என
எவ்வாண்டு ஆனாலும் ஆறாது
எம் பெரும் காயம்.

உன் பிரிவால் துடிக்கும்:
காணாமல் போன உன் அண்ணன்:
பாலசிங்கம் துசியேந்திரன்,
மனைவி- து. அஜந்தினி,
பிள்ளைகள்- யதுர்ஷன், சகானா.

59/1, மூத்தவிநாயகர் வீதி,
கச்சேரி - நல்லூர்,
யாழ்ப்பாணம். (87712)



# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 28 * 04 * 1942

மறைவு 12 * 07 * 2009



## துரைராசா கணபதிப்பிள்ளை

(இளைப்பாறிய கிராம அலுவலர்)

அன்னாரது அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகள் நாளை [11.08.2009] செவ்வாய்க்கிழமை காலை முதல் எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

13.07.2009 அன்று நடைபெற்ற மரணச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலமும், தந்தி மூலமும், நேரிலும் ஆறுதல் கூறியவர்களுக்கும், பல்வேறு வகையிலும் உதவிபுரிந்தோருக்கும் நன்றி பகிர்கின்றோம்.

தெணியம்பை, வல்வெட்டித்துறை. (சி/560225)

குடும்பத்தினர்.



# கலாலயா

பயிற்சியகம்

பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

## விடுமுறைக் கால 12 நாள் வகுப்புக்கள்

- கூந்தல் அலங்காரம்: 50 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் பண்ணுதல், முடி சுருட்டுதல், முடி நிறமூட்டுதல், முடி வெட்டுதல்.
- Facials மற்றும் மணப்பெண்கள் அலங்காரம், வித்தியாசமான முறைகளில் சேலை அணிதல், கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல் (Pedicure, Manicure.)
- ப்ப்றிக் வர்ணம் தீட்டுதல் (Fabric Painting)
- Saree Work (சேலையில் அலங்கார வேலை செய்தல்)

மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

- தையல் தெரிந்தவர்களுக்கான சாறிபிளவுஸ், சுரிதார், Skirts தைத்தல்.

மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது



ஆரம்பம் - 12-08-2009 காலை 9.00 மணி

மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் பன்றிக்காய்ச்சல் தீவிரம் நேற்றுவரை 4 பேர் பலி; மக்கள் பீதி!

## சென்னையில் 10 பேருக்கு தீவிர சிகிச்சை; சிறுவனின் நிலை மோசம்

சென்னை, ஓக. 10

அகமதாபாத்தில் நேற்றுக் காலை 43 வயதான ஒருவர் மரணமடைந்ததை அடுத்து பன்றிக் காய்ச்சலால் இந்தியாவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4 ஆக அதிகரித்துள்ளது.

சென்னையில் 10 பேருக்கும் கோவையில் 2 பேருக்கும் பன்றிக்காய்ச்சல் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. சென்னையில் இந் நோயால் பாதிக்கப்பட்ட நான்கரை வயதுச் சிறுவனின் உடல்நிலை மிகவும் மோசமானதையடுத்து தடுப்பு நடவடிக்கைகளை தமிழக அரசு முடுக்கிவிட்டிருக்கிறது.

வெளிநாடுகளில் பன்றிக் காய்ச்சல் வேகமாக பரவி வருகிறது. வெளி நாடுகளிலிருந்து வருபவர்களால் இக்காய்ச்சல் இந்தியாவிலும் பாதிப்பை ஏற்படுத்தி பலர் இந்த நோய்க்கு ஆளாகியுள்ளனர்.

மகாராஷ்டிர மாநிலம் புனேவில் கடந்த சில தினங்களுக்கு முன்பு ரீடாஷேக் என்ற 14 வயது சிறுமி பன்றிக் காய்ச்சலால் பரிதாபமாக இறந்தாள். பன்றிக் காய்ச்சலுக்கு இந்தியாவில் முதல் பலியானது இந்த சிறுமிதான் என்பது குறிப்பிடத்தக்கது.

அதன் தொடர்ச்சியாக மும்பையில் நேற்று முன்தினம் பமீதா பங்வாலா என்ற 53 வயது பெண்மணி இந்தக் காய்ச்சலால் உயிரிழந்தார். இதனால் மகாராஷ்டிர மாநிலத்தில் பெரும் பீதி ஏற்பட்டுள்ளது. இந்த மாநிலத்திற்கு செல்ல வேண்டாம் என்று தமிழக அரசும் அறிவுறுத்தியிருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

இதேபோல புனேவிலும் சஞ்சய் துகாராம் கோகரே என்ற 42 வயது ஆசிரியரும் பலியானார். இவரையும் சேர்த்து இந்த நோய்க்கு நேற்றுமுன்தினம்வரை 3 பேர் பலியாகினர்.

இந்த நிலையில் நான்காவதாக நேற்று அதிகாலை 1.30 மணியளவில் குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் 43 வயதான பிரவீன் பட்டேல் என்ற வெளிநாடுவாழ் இந்தியர் நகரத்தில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் பன்றிக் காய்ச்சலுக்கு பலியானார் என மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குஜராத் மாநிலத்தில் பன்றிக்காய்ச்சலுக்கு முதலாவது ஆளாகப் பலியாகியிருப்பவர் இவர் தான் என்று மாநில சுகாதாரத்துறைச் செயலாளர் ரவி சக்சேனா தெரிவித்தார். அண்மையில்தான் இவர் அமெரிக்காவிலிருந்து திரும்பியிருந்தார். கடந்த மாதம் 31ஆம் திகதி தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தியாவில் இந்த நோய் வேகமாகப் பரவி வருவது மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. இதுவரை 782 பேர் பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 4 பேர் இதற்கு பலியாகி இருக்கிறார்கள்.

இந்நிலையில் தமிழகத்தில் சென்னையில் 10 மற்றும் கோவையில் 2 பேர் என மொத்தம் 12 பேர் பன்றிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது.



டில்லியிலுள்ள ராம் மனோகர் லோகியா வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள சிறப்புப் பிரிவில் பன்றிக்காய்ச்சல் பரிசோதனை செய்வதற்காக தாயும், குழந்தையும் முகமூடி அணிந்து காத்திருந்த போது......

# தமிழகத்தில் இலங்கைத் தமிழருக்கு குடியுரிமை, கல்வி அளிக்கவேண்டும்

## ரவிசங்கர் சுவாமி மீண்டும் வலியுறுத்து

சிதம்பரம், ஓக. 10

தமிழகத்தில் அகதிகள் முகாமிலுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை அளித்து கல்வி, வீடு உள்ளிட்ட வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் - என வாழும் கலை அமைப்பின் நிறுவுநர் ஸ்ரீஸ்ரீரவிசங்கர் சுவாமி தெரிவித்தார்.

சிதம்பரத்தில் சத்சங்கம் நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

தமிழகத்தில் 20 ஆண்டுகளாக இலங்கை தமிழர்கள் ஒன்றரை லட்சம் பேர் அகதிகள் முகாமில்தான் உள்ளனர். தமிழ்நாட்டில் தமிழர்கள் ஆதரவு கொடுக்காமல் இருப்பது சரியில்லை. அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் அவர்களுக்கு வீடு, கல்வி உள்ளிட்ட வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆன்மீகம் இல்லாததால் வன்முறை, மது, போதை அருந்துதல் உள்ளிட்டவை அதிகரித்து விட்டன. நமது பொருளாதாரம் உயர்ந்தாலும் ஏழ்மைக்குக் காரணம் மதுதான். ஜாதி, மத பிரச்சினை ஒழிந்தால்தான் நாடு உருப்படும். அரசியல் வந்தால் சாதி, மதம் வந்துவிடுகின்றன.

சட்டத்தரணி, வைத்தியர், ஆசிரியர் ஆகியோரிடம் நாம் சாதி கேட்பதில்லை. திருமணம் செய்வதிலும், அரசியலிலும் சாதியைப் பார்க்கிறோம். ஊழலை ஒழிக்க வேண்டும். நமக்கு தேச பக்தியும், மக்கள் மீது அக்கறையும் இருந்தால் நாடு சுபீட்சம் பெறும்.

உலகளவில் பொருளாதார நெருக்கடிக்கு பேராசைதான் காரணம். அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் பெரிய நிறுவனங்கள் மூடப்பட்டன. அதில் இந்தியா மட்டும்தான் தப்பியுள்ளது. அதற்குக் காரணம் திறமையாகச் செயற்பட்டு வரும் ரிசர்வ் வங்கி ஆளுநராக (ரங்கராஜன்) இருந்த நமது தமிழரால்தான். ஆன்மீகம் கலந்த பொதுத் தொண்டாற்றினால் நமக்கு முழுப் பலம் கிடைக்கும். வாழும்கலை அமைப்பு சார்பில் 58 கோடி 80 லட்சம் மரக்கன்றுகள் ஒரு லட்சத்து 60 ஆயிரம் பேரால் நடப்பட்டுள்ளது. ஒரு தனி அமைப்பு இச்செயல் செய்துள்ளது என ஐ.நா. சபை பாராட்டியுள்ளது - என்றார்.

# ஈழத் தமிழரின் வாழ்வுரிமையைக் காக்க வரும் 20 இல் பேரணி, பொதுக்கூட்டம்

## பழ.நெடுமாறன் அறிவிப்பு



மதுரை, ஓக. 10

ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமையைக் காக்கும் வகையில் வரும் 20 ஆம் திகதி சென்னையில் உலகத் தமிழர்கள் பங்கேற்கும் பேரணி மற்றும் பிரகடனப் பொதுக்கூட்டம் நடைபெறும் - என உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் கூறினார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமைக்காக உலகத் தமிழர்கள் பிரகடனம் வெளியிடும் வகையில் சென்னையில் வரும் 20 ஆம் திகதி பேரணி, பொதுக்கூட்டம் நடைபெறுகிறன.

இதில் பா.ம.கவின் தலைவர் ராமதாஸ், ம.தி.மு.க. பொதுச் செயலர் தா.பாண்டியன், திண்டிவனம் ராமமூர்த்தி, பசுபதிபாண்டியன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழ் அகதிகளுக்கு குடியேற்ற உரிமை வழங்கவேண்டும் என்ற ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் கூறியுள்ள கருத்தை வரவேற்கிறேன். பல நாடுகளில் ஈழத்தமிழர்களுக்கு குடியுரிமை கிடைத்த நிலையில் நமது நாட்டில் சிறை முகாம்களில் எவ்வித உரிமையும் இன்றி அவர்கள் வாழுகின்றனர். இலங்கை அரசு 'வடக்கு வசந்தம்' என்ற பெயரில் மோசடி திட்டத்தை அறிவித்து அதற்கு உதவிட வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் தலைமையிலான குழுவை அனுப்ப இந்தியாவிடம் கோரியது. ஆனால், தமிழர்களை இலங்கை அரசு மோசமாக நடத்துவது குறித்து எம்.எஸ்.சுவாமிநாதனிடம் எடுத்துரைத்ததால் அவர் இலங்கை செல்ல மறுத்துவிட்டார் - என்றார் நெடுமாறன்.

# ஒகேனக்கல் குடிதண்ணீர் திட்டத்தை நிறைவேற்ற வழங்கிய அனுமதியை நிறுத்தி வைக்குக!

## மத்திய அரசிடம் கர்நாடக முதல்வர் கோரிக்கை

புதுடில்லி, ஓக. 10

ஒகேனக்கல் கூட்டு குடிதண்ணீர் திட்டத்தை நிறைவேற்ற தமிழக அரசுக்கு வழங்கிய அனுமதியை நிறுத்தி வைக்கும்படியும், இத்திட்டத்தைத் தொடர்ந்து நடத்தக் கூடாது என மத்திய அரசு உத்தரவிடவேண்டும் என்றும் கர்நாடக முதல்வர் எடிரப்பா கோரிக்கை விடுத்துள்ளார்.

டில்லியில் நேற்றுமுன்தினம் மத்திய நீர் வளத் துறை அமைச்சர் பவன்குமார் பன்சாலை சந்தித்துப் பேசியபோதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு -

ஒகேனக்கல் கூட்டு குடிதண்ணீர் திட்டம், காவிரி நதி நீர் தீர்ப்பாயம் முன்பாக வைக்கப்படவில்லை. அது பற்றி தீர்ப்பாயம் முடிவும் செய்யவில்லை.

இரு மாநிலங்களுக்கும் இடையே உள்ள நதி நீர் எல்லை குறித்து தீர்மானிக்க கூட்டு சர்வே நடத்தலாமா என்பது பற்றி 20 ஆண்டுகளுக்கும் மேலாக பரிசீலனையில் உள்ளது. மேலும், எங்களது எல்லைக்கு உட்பட்ட பகுதியில் மின்சார கட்டுமானப்பணிகள் மேற்கொள்வது தொடர்பாக காவிரி நதிநீர் தீர்ப்பாயம் இன்னும் இறுதி தீர்ப்பை அளிக்கவில்லை.

எனவே, ஒகேனக்கல் கூட்டு குடிதண்ணீர் திட்டத்தைத் தொடங்கும் முன்பாக இப்பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு காணவேண்டும். அதுவரை ஒகேனக்கல் திட்டத்தை நிறைவேற்ற தமிழக அரசுக்கு மத்திய அரசு வழங்கிய அனுமதியை நிறுத்த வைக்கவேண்டும் - என்றார்.




# விஸா முடிந்த பின்னர் தங்கியிருந்த யாழ். இளைஞர் கேரளாவில் கைது

கேரளா, ஓக. 10

கேரள மாநிலம் திருவனந்தபுரத்திலுள்ள விடுதி ஒன்றில் பொலிஸார் சோதனை மேற்கொண்டபோது இலங்கை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தனபாலசிங்கம் என்பவர் விஸா காலாவதியான கடவுச்சீட்டுடன் சட்டவிரோதமாகத் தங்கியிருந்த குற்றத்திற்காக பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

குறித்த இளைஞரின் விஸா காலாவதியாகி 9 மாதங்கள் கடந்துவிட்டன. இந்த இளைஞர் இரண்டு மாதங்களுக்கு முன் டில்லி சென்று அங்கிருந்து இலங்கை செல்ல முயன்றுள்ளார். ஆனால் முடியவில்லை.

இதையடுத்து கடந்த சிலதினங்களுக்கு முன் திருவனந்தபுரம் வந்த அவர் அங்கிருந்து கொழும்பு செல்ல விமான அனுமதிச் சீட்டு வாங்கியிருந்தார்.

இந்நிலையில் அவர் தங்கியிருந்த விடுதியை பொலிஸார் சோதனை மேற்கொண்ட போது அவரது கடவுச்சீட்டு காலாவதியான விடயம் தெரியவந்தது. உடனடியாக அந்த யாழ். இளைஞரைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

# புலிகளின் ஊடுருவல் இல்லை

தமிழக பாதுகாப்புக் குழுமம் தெரிவிப்பு

தூத்துக்குடி, ஓக. 10

தமிழகக் கடலோரப் பகுதிகளில் விடுதலைப் புலிகள், தீவிரவாதிகளின் ஊடுருவல் இல்லை - என்று கடலோரப் பாதுகாப்புக் குழும ஐ.ஜி. ராஜேஷ்தாஸ் கூறினார்.

இதுகுறித்து தூத்துக்குடியில் அவர் அளித்த பேட்டியின் விவரம் வருமாறு -

தமிழகக் கடலோரப் பகுதிகளில் அனைத்து காவல் துறையினரும் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கை வெற்றிகரமாக அமைந்தது. கடலோரப் பகுதிகளில் விடுதலைப் புலிகள், தீவிரவாதிகள் ஊடுருவல் இல்லை. இருப்பினும், எதிர்காலத்தை கருத்தில் கொண்டு முன் எச்சரிக்கை நடவடிக்கை தீவிரப்படுத்தப்படும்.

கடலோரப் பாதுகாப்புக் குழுமத்திற்கு ரோந்துப் படகுகளை ஓட்டுவதற்காக தேவைப்படும் 74 மாலுமிகளில் ஏற்கனவே 12 பேர் தேர்வு செய்யப்பட்டுவிட்டனர். மேலும் ஒரு படகுக்கு 3 மாலுமிகள் வீதம் தெரிவு செய்யப்பட உள்ளனர். தமிழகக் கடலோரப் பாதுகாப்புக்கு மேலும் 11 படகுகள் விரைவில் வரவழைக்கப் படும் - என்றார்.

# அகதிகள் என்ற போர்வையில் தமிழகம் வந்த 3 ஈழ இளைஞர்கள் பற்றி திடுக்கிடும் தகவல்கள்

இராமேஸ்வரம், ஓக. 10

அகதிகள் என்ற போர்வையில் இராமேஸ்வரத்தில் ஊடுருவ முயன்ற 3 இளைஞர்களை பொலிஸார் கைது செய்தனர். அவர்கள் கொள்ளை வழக்குகளில் தேடப்படுபவர்கள் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

இலங்கையைச் சேர்ந்த அஞ்சன் (வயது - 19), சரத்பாபு (வயது - 18), திருக்குமரன் (வயது - 16) ஆகிய 3 தமிழ் இளைஞர்கள் கடந்த 31ஆம் திகதி பிளாஸ்டிக் படகு மூலம் இராமேஸ்வரம் அருகே உள்ள நரிக்குடி கடற்கரையில் வந்து இறங்கினர். பின்னர் 3 பேரும் தாங்கள் அகதிகளாக வந்ததனர் எனக் கூறி இராமேஸ்வரம் பொலிஸாரிடம் சரண் அடைந்தனர்.

கடந்த ஆண்டுவரை மன்னார்ப் பகுதியில் பெற்றோருடன் வசித்து வந்ததனர் எனவும், அப்போது ஏற்பட்ட போரினால் முல்லைத்தீவு பகுதிக்குச் சென்றபோது சிங்கள இராணுவத்தினரின் தாக்குதலில் தங்கள் பெற்றோர் பலியாகிவிட்டனர் எனவும் வவுனியா முகாமில் இராணுவத்தினரின் கொடுமை தாங்க முடியாமல் படகில் இங்கு தப்பி வந்துவிட்டதாகவும் தெரிவித்தனர்.

ஆனால் கியூ பிரிவுப் பொலிஸார் நடத்திய விசாரணையில் இவர்கள் கூறிய அனைத்துமே பொய்யான தகவல் என்று தெரியவந்தது.

மேலும் அனுசனின் தந்தை திவாகரன், சரத்பாபுவின் தந்தை தங்கசுவாமி, திருக்குமரனின் தந்தை பாலசுந்தரம் ஆகிய 3 பேரும் உயிருடன் உள்ளனர்.

3 இளைஞர்களும் இலங்கை நைனார் தீவில் பெற்றோருடன் வசித்து வந்தபோது அங்கு பல்வேறு கடைகளில் கொள்ளை அடித்திருக்கிறார்கள். மேலும் இளம்பெண்களிடம் சில்மிஷ வேலையிலும் இறங்கியுள்ளனர்.

இதுகுறித்து அங்குள்ள பொலிஸ் நிலையங்களில் இவர்கள் மீது ஏராளமான வழக்குகள் உள்ளன. இதனால் பெற்றோரே இவர்களை வீட்டை விட்டு விரட்டி விட்டனர். இதனால் தமிழகத்துக்கு அகதிகள் போல வந்து தங்கிவிடலாம் எனத் திட்டமிட்டு படகில் இராமேஸ்வரம் வந்துள்ளனர் என விசாரணையில் தெரியவந்தது.

# கர்நாடகாவில் வள்ளுவர் சிலை: திறந்து வைத்தார் கருணாநிதி

பெங்களூர், ஓக.10

பெங்களூரில் 18 ஆண்டுகளாக மூடிக்கிடந்த தமிழ்ப்புலவர் திருவள்ளுவர் சிலையை பலத்த பாதுகாப்புக்கிடையே தமிழக முதல்வர் கருணாநிதி நேற்றுக் காலை திறந்து வைத்தார்.

ஆர்.பி.ஏ.என்.எம். மைதானத்தில் நடைபெற்ற விழாவில் திருவள்ளுவர் சிலையை கர்நாடக முதல்வர் எடியூரப்பா முன்னிலையில் தமிழக முதல்வர் கருணாநிதி ரிமோட் கொன்ட்ரோல் மூலம் திறந்து வைத்து உரையாற்றினார்.

சிலை திறப்பு விழாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்த கன்னட அமைப்பைச் சேர்ந்தவர்கள் பொலிஸாரால் விழா நடைபெறும் இடத்திலிருந்து 10 கிலோமீற்றருக்கு அப்பால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இதனால் சிலை திறப்பு விழா அமைதியாக நடைபெற்றது என பொலிஸார் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பைதுல்லா மசூத் உயிருடன் உள்ளார்: தலிபான் மூத்த தளபதி அறிவிப்பு

வாஷிங்ரன், ஓக. 10

''ஏவுகணைத் தாக்குதலில் பாகிஸ்தான் தலிபான் தலைவர் பைத்துல்லா மசூத் பலியாகவில்லை. அவர் உயிருடன் உள்ளார். உயிரோடு இருப்பவரை மரணித்துவிட்டார் என கூறுவது ஒரு கேலிக்கூத்து'' என தலிகான் இயக்கம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் வசிரிஸ்தான் பகுதியில் கடந்த புதன்கிழமை அமெரிக்கா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில், தலிபான் தலைவர் பைதுல்லா மசூத் கொல்லப்பட்டார் என்ற தகவல் வெளியாகியது. இதை பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஷா மெக்மத் குரேஷி உறுதிப்படுத்தினார்.

ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தில் தேடுதல் வேட்டை நடத்தி, மசூத்தின் சடலம் கண்டுபிடிக்கப்படும் என்றும், அதன்மூலம் மசூத் பலியான விடயம் 100 சதவீதம் உறுதிப்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

எனினும், இதை தலிபான் இயக்கத்தின் மூத்த தளபதிகளில் ஒருவரான ஹகிமுல்லா மசூத் மறுத்துள்ளார். பிபிசி உருது இணையத்தளத்துக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், ''பைதுல்லா மசூத் பலியானார் எனக் கூறப்படுகிறது. இது ஒரு கேலிக்கூத்து. இது உள்வு அமைப்புகளின் வேலை. மசூத் உயிருடன்தான் இருக்கிறார்'' என குறிப்பிட்டுள்ளார். பேட்டியளித்த ஹகிமுல்லா மசூத்தும் சனிக்கிழமை இடம்பெற்ற மோதலில் பலியானார் என பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

பைத்துல்லா மசூத் கொல்லப்பட்டமை உண்மை என பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் குரேஷி மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார். மசூத்தின் இறுதி ஊர்வலத்திலும், உடல் அடக்க நிகழ்ச்சியிலும் கலந்துகொண்டவர்களே இத்தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, தலிபான் இயக்கத் தலைவர் பலியானதைத் தொடர்ந்து ஏற்பட்ட கோஷ்டி மோதலில் இயக்கத்தின் அடுத்த தலைவராக வரவிருந்த முக்கிய நபரான ஹகிமுல்லா மசூத் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

## மும்பைத் [தா]க்குதல் தொடர்பான முக்கிய ந[ப]ர் பாகிஸ்தானில் கைது

மும்பைத் தாக்குதலில் தொடர்புடைய முக்கிய சந்தேக நபரான லஷ்கர்-இ- தொய்பா இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் பாகிஸ்தான் அரசால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் மும்பையில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் தொடர் பாக, இந்தியா அளித்த ஆதாரங்களின் அடிப்படையில் பாகிஸ்தான் புலனாய்வு முகமையான எவ்.ஐ.ஏயின் சிறப்புப் பிரிவு விசாரணை நடத்தி வருகிறது. இப்பிரிவு லஷ்கர் இயக்கத்தைச் சேர்ந்த அகமது என்பவரை கைது செய்துள்ளது.

வடமேற்கு பாகிஸ்தானிலுள்ள பட்டாகிராம் என்ற ஊரைச் சேர்ந்த அகமதுவுக்கு, மும்பைத் தாக்குதலில் தொடர்பு உள்ளமை தெரியவந்துள்ளது என எவ்.ஐ.ஏ. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என இஸ்லாமாபாத்திலிருந்து வெளியாகும் 'தி டெய்லி ரைம்ஸ்' பத்திரிகைச் செய்தி வெளியிட்டுள்ளது.

## மாண்ட குழந்தை மீண்டது!

பரகுவே, ஓக. 10

பரகுவேயில் உயிரிழந்துவிட்டது என வைத்தியர்களால் அறிவிக்கப்பட்ட பச்சிளம் குழந்தையொன்று திடீரென உயிர்த்தெழுந்துள்ளது. உயிரிழந்துவிட்டதாக அறிவிக்கப்பட்ட குழந்தை சில மணித்தியாலங்களின் பின்னர் உயிருடன் உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இறந்த குழந்தையை வீட்டுக்கு எடுத்துச் சென்ற பெற்றோர், இறுதிக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லும் வழியில் குழந்தை இறக்கவில்லை என கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சவப்பெட்டிக்குளிருந்த தனது மகன் அழுவதனை தன்னால் கேட்க முடிந்தது என ஜோஸ் அல்வரென்கா தெரிவித்துள்ளார். மீட்கப்பட்ட குழந்தை அதே வைத்தியசாலையில் மீண்டும் அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்று வருகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

குழந்தை ஆபத்தான கட்டத்தை தாண்டிவிட்டது என வைத்தியர்கள் அறிவித்துள்ளனர். குழந்தை உயிரிழந்து விட்டதா என்பதனை வைத்தியர்கள் சரியான முறையில் பரிசோதனை செய்யவில்லை என குழந்தை நல வைத்தியப் பிரிவின் பொறுப்பாளர் குற்றஞ்சாட்டியுள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மகப்பேற்று சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட ஜோஸின் மனைவி பிரசவித்த இக்குழந்தை இறந்து பிறந்து விட்டது என வைத்தியர்கள் முன்னர் அறிவித்திருந்தனர்.

## ஹெலி. - விமானம் மோதல்: அமெரிக்காவில் 9 பேர் பலி

அமெரிக்காவின் நியூஜெர்சி மாகாணத்தில் ஹட்சன் ஆற்றுக்கு மேலே பறந்துகொண்டிருந்த சிறிய ரக விமானமும், சுற்றுலா ஹெலிகொப்டரும் நேருக்கு நேர் நடுவானில் மோதி ஆற்றில் விழுந்தன. இந்தக் கோர விபத்தில் 9 பேர் பலியாயினர்.

ஐந்து இத்தாலிய சுற்றுலாப் பயணிகளுடன் அந்த சுற்றுலா ஹெலிகொப்டர் சென்றுகொண்டிருந்தது. ஹட்சன் ஆற்றுக்கு மேலே பறந்தபோது ஹெலிகொப்டரும், விமானமும் மோதிக்கொண்டன. ஹெலிகொப்டரும், விமானமும் மோதிக்கொண்ட காட்சியை நூற்றுக் கணக்கானோர் நேரில் கண்டுள்ளனர்.

## அணு ஆயுதமற்ற உலகம் சாத்தியமே: ஐ.நா. செயலாளர் நாயகம் நம்பிக்கை

நியூயோர்க், ஓக. 10

''அணு ஆயுதமற்ற உலகம் ஏற்படுவது சாத்தியமானதே'' என ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் அமைதிக்கான மேயர்களின் 7 ஆவது மாநாட்டை'யொட்டி தாம் விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார். இம்மாநாடு வாஷிங்டனில் நடைபெறுகிறது.

''ஏராளமான அணு ஆயுதங்கள் இன்னும் உள்ளன. இவற்றைப் பெறுவதற்கு உலகிலுள்ள பல்வேறு நாடுகள் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளன. எனினும், அணு ஆயுதமற்ற உலகம் ஏற்படவேண்டும் என்ற கனவு மெய்ப்படுவதற்கான சாத்தியம் இன்னும் உண்டு'' என்றும் அவர் அதில் தெரிவித்துள்ளார்.

''அணு ஆயுதமற்ற உலகம் உருவாவது தொலைவில் இருக்கலாம்; ஆனால், அது நீண்டகால கனவாகவே இருந்துவிடாது. அணு ஆயுதமற்ற உலகம் ஏற்படவேண்டும். இதை நடைமுறையில் சாத்தியமாக்க உலகிலுள்ள அனைத்து அரசுகளும், மக்களும் தொடர்ந்து பாடுபடவேண்டும்'' என்றும் பான் கீ-மூன் கேட்டுள்ளார்.

''நாம் இந்த இலட்சியத்தை அடைவதற்கான இலக்கு வெகு தொலைவில் உள்ளது. எனினும், அதற்காக நாம் விரக்தியடையத் தேவையில்லை'' என்றும் அதில் பான் கீ-மூன் மேலும் கூறியுள்ளார்.

## ஈராக்கில் கார்க் குண்டுத் தாக்குதல்: 30 பேர் மரணம்; 120 பேர் காயம்

ஈராக்கின் மொசூல் நகரிலுள்ள மசூதியில் தற்கொலைப் படையினர் வெள்ளிக்கிழமை நடத்திய கார்க் குண்டுத் தாக்குதலில் 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஈராக்கில் கடந்த சில ஆண்டுகளாக ஷியா முஸ்லிம்களுக்கும் சன்னி பிரிவு முஸ்லிம்களுக்குமிடையே மோதல்கள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், வெள்ளிக்கிழமை வடக்கு ஈராக்கிலுள்ள மொசூல் நகரில் தற்கொலைதாரிகள் கார்க் குண்டுத் தாக்குதல் நடத்தினர்.

ஷியா பிரிவினர் அங்குள்ள மசூதியில் தொழுகை நடத்திக்கொண்டிருந்தனர். அப்போது மசூதிக்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரில் தற்கொலைதாரிகள் குண்டுகளை வெடிக்கச் செய்தனர்.

இவற்றில், 30 பேர் உடல் சிதறி பலியாகினர். மேலும் 120 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.


# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை - ஒகஸ்ட 23, 2009.

"15 ஆசிரியர்களின் பல்கோண வினாத்தாள்களை வீட்டிலிருந்தவாறே சுயமாக
பயிற்சி செய்ய உதயன் கல்விச்சுடர் வழங்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்"

நாளை [11/08/2009] முதல்
தேசிய ரீதியில் புகழ்பெற்ற கல்விச்சுடர் வளவாளர்கள்
யாழ். மாணவர்களுக்காக தயாரித்து வழங்கும்

மாணவர்களே ! வெற்றிக்கான தொடர் பயிற்சிக்கு நீங்கள் தயாரா? பயிற்சி வழங்க நாங்கள் தயார்!

## இறுதி மாதிரி வினாத்தாள் - தொடர் பரீட்சைப் பயிற்சி

கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா, குருநாகல் மாவட்டங்களில் வெற்றிநடைபோடும் எமது சிறப்பு ஆசிரியர்கள் ''யாழ் மாணவர்களின் நலன் கருதி'' விசேடமாகத் தயாரித்துவழங்கும் இறுதி மாதிரி வினாத்தாள்கள் நாளை11/08/2009 முதல் உதயன் நாளிதழில் (வினாத்தாள்கள்-I,II என்பன ஒரே நாளில்) தொடர்ச்சியாக வெளிவருகின்றன.

### மாணவர்களே ! பெற்றோர்களே !!

இதுவரை கற்ற அறிவைக்கொண்டு இவ் வினாத்தாள்களை சுயமாகப் பயிற்சிசெய்து மறுநாள் வெளிவரும் விடைகளுடன் ஒப்பீடுசெய்து திருத்திக்கொள்ளுங்கள். அதன் பின்பு அரசபரீட்சை வினாத்தாள்கள் உங்களுக்கு இலகுவாக இருக்கும் என்பது கல்விச்சுடரின் அசையாத நம்பிக்கை. உங்கள் பிரதிகளுக்கு அருகில் உள்ள உதயன் முகவரிடம் முற்பதிவு செய்துகொள்ளுங்கள். (பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் எமது பத்திரிகைகளை மொத்தமாக பெறவிரும்பின் வரும் இலக்கங்களுடன் தொடர்புகொள்ளலாம்.)

கல்விச்சுடர் ஆசிரியர்: 0212223399/ 0714273035 / 0716850005
விநியோக முகாமையாளர்- 0714220005

### வளவாளர்கள்

திரு. திருமதி.புனியாமீன் - கண்டி
ஜனாப். யு.எல்.எம்.சாஜித் - நிந்தவூர்
திரு. எஸ்.கபிலன் - வவுனியா
ஜனாப்.எஸ்.எம்.எம்.சஜிர்-சம்மாந்துறை
திரு. என்.சந்திரகுமார் - மட்டக்களப்பு
திரு. எஸ்.சத்தியரூபன் - கம்பளை
திரு. வே.அன்பழகன் - யாழ்ப்பாணம்
எஸ்.ரி.முனசிங்கா (சகோதர மொழி )
திரு. ஏ.ரவீந்திரன் - வவுனியா
திரு. எஸ்.தீபன் - வவுனியா
திரு. து.திலீப்குமார் - கொழும்பு
திரு. ரி.மன்மதகாந்தன் - கொழும்பு
திரு. ஏ.சந்திரபவன் - கொழும்பு
திரு. எஸ்.தயா[illegible]
திரு. பி.அம்பி[illegible]

### வெளிவரும் திகதிகள்

11/08/2009 (மூத்த பிரபல ஆசிரியர்)
12/08/2009 (அம்பாறை மாவட்ட முன்னணி ஆசிரியர்) (எக்ஸ்பிரஸ் கல்வி நிலைய ஆசிரியர்)
13/08/2009 (ஸ்ரார் கல்வி நிலையம்,சம்மாந்துறை) (பிரபல புத்தக எழுத்தாளர்)
14/08/2009 (கம்பளை சாகிரா கல்லூரி வளவாளர்)
15/08/2009 (யாழ். மாவட்ட முன்னணி ஆசிரியர்)
17/08/2009 ( குருநாகல் பிரபல ஆசிரியர்) (தாலிக்குளம் பாடசாலை ஆசிரியர்)
18/08/2009 (பூந்தோட்டம் மகாவித்தியாலய ஆசிரியர்)
19/08/2009 (கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் முன்னணி ஆசிரியர்கள்) (ஜனாதிபதி விருதுபெற்ற ஆசிரியர்)
20/08/2009 (ACA கல்வி நிலைய ஆசிரியர்)
21/08/2009 (கொழும்பு மாவட்ட பிரபல ஆசிரியர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் சுயமாகச் சிந்தித்து சுதந்திரமாக தமது விருப்பங்களை வெளிப்படுத்தியுள்ளனர்

## தேர்தல் முடிவுகள் குறித்து அமைச்சர் டக்ளஸ் கருத்து



யாழ்ப்பாணம், ஓக 10

எமது மக்கள் சுயமாகச் சிந்தித்து சுதந்திரமாகத் தங்களது விருப்புக்களை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற சூழல் உருவாகி வருவதை தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியிருக்கின்றன.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு .தெரிவித்தார்.

தேர்தல் முடிவுகள் குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

நடந்து முடிந்துள்ள யாழ். மாநகரசபைத் தேர்தல் மற்றும் வவுனியா நகரசபைத் தேர்தல்களின் பெறுபேறுகளைப் பார்க்கும் போது தனிப்பட்ட முறையில் யாழ். மாநகர சபைத் தேர்தலில் நான் தோல்வி அடைந்திருக்கிறேன். வவுனியா நகர சபைத் தேர்தலில் நான் படுதோல்வி அடைந்திருக்கி றேன்.

எமது மக்கள் சுயமாகச் சிந்தித்து சுதந்திரமாகத் தங்களது விருப்புகளை வெளிப்படுத் துவதற்கு ஏற்ற சூழல் உருவாகி வருவதை இத்தேர்தல்கள் வெளிப்படுத்தி இருக்கின்றன. இது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். இவ்வாறானதொரு சூழலை ஏற்படுத்திக் கொடுத்துள்ள ஜனாதிபதிக்கு நான் எனது நன்றியை எமது மக்கள் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

யாழ்.மாநகர சபைத் தேர்தலில் அனைத்துக் கட்சிகளுக்கும் வாக்களித்த மக்கள் அனைவரையும் ஒரே மாநகர மக்களாக பாரபட்சமின்றி கருதி சேவையாற்றவும் இழந்தவைகளை மீளப்பெற்று நடைமுறை சாத்தியமான தீர்வை வென்றெடுக்கவும் கரங்கோர்க்குமாறு அனைவரையும் உரிமையுடன் அழைக்கிறேன். வாக்களித்து எம்மைப் பலப்படுத்தியவர்களுக்கும் புதிய ஜனநாயகச் சூழலை சரியாகப் பயன்படுத்தி நேர்மையான தேர்தலை நடத்த உதவிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்-என்றார் அவர். (1)

## விபத்தில் மாணவன் காயம்

மீசாலை ஏ-9 வீதியில் இடம் பெற்ற லொறி - மோட்டார் சைக்கிள் விபத்தில் பாடசாலை மாணவன் படுகாயமடைந்தார்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் பகல் இடம் பெற்றது.

மீசாலை மேற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் பார்த்தீபன் (வயது 19) என்னும் மாணவன் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் . போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (1-207)

# ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை வெற்றிபெறச் செய்த யாழ்.மக்களுக்கு நன்றி

## ஜனாதிபதியின் சார்பில் மஹிந்தானந்த

யாழ்ப்பாணம், ஓக. 10

யாழ்.மாநகர சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்த யாழ்.மக்களுக்கு ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ நன்றி கூறியுள்ளதாக ஜனாதிபதியின் யாழ்.மாநகர சபைத் தேர்தல் இணைப்பாளரான மின்சக்தி அமைச்சர் மஹிந் தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.



20 வருடங்களுக்கும் மேலாக யுத்த சூழ் நிலையில் துன்பப்பட்ட மக்கள், யாழ். மாநகர சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை பலப்படுத்திய வாக்காளர்கள் அனை வரையும் ஜனாதிபதி நன்றியுடன் நினைவில் கொள்வதாகவும் ஜனாதிபதியின் இணைப்பாளர் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். (04)

# வடக்குத்தேர்தல்களில் எதிர்பார்த்த வெற்றியை தமிழ் மக்களிடம் அரசு பெறவில்லை

## மாவை சேனாதிராசா தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,ஓக.10

தமிழ் மக்களிடம் ஆளுங்கட்சி எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை என்பதை யாழ்ப்பாணம், வவுனியா தேர்தல்களின் முடிவுகள் நிரூபித்துள்ளன.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளரும், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகள் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் இப்படிக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்.மாநகரசபைக்கும் வவுனியா நகரசபைக்குமான தேர்தல் நடந்து முடிந்துள்ளது. வவுனியா நகரசபையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வெற்றி பெற்றிருப்பது ஆறுதல் தரும் செய்தியாகும்.

யாழ்ப்பாணத்தில் 18.26% வாக்குகளே பதியப்பட்டுள்ளன. ஒரு லட்சத்து நாலாயிரம் வாக்காளர்களில் கிட்டத்தட்ட 40 ஆயிரம் வாக்காளர் அட்டைகள் விநியோகப்பட்டிருக்கவில்லை. பல ஆயிரக்கணக்கான வாக்காளர்களிடம் தேசிய அடையாள அட்டை இல்லை. இராணுவத்தினரால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளே இருந்துள்ளன. அதனால் அவர்களால் வாக்களிக்கமுடியவில்லை. 80.74% மக்கள் இத்தேர்தலில் பங்குபற்றவில்லை என்பது கவனிக்கத்தக்கதாகும்.

தேர்தலில் 18.26 வீதம் மிகக் குறைந்த அளவு வாக்குகள் பதியப்பட்டமைக்கு மக்களிடம் ஏற்பட்டிருந்த அச்சம், பீதி மட்டுமல்ல மனவிரக்தியும் அதனால் ஏற்பட்ட தேர்தலில் ஈடுபாடற்ற தன்மையும் ஒரு காரணமாகும்.

அரசின் அதிகாரப் பலம், இராணுவத்தின் தொடர்ச்சியான பிரசன்னமும் நடமாட்டமும் அமைச்சர்கள் தேர்தல் காலங்களில் தொடர்ச்சியாக யாழ்ப்பாணம் வந்து அதிகாரத்தை துஷ்பிரயோகஞ் செய்து பல்கலைக்கழகம் முதலான பல துறைசார் அரச ஊழியர், மாணவர்கள் ஆகியோரை நிர்ப்பந்தமாக அழைத்து நடத்தும் கூட்டங்களில் சலுகைகளை அறிவித்து வந்தமை, தேர்தலில் அரசுக்கு ஆதரவளிக்காது விட்டால் மீனவர்கள் தொழிலுக்கு செல்ல முடியாத நிலை ஏற்படும் என அறிவுறுத்தப்பட்ட அச்சம் மற்றும் அரசாங்கத்தின் முழு வளங்களும் இத் தேர்தலில் பாவிக்கப்பட்டுள்ளமை; அதற்கு மேலாக புத்தளம் போன்ற இடங்களில் இடம்பெயர்ந்த மக்களில் 47% வாக்குகள் பதியவைக்கப்பட்டமையும் அரசாங்க கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 10,600 இத்தனை வாக் குக்களைப் பெறுவதற்குக் காரணிகளாகும். அத்துடன் தேர்தலில் அரசு வெற்றி பெறா விட்டால் தமக்கு ஆபத்து ஏற்படும் என மக்கள் அச்சமுறவைக்கப்பட்டிருந்தனர்.

அரசாங்கம் திட்டமிட்டவாறு எதிர்பார்த்தவாறு தமிழ் மக்கள் பெருமளவில் வாக்களிக்கவில்லை என்பது வெளிப்படை. 'எப்படியும் அரசு வெற்றி பெறும்' என்ற அறிவிப்பை அரசு நிறைவேற்றியுள்ளது. ஆனால் உண்மையில் அரசு எதிர்பார்த்த அளவுக்கு தமிழ் மக்களிடம் வெற்றி பெறவில்லை. யாழ்ப்பாணத்தில் 18.26% வாக்களிப்பையும் வவுனியாவில் தமிழரசுக்கட்சி வெற்றிபெற்று ஆளுங்கட்சிக் கூட்டமைப்பு மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டமையும் தமிழ் மக்களிடம் ஆளுங்கட்சி எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை என்பதை நிரூபிப்பதாயுள்ளது.

யாழ்ப்பாணத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு எட்டாயிரத்திற்கும் மேலான வாக்குகள் பதியப்பட்டுள்ளன. பல இடங்களில் எமது மக்கள் தேர்தலில் அக்கறை காட்டாமல் வாக்களிக்காமல் இருந் தமை ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும் இத்தனை மனிதப் பேரவலம், அடக்குமுறைச் சூழல், அச்சம் நிலவிய போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்த மக்களுக்கு இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்- என்றுள்ளது.

# வடக்கு மக்கள் தொடர்ந்தும் தமிழ்த் தேசியத்துக்கே ஆதரவு; யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தலில் தோல்வி இல்லை

## சுரேஷ் பிரேமச்சந்திரன் சொல்கிறார்

கொழும்பு, ஓக. 10

தமிழ் மக்கள் தொடர்ந்தும் தமிழ்த் தேசியத்தின் பக்கமே இருக்கின்றார்கள் என்பதையே யாழ். மாநகரசபை, வவுனியா நகரசபைத் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபைத் தேர்தலைப் பொறுத்தளவில் உண்மையில் தமிழ்க் கூட்டமைப்பு தோல்வி அடையவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

வவுனியா நகரசபைத் தேர்தலைப் பொறுத்தளவில், பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் அரைவாசிக்கும் அதிகமானோர் தேர்தலைப் புறக்கணித்திருப்பதன் மூலமும், வாக்காளர்களில் பெருந்தொகையானோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்திருப்பதன் மூலமும் அரசை வெளிப்படையாகவே நிராகரித்து விட்டார்கள் என்றும் சுரேஷ் எம்.பி. குறிப்பிட்டார்.யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் இடம்பெற்று முடிந்த தேர்தல்கள் தொடர்பாக அவர் உதயனுக்குத் தெரிவித்தவை வருமாறு:-

இடம்பெற்று முடிந்த யாழ். மாநகர சபை, வவுனியா நகரசபைத் தேர்தல் முடிவுகள் தமிழ் மக்கள் தொடர்ந்தும் தமிழ்த் தேசியத்தின் பக்கமே இருக்கின்றார்கள் என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றன.

### மக்கள் அச்சத்துடனேயே வாழ்கிறார்கள்

யாழ்ப்பாணத்தில் இன்னமும் இயல்பு வாழ்க்கை ஏற்படவில்லை. கடந்த மூன்று வருட காலமாக யாழ்ப்பாணத்தில் வன்முறைக் கலாசாரம் தலைவிரித்தாடுகிறது. கடத்தல்கள், காணாமல் போதல்கள், கப்பம் கோரல்கள், சட்டத்துக்குப் புறம்பான கொலைகள், பாதுகாப்புப் படையினரின் கெடுபிடிகள்,இராணுவ ஆக்கிரமிப்பு ஆகியன புரையோடிக் காணப்படுகின்றன. ஆகவே மக்களின் உயிருக்கு உத்தரவாதம்இல்லாத சூழ்நிலையில் எதிர்காலம் பற்றிய கேள்விக்குறியுடன் மக்கள் அச்சத்தின் மத்தியிலேயே இங்கு வாழ்கின்றார்கள். ஆகவே இம்மக்கள் இலங்கை அரசியலிலோ, யாழ். மாநகரசபைத் தேர்தலிலோ, தேர்தல் பிரசாரங்களிலோ பெரிதும் ஆர்வம் காட்டவில்லை என்பதே உண்மையாகும். அவர்கள் இத்தேர்தலை வரவேற்கவில்லை.

அபிவிருத்தி என்ற போர்வையில் யாழ். மாநகரசபைத் தேர்தலுக்கான 'வாக்குச் சேகரிப்பு' நடவடிக்கையில் அரசு ஈடுபட்டது. அமைச்சர்கள் மாறி மாறி யாழ்ப்பாணத்துக்கு வந்து சென்றார்கள். வாக்குறுதிகள் பலவற் றையும் அள்ளி வீசினார்கள். தன்னுடைய அனைத்து வளங்களையும் பயன்படுத்தி அரசு பிரசாரங்களை முன்னெடுத்தது. யாழ்ப்பாணத்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. ஆனால் யாழ். மாநகர சபைத் தேர்தலில் மக்கள் அரசை நம்பி ஏமாறவில்லை. குறிப்பாக 82 சதவீதமானோர் தேர்தலில் பங்கேற்கவில்லை.

### யாழ். மக்கள் தேர்தலைப் புறக்கணித்திருக்கின்றர்

இதன்மூலம் யாழ். மக்கள் தேர்தலை புறக்கணித்திருக்கிறார்கள் என்ற முடிவுக்கே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வருகின்றது. 18 சதவீதமானோர் வாக்களித்துள்ளனர். வாக்களித்தவர்களில் குறிப்பிட்ட பெருந்தொகையினர் அரசின் கெடுபிடிகள், அச்சுறுத்தல்கள், போலியான வாக்குறுதிகள் ஆகியவற்றுக்கு மத்தியிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மிகவும் கணிசமான அளவில் வாக்களித்துள்ளனர். எனவே, நாம் யாழ். மாநகர சபைத் தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்படவில்லை. மக்கள் தொடர்ந்தும் தமிழ்த் தேசியத்தின் பக்கமே நம்பிக்கை வைத்துள்ளார்கள் என்பதையே கணிசமான வாக்குகளை எமக்கு தந்து நிரூபித்துள்ளனர்.



### வவுனியாவிலும் தேர்தல் புறக்கணிப்பு

வவுனியா நகர சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்றுள்ளது. அரசு வவுனியா நகர சபைத் தேர்தலில் மண் கவ்வி விட்டது. ஏனெனில், பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் அரைவாசிக்கும் அதிகமானோர் தேர்தலில் வாக்களிக்காமல் புறக்கணிப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். அதேநேரம், வாக்களித்தவர்களில் அநேகமானோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வாக்களித்துள்ளனர். எனவே, ஒட்டுமொத்தத்தில் வவுனியா மக்கள் அரசை நிராகரித்துள்ளனர் என்பது வெளிப்படையாகும்.

தமிழ் மக்கள் அரசை நிராகரித்துள்ளனர் என்பதே இத்தேர்தல் மூலம் அரசுக்கு விடுக்கப்பட்டிருக்கும் செய்தியாகும் - என்றார். (அ-சி)

# தேர்தல் தினத்தில்37 வன்முறைகள்

கொழும்பு, ஓக. 10

ஊவா மற்றும் வடக்குத் தேர்தல் தினத்தன்று மாத்திரம் அப்பகுதிகளில் 37 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் 'கபே' அமைப்புத் தெரிவித்துள்ளது.

அதன்படி யாழ்ப்பாணத்தில் சட்ட விரோதப் பிரசார நடவடிக்கைகள் ஆறும், பொலிஸ் நடவடிக்கை எடுக்காத சம்பவம் ஒன்றும், தேர்தல் சட்டங்களை மீறிய சம்பவம் ஒன்றுமாக எட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

வவுனியாவில் மூன்று தாக்குதல் சம்பவங்களும், ஓர் அச்சுறுத்தல் சம்பவமும், நான்கு சட்டவிரோதப் பிரசாரநடவடிக்கைகளும் என எட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

அதேபோல் ஊவா மாகாணம், பதுளை மாவட்டத்தில் தாக்குதல் சம்பவங்கள் இரண்டும், அச்சுறுத்தல் சம்பவங்கள் மூன்றும், சட்டவிரோதப் பிரசார நடவடிக்கைகள் ஐந்தும், நடவடிக்கை எடுக்காத சம்பவம் ஒன்றுமாக பதினொரு சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

மொனராகலை மாவட்டத்தில் சட்ட விரோதப் பிரசார நடவடிக்கைகள் ஆறும், தேர்தல் சட்டங்களை மீறிய சம்பவங்கள் ஆறும், பொலிஸ் நடவடிக்கை எடுக்காத சம்பவம் ஒன்றுமாக பத்து சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று 'கபே' அமைப்புத் தெரிவித்துள்ளது.

இதற்குப் புறம்பாக தேர்தலுக்குப் பிந்திய வன்முறைச் சம்பவம் ஒன்றும் பதுளையில் இடம்பெற்றுள்ளது என்று 'கபே' அமைப்புத் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலைப் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவின் 'நியூஸ் எக்ஸ்' தொலைக் கட்சி சேவைக்கு வழங்கிய பேட்டி ஒன்றி லேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப் பிட்டிருந்தார்.

அவர் தனது பேட்டியில் தெரிவித் தவை வருமாறு:-

கே.பி.கைதுசெய்யப்பட்டுள்ளமை இலங் கையைப் பொறுத்தவரை மிக முக்கியமான விடயம். விடுதலைப் புலிகளால் எவ்வாறு இவ் வளவு பெருமளவு நவீன ஆயுதங்களை வெளி நாடுகளிடமிருந்தும், புலம் பெயர்ந்த தமி ழர்கள் ஏனைய தரப்பினரிடமிருந்தும் பெற முடிந் தது என்பதை அறிவதற்குஇது பெரிதும் உதவும்.

### நிதி வலையமைப்பை அழிக்க வேண்டும்

விடுதலைப் புலிகளின் சர்வதேச நிதி வலையமைப்பை அழிப்பதற்கு சர்வதேச சமூ கம் இலங்கை அரசுக்கு உதவவேண்டும்.

பயங்கரவாதம் இலங்கை மட்டம் எதிர் கொள்ளும் விடயமல்ல. இது முழு உலகிற்கு மான பிரச்சினை.பயங்கரவாதம் குறித்து கருத் துத் தெரிவிக்கும் நாடுகள் அனைத்தும் இதனைத் தடுத்து நிறுத்த ஒன்றுபட வேண்டும்.

ஐரோப்பாவில் சில நாடுகளில் விடுதலைப் புலிகள் இன்னமும் தீவிரமாக செயற்படுகின்றனர்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்நாட்டில் உருவாக்கப்பட்டதாக அமையும்.

### சிறுபான்மையினருடனும் மாகாணங்களுடனும் அதிகாரப் பகிர்வு

வெளிநாடுகளிலிருந்து முன்வைக்கப் படும் தீர்வுகளை அடிப்படையாகக் கொண்ட தாக அமையாது.

அதிகாரப் பரவலாக்கலை நிறைவேற்ற லாம். எமது அரசமைப்பிலேயே அது உள்ளது.

சிறுபான்மை சமூகங்களுடனும் மாகா ணங்களுடனும் அதிகாரங்களைப் பகிர்வதற் காகப் புதிய சபையை அறிமுகப்படுத்தவுள் ளோம்.

சமஷ்டி என்பதற்கு இலங்கையில் இட மில்லை. நாங்கள் சமஷ்டி குறித்துப் பேசவில்லை.

இந்திய அரசு கவலை தெரிவித்துள்ள போதிலும் அபிவிருத்திக்காக சீனா, பாகிஸ் தான் போன்ற நாடுகளிடம் இலங்கை தங்கி யிருக்க வேண்டியுள்ளது - என்றார். (அ-சி)

## மலையகத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

25 வீதத்திற்கும் குறைவான வாக்களிப்பே பதிவாகியுள்ளது.

ஊவா மாகாண சபைத் தேர்தலைப் பொறுத்தவரை ஆயிரக்கணக்கான மலையக மக்களிடம் தேசிய அடையாள அட்டை கள் இருக்கவில்லை. தேசிய அடையாள அட்டை கள் இல்லாமையால் அவர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்படவில்லை.

ஆனால், கிராம சேவகர், தோட்டத்து ரைமார் ஆகியோர் வழங்கும் தற்காலிக அடையாள அட்டைகள், வாகன சாரதி அனு மதிப்பத்திரங்கள் மற்றும் கடவுச்சீட்டுகள் போன்றவற்றைப் பயன்படுத்தி தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி, வாக்களிப் பில் கலந்துகொள்ளலாம் என்று தேர்தல்கள் செயலகம் அறிவித்திருந்தது. ஆனால், அவையும் வாக்களிப்பு நிலையங்களில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

யாழ்.,வவுனியா தேர்தல்களில் அதிக மக்கள் வாக்களிக்க வந்தனர். தேசிய அடை யாள அட்டைகள் இல்லாமையால் திருப்பி யனுப்பப்பட்டனர். இதன் காரணமாகவும் அங்கு வாக்களிப்பு வீதம் குறைந்தது.

அவர்களுக்குத் தேசிய அடையாள அட்டைகள் வழங்குவதற்கு உரிய நடவடிக் கைகள் இதுவரை எடுக்கப்படவில்லை. இவ் வாறு வழங்காதிருப்பதன் மூலம் இம்மக்க ளின் வாக்குரிமை பறிக்கப்பட்டுக்கொண்டு வருகிறது. எல்லாத் தேர்தல்களிலும் இதே நிலைதான்.

இதேவேளை, வடக்குத் தேர்தலில் அதிகமான வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள் ளன. அங்கு மக்கள் எப்படி வாக்களிப்பது என்று தெரியாமல் உள்ளனர். வாக்களிப்புக்கு முன் னதாக வாக்களிப்புப் பற்றி அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பது அவசியம் - என்றார்.

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபையின் தலைவரைத் தெரிவு செய்வர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்த லில் தமிழரசுக்கட்சி இரு போனஸ் ஆசனங் கள் உட்பட ஐந்து இடங்களைக் கைப்பற்றி யுள்ளது.

சபையின் விருப்பு வாக்குப் பெற்றோர் விவரம் வருமாறு :-

தமிழரசுக்கட்சி

முத்துச்சாமி முகுந்தரன் - 2,551, இரத்தினசிங்கம் சிவகுமாரன் - 1,105, எஸ்.என்.ஜி. நாதன் - 1099, செல்லத்துரை சுரேந்திரன் - 858, ஜயாத்துரை கனகையா - 791

புளொட்

தா.லிங்கநாதன் - 2,958, சுந்தரம் குமார சாமி - 962, கந்தசாமி பார்த்தீபன் - 834.

ஐ.ம.சு.கூட்டமைப்பு

முகமது சரீப் - 2270, தம்மிக்க லலித் ஜெயசேகரா - 952.

முஸ்லிம் காங்கிரஸ்

மொஹமட் முனாபர் - 665 (அ-1)

## ஊவாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடந்து முடிந்த ஊவா மற்றும் வடக்குத் தேர்தல்களில் அரசு பாரிய மோசடிகளில் ஈடுபட் டது. அரச சொத்துகளையும் ஜனா திபதியின் நிறைவேற்று அதிகாரத்தையும் பயன்படுத் தியே அரசு இத் தேர்தலில் வெற்றிபெற்றது.

இந்த அராஜகத்திற்கு மத்தியிலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்த மக்களுக்கு நாம் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

### தேர்தல் சட்டங்களை மதிக்காமல் செயற்பட்டே அரசு வென்றது

தேர்தல் காலத்தின்போது காணி மற்றும் வேலைவாய்ப்புகள் போன்றவற்றை அரசு சிலருக்கு வழங்கியது. இவற்றை வழங்கி அரசு மக்களை ஏமாற்றியது. தேர்தல் காலங் களில் தேர்தலைக் குறிவைத்து இவ்வாறு சலுகைகளை வழங்கிச் செயற்பட முடி யாது. ஆனால், அரசு தேர்தல் சட்டங்களை யெல்லாம் மதிக்காமல் செயற்பட்டது.

அரசின் அராஜகம் காரணமாகவும் அரசின் மீது மக்களுக்கு இருந்த வெறுப்புக் காரணமாகவும் யாழ்ப்பாணத்தில் 80 வீதமான மக்களும், ஊவாவில் 50 வீதமான மக்களும், வவுனியாவில் 30 முதல் 35 வீதம் வரையி லான மக்களும் வாக்களிக்கவில்லை.

மோசடிகள் செய்து வெற்றிபெறுவதற் காகவே அரசு இவ்வாறு துண்டு துண்டாகத் தேர்தல்களை நடத்துகின்றது. தென்மாகாண சபைத் தேர்தல் மாத்திரம் இப்போது எஞ்சியுள்ளது.

தென்மாகாண சபைத் தேர்தல் முடிந்ததும் அரசு நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என்று நாம் அரசிடம் கோரிக்கை விடுக்கின்றோம். இக் கோரிக்கையை ஒரு சவாலாக ஏற்று அரசு செயற்பட வேண்டும்.

அரசு துண்டு துண்டாகத் தேர்தல்களை நடத்தியபோதும் மக்களுக்கு எதுவித சேவை களையும் செய்யவில்லை - என்றார். (அ-சி)

## வடக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா ஆகியவற்றுக்கான தேர்தல்கள் ஆளும் கட்சிக்குக் கிடைத்துள்ள வெற்றிகள் எமது இந்த தாய் நாட்டை நேசிக்கும் மக்களுக்கு கிடைத்த பெரு வெற்றியாகும்.

பதுளை, மொனறாகல, யாழ்ப்பாணம், வவு னியா மக்களுக்கு நன்றி கூறுகிறேன்.

நாட்டை மீள ஐக் கியப்படுத்த வேண் டும்என்றுநான்விடுத்த வேண்டு கோளை நான்கு மாவட்ட மக்க ளும் ஏற்றுக் கொண் டுள்ளார்கள் என்பத னைத் தேர்தல் முடிவு கள் எடுத்துக்காட்டு கின்றன -என்று ஜனா திபதி தமது விசேட செய்தியில் தெரிவித் துள்ளார். (அ-1)

## தற்கொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்கொலைக்குண்டு தாரியாக நகருக்குள் ஊடுருவியுள்ளார் எனத் தகவல் கிடைத் துள்ளது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, பழைய சோனகத் தெருப் பகுதியில் இவர் அடிக்கடி நடமாடுவதாகவும்.

இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் உடன் தங்களுடன் தொடர்பு கொள்ளு மாறு பயங் கரவாதத் தடுப்புப் பிரிவினர் பொதுமக்க ளைக் கேட்டுள்ளனர். (அ-சி)

## சவூதியிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பதாக கறுவாஞ்சிக்குடி பொது சுகாதாரப் பரிசோதகர் யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இவர்கள் தொடர்பான விவரங்கள் தொற்று நோயியல் நிபுணர்களுக்கும் அறிவிக்கப்பட் டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் கள் இலங்கை திரும்பிய போது அங் கொடை வைத்தியசாலையில் காய்ச்சலுக்கான சிகிச்சை பெற்ற பின்னர்தான் அவர்களது சொந்த ஊருக் குச் சென்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ்.நகரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற யாழ். மாநகர சபையின் தேர்தலில் ஈ.பி.டி.பி. கட்சி இணைந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 13 ஆச னங்களைப் பெற்று ஆட்சியைப்பிடித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டு கூடுதல் விருப்பு வாக்குப் பெற்றவர்களின் விவரங்கள் நேற் றுக் காலை தேர்தல் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டிருந்தன.

புதிய மேயர் தொடர்பாகவும் உறுப்பினர் கள் எப்போது பதவியேற்பது என்பதும் குறித் தும் கட்சியின் உயர்மட்டம் தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருக்கின்றது. ஓரிரு தினங்களில் இவை குறித்து முடிவுகள் அறிவிக்கப்படும் என்றும் கட்சி வட்டாரங் கள் மேலும் தெரிவித்தன.

விருப்பு வாக்கு அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களில் இருந்து கட்சி ஒருவரை மேயராக நியமிக்கும் என் றும் அதே வட்டா ரங்கள் மேலும் கூறின.

**Spoken English & Grammar**
அன்றும் இன்றும் என்றும் யாழ்.நகரில்
For: O/L, A/L, Higher Education,
School Leavers, வெளிநாடு செல்லவுள்ளோர்
Cambridge ESOL Exams (KET,PET)
காலம்: 1 மாதம் - தினசரி 2 hrs. class
By: Mr. B. Ruban
(A/L English Teacher & BBA)
ஆரம்பம்: 12.08.2009 (JTI - Jaffna - 11 am/
திரு - கோண்டாவில் - 9 am/
திகழ் - இணுவில் -3 pm)
sales: English Grammar Book (Rs:150)
Printed Essays, Letters, Exercises
(வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும்)
T.P: 0779785749 / 0602218931 / 0718561532

**SUBRA - (14)**
(சித்தன்கேணி)
CHEMISTRY - 2011 A/L
இரசாயன கணிப்புக்கள்
Mon, Wed, Fri - (3.30 - 4.30) P.m
சேதன இரசாயனம்
Mon, Wed, Fri - (6 - 7) P.m
அணுவின் கட்டமைப்பு
Sat, Sun - (6.30 - 8) A.m.
ஆரம்பம்: 10.08.2009 (திங்கள்)
By: Rajah


**கணக்கீடு**
P.பகீரதன் B.B.A(Fin Spl)
A/L 2010
கிரய கணக்கீடு
Mon, Tue, 8 - 10 A.m
கம்பனி
Wed, Fri - 8 - 10 A.m
ஆரம்பம்: 11.08.2009 (Tue)
A/L 2011
தொங்கல் கணக்கு
Mon, Wed, Fri 10 - 11
ஆரம்பம்: 12.08.2009 (Wed)
NEC

**MOON STAR நிறுவனத்தில்**
சுயதொழில் பயிற்சி புதிய பிரிவுகள் ஆரம்பம்.
★ தையல் பயிற்சி
★ அழகுக் கலை
★ கேக் ஐசிங்
★ மணப்பெண் அலங்காரம்
★ கூந்தல் அலங்காரம்
★ பேசியல்
★ சாறி வேக்ஸ்... இவற்றுடன் -
★ ஆங்கில, சிங்கள வகுப்புகள்.
★ பாடசாலை மாணவர்கள்
★ பல்கலைக்கழக மாணவர்கள்
★ அரச, தனியார் உத்தியோகத்தர்களுக்கான தரப்படுத்தலில் - வார நாள்கள், சனி, ஞாயிறு தினங்களில் காலை, மாலை கற்பிக்கப்படும்.
★ பதிவுகளுக்கு முந்துங்கள் விண்ணப்பங்களை அனுப்பிவைக்க வேண்டிய இறுதி நாள் 20/08/2009
MOON STAR
118, பலாலி வீதி, திருநெல்வேலி. பணிப்பாளர்.

**THE SCIENCE CORNER**
CLOCK TOWER LANE, JAFFNA
CHEMISTRY - 2011 A/L (TAMIL MEDIUM)
இரசாயன கணிப்புக்கள்
Mon, Wed, Fri - (6.30 - 7.30) A.m.
சக்தியியல்
Sat, Sun - (4.30 - 5.30) P.m.
அணுக்கட்டமைப்பு
Sat, Sun - (11.30 - 12.30)
ஆரம்பம்: 12.08.2009 (புதன்)
By: Rajah

**3 ஆம் தவணைக்கான வகுப்புக்கள்**
ஆரம்பம் :- 10-08-2009 (திங்கள்)
தரம் 1 முதல் O/L வரை.
★ புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
நாவலர் NAVALAR
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**SAKTHIMICRO SYSTEM**
Chankaththanai, Chavakachcheri, 0602734090, 0776102609
ICT-10, ICT-11, MS Office
DTP, GIT, Hardware
Multi Media, Video Mixing.
புதிய அனுமதிகளுக்கு 2GB Pen Drive இலவசம்
அனைத்து வகையான கணனி பாகங்களும் குறைந்த விலையில்
Processor, Motherboard, VGA, HardDisk, DVD Writer, Monitor, RAM, Keyboard, Optical Mouse, UPS
Flash 2GB. (Kingston) Original
சாவகச்சேரியில் முதன்முதலாக வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவினருடன் குறைந்த கட்டணத்தில் முகம் பார்த்துக் கதைப்பதற்கு.
(Video Conferencing)
குறைந்த கட்டணத்தில் இணையத்தில் உலா வருவதற்கு.
Home + for home Use
Processor - Core 2 - 2.0Ghz
Motherboard - Core 2 Support.
RAM - 1GB
VGA - 128Share
HardDisk - 160GB
DVD Writer
Monitor - 15" ViewSonic LCD
Multi Media Keyboard
Optical Mouse
1-3 வருட உத்தரவாதம், உத்தரவாத அட்டை.
39,000 /=
2GB Flash, Dust Cover
2.1 Woofer FREE
பழைய கணனியை மாற்றி 20% விலைக் கழிவுடன் புத்தம் புதிய கணனியை எடுத்துச் செல்லுங்கள்.






**வெற்றித்தேர்வு இறுதிப்பரீட்சை**
2009 தரம் 5 இறுதிப்பரீட்சை 20 இன்று
பாடசாலையில் பரீட்சை எழுதாத மாணவர்கள்
நல்லூர் சயன்ஸ் அக்கடமியில் பரீட்சை எழுதலாம்



வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க
T.V.S. தயாரிப்பான Scooty pep+ மீண்டும்
மற்றும் Scooty Streak விற்பனையில்
யசோ மோட்டோர்ஸ்
163, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 7566



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெற் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.08.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.